www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
நவம்.14-20.1993 ரூபா 8/50
දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 25

வாவ்...வாவ்

25





பெண் புலிகளும் இழப்புக்களும்

கிழக்கில் தேர்தல்
ஏற்படுத்துமா
மா
ற்
ற
ம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

ரசிகனின்
குறுநாவல்
இலவச இணைப்பு

சென்றுவா மார்டினா
வென்றுவா மோனிகா

ஸ்போர்ட்ஸ்

லேடீஸ் ஸ்பெசல்

உலக ரவுண்டப்

இலக்கியநயம்

சினிவிசிட்

பாப்பா முரசு



அதிசயங்களை அள்ளித் தரும் தகவல் பெட்டி

அறிய வேண்டிய மருத்துவ விந்தைகள்

கூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்.
25வது வெள்ளிவிழா
வாரம் இது.
இது நிச்சயம் ஒரு சாதனைதான்.
கர்வத்திலோ
தலையில் கனத்திலோ
சொல்லும் வார்த்தையல்ல.
வெளிவந்த குறுகிய காலத்தில்
முரசு
தனி முத்திரை பதித்திருக்கிறது.
தனக்கென்று ஒரு
தனிப்பாணி வகுத்திருக்கிறது.
அனைத்துக்கும் மேலாக
முரசை
வாஞ்சையோடு நேசிக்கும்
வாசக நெஞ்சங்களை
உரிமையாக்கிக்கொண்டிருக்கிறது.

யானைக்கும் அடி சறுக்கும்.
நாம் சாதாரணமானவர்கள்.
அடிக்கடி கூட சறுக்கி விழக்கூடும்.
விழுந்துவிடாமல்
அன்போடு அணைத்து
உரிமையோடும் உள்ளன்போடும்
தவறுகளை சுட்டிக்காட்டும்
வாசக நெஞ்சங்களை பெற்றுள்ளதால்
விழுந்துவிடாமல்
வெற்றிப்படிகளில் ஏற முடிந்திருக்கிறது.

இதுவரை ஏறியிருப்பது
25படிகள்தான்.
எனினும்
பிறந்தவுடனேயே வேகமாய்
நடக்கத் தொடங்கியதால்
கால்கள் சற்றே வலித்தன.
ஏன் வலிக்கவேண்டும்?
தூக்கியணைத்துச் செல்ல
நாங்கள் இல்லையா என்று
வாசக நெஞ்சங்கள் வாரியணைத்ததால்
வலிகள் பறந்தன.
சுமைகள் கூட சுகமாய் மாறின.
இன்னமும் எட்ட வேண்டிய
இலக்குகள் இருக்கின்றன.
ஏற்படுத்த வேண்டிய சாதனைகள்
எத்தனையோ இருக்கின்றன.

செய்திகளில்
பக்கச் சார்பின்மை பாதுகாக்கப்பட வேண்டும்.
அதே சமயத்தில்
நடுநிலை என்று தப்பிக்கொள்ளாமல்
தக்க நியாயங்களை
எடுத்துச் சொல்லவும் வேண்டும்.
இரண்டுமே-
இரு மலைகளைச் சுமப்பது போன்ற
கஷ்டமான வேலைதான்.
உண்மைகளைச் சொல்வது
இங்கு
மக்களுக்குப் பிடித்தனமானதாக இருக்கலாம்.
மக்களை
மேய்பவர்களாகவே
இருக்கவிரும்புகின்ற எவருக்கும்
பிடித்தனமானதாக இல்லை.
அதுதான்-
படித்தவுடன் கோபப்படுகிறார்கள்.
பத்திரிகைகள் மீது பாய்கிறார்கள்.

ஆயுதங்கள் பேசும் பூமியில்
நியாயங்களுக்கு
மதிப்பும் இல்லை. பெறுமதியும் இல்லை.
எனவேதான்
நடுநிலை என்ற போர்வைக்குள்
தப்பிக்கொள்ளுவதும்
உயிர் வாழ்தலின் பொருட்டு
உண்மைகளை பேசாமல் இருப்பதும்
வாழும்முறை,
எழுதும் முறை, பேசும் முறை
என்றாகிக்கொண்டிருக்கிறது.

எனினும்-முரசு
அம்பலப்படுத்த வேண்டிய விசயங்களை,
வெளிப்படுத்த வேண்டிய விசயங்களை
வெளிப்படுத்தத் தயங்காது.
உரத்த நியாயங்களை
உறுதியோடு சொல்லப் பின் நிற்காது.

ஜனநாயகம்,
வெளிப்படைத்தன்மை,
உள்ளதை உள்ளபடி சொல்லுதல்
என்பவற்றில்
முரசு முழுக்கவனம் கொள்ளும்.
இனிவரும் முரசுகள்
அந்த வழிமுறையை மேலும்
வலுப்படுத்தும்.

அதற்கு-பின் பலமாய்
உந்துதலாய்-உற்சாக அரவணைப்பாய்
வாசக நெஞ்சங்கள்
கிடைத்திருப்பதால்
சாதிக்கும் நம்பிக்கை இருக்கிறது.

ஏறிவந்த ஏணிகளை-
ஏற்றிவிட்ட அன்புக்கரங்களை-
வளர்த்துவிட்ட வாஞ்சையுள்ளவர்களை
என்றும் முரசு மறக்காது.
முரசின் வளர்ச்சி என்பது
ஒரு கூட்டு முயற்சி
என்பதிலும்
மறுபேச்சுக்கே இடமிருக்காது.

நல்லது! நாம் தொடர்ந்து முன் செல்வோம்.
யாரையும்
தொழுது பின் செல்லோம்.
கைகளை குலுக்கிக்கொள்வோம்.
தொடர்ந்து
வெற்றிப்படிகளில் மேல் செல்வோம்.
பனித்துளியோடு இருக்கின்ற
பூவைப்போல
என்றும் நம் நேசங்கள்
இனிதாய்-புதிதாய்-மகிழ்வாய்.....

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்.

தினமுரசு
போன்: 820265-

## கவிதைப்போட்டி இல-22

### பாராட்டுக்குரியவை

"விலகுங்கள் உடையட்டும்"
தளைகளைத்
தறித்தெழு
விடுதலை உயிர்த்திடும்
மனம் தனில்
துணிவினை வளர்த்திடு
விலங்குகள் உடையட்டும்.
ஷர்மி-கண்டி.

**அதே கரங்கள்**
சத்தியமாய் ஆ இது
சமாதானத்தின்
கரங்கள்தான்!
செ. ஜெயச்செல்வி
திருகோணமலை.

**புதியதொன்று**
நவீன
யுகத்தின்
விஷேட
சின்னம்!
மின்னா. ஏ. றசூல்
கல்முனை-14.

"விடுதலை விதை ஒன்று
விலங்குடன்
முளைக்கின்றது."
எஸ். என். ஆனந்தராஜ்.

**என்ன....இது?**
வட பகுதி
வன்முறைகாட்டும்
வரை படமா!
அல்லது....,
வாடிப் போகும்
வசந்த
மலர்களின்
உறைவிடமா..?
ஆலம்குளத்தூர்
ரோஷான் ஏ. ஜிப்ரி.

இன்றைய கொடுமை
நேற்றும் நடந்தது
என்பதைக் காட்டும்
நினைவுச் சின்னம்.
எல். யசோதா
நாவலப்பிட்டி.

"இன்றைய
மனித உரிமைகளின்
மாதிரி வடிவம்?"
எஸ். செயினுல் ஹசன்
கிண்ணியா-07.

விலங்கிட்ட
சுதந்திரம்.
என்றும்,
நிரந்தரமா?
இளைய மகள்
களுத்துறை (தெற்கு)

நாங்கள்
சுதந்திர நாட்டு
அடிமைகள்
இங்கு கட்டப்பட்டது
எங்கள்
கைகள் அல்ல!
கலா-முகம்மது நவாஸ்
கிண்ணியா-05.

மனித விலங்கு
மனிதத்திற்கு
விலங்கிட்டது!
ஐ. என். எம். நிஹ்ரீர்
புத்தளம்.

**ஜனநாயகம்**
சிலையாகிப் போனது நிகழ்கால
ஜனநாயகம்
உருவாகி வருவது எதிர்கால
அராஜகம்.
பிறேமலதா-நாவலப்பிட்டி.

ஓ!
இவைகள்
அராஜகத்துக்கெதிராக
போர்க்கொடி
தூக்கிய
கரங்களோ?
சிராஸா பானு
கெக்கிறாவ.

**நிச்சயம்**
விதிகள் மாறும்
வீழ்ந்த மானுடம் தேறும்
விலங்கிட்ட கைகள்
வீழும் நிச்சயம்
மெக்டலின்
அக்கரைப்பற்று-09.



## கவிதைப் போட்டி இல-25



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். தபாலட்டையில் உங்கள் உணர்வினைப் பொறித்து எமக்கு அனுப்புங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.11.1993.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 25
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

வந்து குவிந்த கவிதைகளில் வெற்றிக்கனி பெற்ற கவிதையும்- வியந்துகொள்ள வைத்த கவிதைகளும்!

### பரிசுக்குரிய கவிதை

சமாதானத்தின் கைகள்,
கட்டப்பட்டது தெரியும்.
எப்போது சிலைவைக்கப்பட்டது?
முத்துக்குமார் ரமேஷ்
கொழும்பு-15.

மனிதனுக்கு....
விலங்குபோடும்
மனிதனும்
விலங்குதானே!
கே. கோவிந்தராஜ்
வாழைச்சேனை.


**அடையாளம்**
அமைதியை
நிலைநாட்ட
தீவிரவாதம்
விலங்கிடப்படுகிறது.
எம். டி. எம். சைலாஸ்
கம்மல்துறை.

**நாமாவது......**
கவிஞர்களே!
கொஞ்சம்
சேருங்களேன்....
சமாதானத்தின்
கரங்களை
நாமாவது
சுழற்றிடுவோம்
கவிதைகளால்.
எஸ். ரோஜா
மட்டக்களப்பு.

**கலியுகம்**
கரங்களையும்
கட்டிவிட்டு
சமாதானக்
கதவையும்
தட்டச்
சொல்கிறதோ
கலியுக சாசனம்.
ச. மு. சக்கீல்
தெஹிவளை.

**கடுகதி**
சமாதானத்தின்
கரங்கள்
கட்டப்பட்டதால்
கடுகதியானது
கலவரங்கள்தான்.
ஆ. விஜிதா
கல்முனை-2.

# வாசக(ர்)சாலை



தொடரட்டும் பவனி
முரசு 25 வாரங்களில் எங்களை பிரமிக்க வைத்துவிட்டது என்றால் அது மிகையில்லை. இன்னும் இன்னும் வித்தியாசமான செய்திகள் அம்சங்கள் மூலம் வெற்றிப் பவனி வர வாழ்த்து கிறோம்.
**ஆர். லோறன்ஸ் தம்பதி-நீர்கொழும்பு.**

•

முரசு வந்த பின்னர் இலங்கைத் தமிழ் பத்திரிகை உலகில் கலகலப்பு ஏற்பட்டுவிட்டது. மாற்றங்களும் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. எப்போதும் அரசியல் திருகுதாளங்களை முரசு சுட்டிக்காட்ட வேண்டும் என்பதே எமது அவா.
**வீ. தம்பிராசா-மட்டக்களப்பு.**

•

அரசியல் அலசல் பலே. ராஜதந்திரிக்கு எனது பாராட்டுக்களை தெரிவியுங்கள். ராஜதந்திரியும் இரண்டெழுத்துக்காரரோ? அய்யாத்துரையாருக்கு அவரில் ஏன் கோபம். முரசில் என்றாலும் ஜனநாயகம் வாழ்வதில் சந்தோசம்.
**அ. கணேசமூர்த்தி-கொழும்பு-07.**

•

அதிரடி அய்யாத்துரையார் எவரையும் விட்டுவைக்கமாட்டார் போல் இருக்கிறதே. ராஜதந்திரியும்-நாரதரும் கவனமாக இருக்கவேண்டும்.
**என். பிலோமினா-கண்டி.**

•

அன்பு முரசே
நீ என் இதயத்தில் நீங்காத இடம் பிடித்துவிட்டாய். காரணம் நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் வசந்த மலர்கள். என்றும் நீ வளம் பெற என் வாழ்த்துக்கள். வாழ்க வளர்க தமிழ் முரசே!
**ஏ. எல். பாயிஸ்-தோப்பூர்.**

•

கடந்த வார தேன்கிண்ணம் தந்த சிறப்பான கவிதைகளை -இல்லை இல்லை. தெவிட்டாத தேனை சுவைத்துச் சுவைத்துக் குடித்தேன். யாரது சொல்லாமல் "மதுமிதாவை" எழுதிவருவது? தெரியாத உள்ளங்கள் ரசிகனைத்தேடுதே.
**செல்வி. சரவணேஸ் டெயிசி-கலவானை.**

•

என் அன்பின் தினமுரசே!
உன் வரவை எதிர்பார்த்து ஏங்கித் தவிக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களில் நானும் ஒருவன். நல்லிதயங்களில் நன்மதிப்பைப் பெற்று விட்ட நீ நீடுழி காலம் வாழ வாழ்த்துகின்றேன்.
**எஸ். ஐ. நிலாம்தீன்-கம்பிரிகஸ்வெவ.**

அன்பின் தினமுரசே!
உன் அழகிய பல கதைகள் என் மனதைக் கவர வைக்கிறதே. வாரம் தோறும் உன்னை சுவைக்காவிட்டால் ஏக்கம் வருகிறது. நீ வாரி வழங்கும் ஆக்கம் அனைத்தும் சுவையிலும் சுவை.
**செல்வி. எம். பீ. பர்ஸானா-கதுருவெலை.**

•

புதுமைப் பெண்ணைப் போல் பூத்துக் குலுங்கும் தினமுரசே! என் நிம்மதியான வாழ்க்கைக்கு அத்திவாரமே. நீ உலகமெங்கும் புகழ் மணம் பரப்பி உன் சேவையை அனைவருக்கும் வழங்க என் 'வாழ்த்துக்கள்.
**இராஜு ஜெயசீலன்-அக்கரபத்தனை.**

•

சூடான, மிக இதமான, நல் சுவையான, உயர் தரமான அம்சங்களை வஞ்சமின்றி அள்ளித்தந்து என் நெஞ்சமதை கொள்ளை கொண்டாய் தினமுரசே! நீ ஓர் அரசே..!
ஆர்வத்தை தூண்ட ஒரு கவிதைப் போட்டி தவறாது தருகிறாய்...வாவ்....
நீ என்றும் வாழ வேண்டுமே.
உன் சேவை ஒன்றே போதுமே
அதுதான் இன்பமே
என் இ.....ன்..ப....மே!
**பி. ராணி-பொல்கஹவளை.**

•

என் இதய மலரே
உன் தோட்டத்தில் தேன் அருந்த
புதிதாக வந்த வண்டு நான்.
சில வாரங்களாக சுவைக்கிறேன்
சுவையோ எல்லையில்லா இனிமை
சுவைதரும் பலனோ அதிலும் இனிமை.
**ஆர். மீனலோஜினி-களுவாஞ்சிக்குடி.**

•

சிரிக்க, சிந்திக்க, சிந்தையைக் கவரும் சிறந்த பல கதை, கவிதை, உட்பட இன்னும் பல சுறுசுறுப்பான அம்சங்களை திரட்டி உனது முரசில் சேர்த்து வழங்கி வாசகர்களின் மனதெனும் மாளிகையைக் கொள்ளை கொண்ட தினமுரசே. நீ நீடுழி காலம் பெருவாழ்வு வாழ, எனது வாழ்த்துக்கள்.
**இம்டியாஸ் மும்தாஜ்-பேருவளை.**

•



திருஷ்டி படுமோ
தித்திக்கும்
எம் தினமுரசே!
உனக்கு
திருஷ்டி சுத்திப்
போடவேண்டும்.
ஏனென்றால்....
உன் மீது பாசக்கண்கள்
படுவதால் அல்ல
நாணக்கண்கள் பட்டு
ஏதும் நடந்துவிடக்கூடாதே என்றுதான்.
**கந்தையா காந்தரூபன்-பூண்டுலோயா.**

•

அண்மைக்கால தினமுரசின் வாசகிகளில் நானும் ஒருத்தி என்பதைக் கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன். தரமான அம்சங்களை பிரசுரிப்பதில் முரசிற்கு நிகர் முரசுதான். எங்கள் பகுதிகளில் முரசு வெள்ளிக்கிழமை களில்தான் கிடைக்கின்றது. அதுவும் சற்று தாமதமானால் முரசை தேடி அலைய வேண்டியுள்ளது.
**கலைவாணி சன்முகம்-மஸ்கெலியா.**

•

தினமுரசின் முன் அட்டையில் சத்தியராஜின் வண்ணப் படத்தைப் பிரசுரித்ததற்கு எனது மனமார்ந்த நன்றிகள். சத்தியராஜின் வண்ணப் படம் வராதோ என்று ஏங்கித் தவித்த எனக்கு தினமுரசு மூலம் என் ஆவவலைப் பூர்த்தி செய்து விட்டீர்கள்.
**பதுறுநிஸா முபயிதீன்
புதிய காத்தான்குடி.**

•

வாழ்த்துப் பா பாடுதற்கு
வயசெமக்கு இல்லை முரசே!
வாரம் ஒரு முறை நீ எமை
வலம் வந்தாலும்
வாசகராம் எம் நெஞ்சை
வாரியே சென்று விடுகிறாய்!
ஊர் முழுதும் உன் புகழ் மணக்க
வாழ்த்துகின்றோம்.
**ஜ. இளங்கோவன்,
தமிழ்வண்ணன்-இரத்தினபுரி.**

•

வருத்தம்
தினமுரசே!
நான் கொழும்பில் உள்ள போது வியாழன் விடிந்ததும் உன் முகத்தில் முத்தமிட்டபின்தான் காரியாலயம் போவேன். ஆனால் நான் சென்ற கிழமை விடுமுறையில் போயிருந்தேன். ஞாயிறு விடிந்தும் உன் முகத்தில் முத்தமிட முடியாமல் போய்விட்டதே. ஏன்! நீ அங்கு போகத் தாமதம் ஆகின்றாய். அக்குறையினை என்னால் ஒரு போதும் நிவர்த்தி செய்ய முடியாதே.
**பாலமுனை வாஹிட்.**

•

என் இனிய முரசே! இதய முரசே! உன் தரமான பல்சுவை அம்சங்களில் பற்றுதல் கொண்டு, உன் வரவுக்காக பஸ் வரும் வரை பார்த்துக் காத்திருப்பேன். கால தாமதமானாலும் காரிகையே உனை கைப்பிடிக்க நான் மறவேன்.
**சோ. செல்வராணி-பெமுள்ள.**

•

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பாடசாலைகளில் வீடியோ படக்காட்சிகள்! மூலை முடுக்கெங்கும் யுத்தகாலக் கருத்தரங்குகள்!!

## ஆள்சேர்ப்பு நடவடிக்கையில் புலிகள் தீவிரம்



புலிகளால் உருவாக்கப்பட்டுவரும் துணைப்படையில் சேர்க்கப்பட்டவர்கள்.

(யாழ் நிருபர் வர்மா)

யாழ் குடாநாட்டில் புலிகள் அமைப்பினர் ஆள் சேர்ப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகளில் வகுப்பு நேரங்களில் வரும் புலிகள் வீடியோ படங்களை திரையிடுகின்றனர்.

புலிகள் அமைப்பினரால் மிகச் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட அந்த வீடியோப் படங்கள் உணர்ச்சிகரமானவையாக இருக்கின்றன.

போருக்கான அவசியத்தையும், புலிகள் அமைப்பினரோடு அனைவரும் சேரவேண்டும் என்பதை வலியுறுத்தும் கருத்துக்களையும் மையமாக வைத்து அந்த வீடியோப் படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சமீபத்தில் நடந்த மிக முக்கியமான தாக்குதல்கள், யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது புலிகள் அமைப்பினர் நடத்திய எதிர்த்தாக்குதல்கள் என்பனவும் வீடியோப் படங்களாகக் காட்டப்பட்டு வருகின்றன.

யுத்தம் நெருங்கிவருகிறது. இன்றோ நாளையோ யுத்தம் வெடிக்கலாம் என்று புலிகள் அமைப்பினர் தமது பிரச்சாரங்களில் கூறிவருகின்றனர்.

யாழ்குடாநாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் போர்க்காலக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன.

வயது வேறுபாடின்றி அனைவரும் தம்மோடு இணையவேண்டும் என்று கூறும் புலிகள் அமைப்பினர் வயதானவர்கள் தமது துணைப்படைகளில் சேர்ந்து கொள்ளலாம் என்றுஅறிவித்துள்ளனர்.

இதே வேளை இம்மாதம் 26ம் திகதியில் இருந்து மாவீரர் தினக் கொண்டாட்டங்களை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.


யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், முல்லைத் தீவு பகுதிகளில் பந்தல்கள் அமைக்குமாறும், பதாகைகள் கட்டுமாறும் புலிகள் அமைப்பினர் கூறிவருகின்றனர்.

## பரவிவரும் தொற்று நோய்கள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

யாழ்குடாநாட்டில் கடந்த பத்து மாதங்களில் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தொகை பதின்மூவாயிரத்து முன்னூற்றி நாற்பத்தேழு பேர் என்று புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

இவர்களில் 10 வீதமானோர் மூளைக்காய்ச்சலை ஏற்படுத்தும் பல்சிபாளம் ஒட்டுண்ணியாலும், ஏனைய 90 வீதமானோர் பிளாஸ்மோடியம் வைரஸ் ஒட்டுண்ணியாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

## பிரபாவுக்கு மேலும் பாதுகாப்பு!



யாழ்ப்பாணம் கோப்பாயில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் திறந்து வைத்துள்ளார்.

நீண்டகாலத்தின் பின்னர் தனது மறைவிடத்தை விட்டு வெளியே வந்த புலிகளின் தலைவர் பலத்த பாதுகாப்பின் மத்தியில் அங்கு உரையாற்றினார்.

"இந்தச் சிறுவர்களை அநாதைகளாக, யாருமற்றவர்களாக நான் கருதவில்லை. இவர்கள் தமிழ் அன்னையின் புதல்வர்கள். எமது இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் இவர்களும் உறுப்பினர்கள்."

என்று பிரபாகரன் தனது உரையின் போது குறிப்பிட்டார்.

முன்பைவிட பிரபாகரனுக்கு தற்போது பாதுகாப்புக்கள் மேலும் அதிகமாக்கப் பட்டுள்ளன. முன்பு பிரபாகரனைச் சுற்றி 5 பாதுகாப்பு வேலிகள் இருந்தன. இப்போது பத்து பாதுகாப்பு வேலிகள் என்றளவில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

## தொண்டாவின் துரித முயற்சி! பலன் கிட்டுமா? தமிழ் பவனிவரு மா?

கம்பஹா மாவட்டத்தில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் அரச திணைக்களங்களில் சிங்கள மொழியிலேயே தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதால் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். இந்தத் துர்ப்பாக்கிய நிலையை திஹாரிய பொது நலப்பணிமனை அமைச்சர் தொண்டமான் அவர்களுக்கு சுட்டிக் காட்டியது.

"பணி மனையின்" முறைப்பாட்டை மேற்கோள் காட்டி அரச மொழி அமுலாக்கல் ஆணைக்குழு தலைவர் திரு. டெஸ்மண்ட் பெர்னாண்டு அவர்களுக்கு அமைச்சர் தொண்டமான் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் மட்டுமல்ல சகல மாவட்டங்களிலுமுள்ள அரச திணைக் களங்களிலும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளுவதற்குப் பொருத்தமான நடவடிக்கையைக் கவனத்துக்கு எடுத்து உத்தரவாத மளிக்குமாறு அமைச்சர் சௌ.மியமூர்த்தி தொண்டமான் கேட்டுள்ளார்.

அமைச்சர் தொண்டமானின் கோரிக்கையை ஏற்று துரித நடவடிக்கை எடுக்கப்படுமா? கம்பஹா மாவட்ட அரச திணைக்களங்களில் தமிழும் பவனி வருமா? பார்க்கலாம்.

## சுகாதாரச் சேவையின் சுறுசுறுப்பு போதுமா? கொளுத்தும் வெய்யிலில் காத்திருந்தோர் வெறுப்பு!

(நிந்தவூர் நிருபர்)



பச்சிளம் குழந்தைகளைக் கையில் ஏந்திய வண்ணம், கொளுத்தும் கொடும் வெய்யிலில் காத்து நிற்கும் தாய்மார்களையே இங்கு படத்தில் காண்கிறீர்கள்.

சிறு குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றுவதற்காக நிந்தவூர் அரசினர் வைத்தியசாலைக்கு கடந்தவாரம் திரண்டு வந்த தாய்மார், தடுப்பூசி ஏற்றும் வெளிக்கள குடும்பநல உத்தியோகஸ்த்தர்கள் (FIELD FAMILY HEALTH WORKER) வருகை தராமையால் பல மணி நேரம் குழந்தைகள் வீரிட்டு அழ காத்து நிற்கும் காட்சிதான் இது!

சுமார் நாற்பதாயிரம் மக்கள் வாழும் நிந்தவூர்ப் பகுதிக்கு நிரந்தர வெளிக்கள குடும்ப நல உத்தியோகஸ்த்தர் (பெண்கள்) ஒருவர் கூட இல்லையென்றால் நீங்கள் மூக்கில் விரலை வைப்பீர்கள். உண்மை அதுதான்!

சிலகாலமாக பதில் வெளிக்கள குடும்பநல உத்தியோகஸ்த்தர்கள் வந்து சிறு குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மாருக்கான தடுப்பூசி ஏற்றல், மற்றும் கிளினிக்குகளை நடத்தினார்கள். இப்பொழுது அவர்களும் வருகையை நிறுத்திக்கொண்டுள்ளார்கள்.

நிரந்தரமாகவும் யாருமில்லை, பதில் கடமைக்கு வந்தவர்களும் இல்லையென்றால் சிறு குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார் நிலை எப்படியாகும்!

இதே வேளை நிந்தவூர்ப் பகுதிக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றியவரும், நிந்தவூர் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அனுமதியின்றி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளாராம். அவரது இடத்திற்குப் புதியவர் எவரும் நியமிக்கப் படவுமில்லை.

மேற்படி நிலமைகளால் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் மாற்று நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிந்தவூர் சுகாதார சேவைகள் பணிப்பாளரும், பிரதம வைத்திய அதிகாரியுமான டாக்டர். ஜனாப்.ஏ.எல்.பரீத் மேற்கொண்டு வருகின்றார். எனினும், உடனடியாக வெளிக்கள குடும்ப நல உத்தியோகஸ்த்தர்களை நிந்தவூர்ப்பகுதிக்கு நியமிக்க சுகாதார அமைச்சு ஆவன செய்ய வேண்டுமெனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

அத்துடன் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட அல்லது புதியவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் கோரப்படுகின்றது.

## மயக்கநிலையிலும் அரைமணிநேரப் பிரசங்கம் 'வாரியார் தென்னிந்தியப் போப்' என்றது மருத்துவமனை



வாரியார் இவ்வருடம் இலங்கை வந்தபோது மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவோடு.

திருமுருக கிருபானந்த வாரியாரின் மறைவுச் செய்தி இந்துமத பக்தர்களை மட்டுமல்ல தமிழ் பேசும் மக்களையும் கவலைகொள்ள வைத்துவிட்டது.

வாரியாரின் சொற்பொழிவுகளில் இலக்கிய நயம் இருக்கும். இனிய தமிழ் நடை இருக்கும். அருவி எனப் பாய்ந்து வந்து சில்லென்று தழுவும் சுகம் இருக்கும்.

எனவே தமிழ் வளர்ச்சியில் வாரியாரின் பங்கும் பாரியதாய் இருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்களின் அழைப்பை ஏற்று அங்கெல்லாம் சுற்றுப் பயணம் நடத்தி சொற்பொழிவால் அவர்களை சொக்க வைத்தார். இறுதியாக இலண்டனில் இருந்த நேரத்தில் மயக்கமாகி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனையில் மயங்கியிருந்த நிலையில் கட்டிலில் கிடந்தபடி வாரியார் சுமார் அரை மணிநேரம் பிரசங்கம் செய்தார். மருத்துவர்களுக்கு ஆச்சரியம்.

தமிழக முதல்வரும், தமிழக ஆளுநரும் இலண்டன் மருத்துவமனைக்கு தொடர்பு கொண்டு அவருக்கு வேண்டிய சகல வைத்திய வசதிகளையும் செய்து கொடுக்குமாறு கூறினார்கள்.

"வாரியாரை தென்னிந்திய போப் என்று கருதியே தாம் சிகிச்சையளிப்பதாக" மருத்துவமனை வட்டாரங்கள் மரியாதையோடு குறிப்பிட்டன.

சிகிச்சையால் ஓரளவு தேறிய வாரியார் தமிழ்நாடு திரும்பும்போது விமானத்தில் மாரடைப்பால் மரணமானார்.

வாரியாரின் சொற்பொழிவுகள் இலங்கை மக்களுக்கும் விருப்பமானவை.

யாழ்ப்பாணத்தில் உள்ள கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் ஒரு மாதக் காலம்கூட வாரியார் தங்கியிருந்து பிரசங்கங்கள் நடத்தியதுண்டு.

வாரியாரின் மறைவு தமிழ் உலகுக்கு பேரிழப்பு.

## ஊதியமில்லாமல் சேவை! திருமலை பிரதேசசபை ஊழியர்களின் பரிதாபநிலை!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை பட்டணமும், சூழலும் என்ற பகுதிப் பிரதேச சபை ஊழியர்கள் தமது சம்பளத்தைப் பெறாமலே வேலை செய்யும் கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

நிதி இல்லை என்று காரணம் காட்டி அக்டோபர் மாதச் சம்பளம் எந்த ஊழியருக்கும் வழங்கப்படவில்லை. மாறாக சிறிய தொகையொன்று அட்வான்சாக வழங்கப்பட்டது.

கடந்த வருடம் பிற்பகுதியிலிருந்து இவ்வாறாகத் தொடர்ந்து பலமாதங்கள் ஊழியர்கள் சம்பளம் பெறாமல் வேலை செய்திருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது பற்றித் தினமுரசுக்குத் தகவல் தந்த ஊழியர்கள் பிரதேச சபை உறுப்பினர்களின் புத்திசாதுரியமற்ற தவறான நிதிக்கையாளுகையே வருடா வருடம் இப்பிரச்சனையைத் தோற்றுவிக்கிறது என்று தெரிவித்தனர்.

## சந்தேகத்துக்கிடமான பாய் கப்பல் பருத்தித்துறைக் கடலில்!

கடந்த 4ம் திகதி யாழ்ப்பாணம் பருத்தித்துறைக் கடலில் சந்தேகத்துக்கிடமான பாய்க்கப்பல் ஒன்று நடமாடியது.

கடற்கரையில் மக்கள் கூட்டமாக நின்று அதனை பார்வையிட்டனர். சில மணி நேரங்களின் பின் அந்த பாய்மரக் கப்பல் காங்கேசன்துறைப் பக்கமாகச் சென்றுவிட்டது என்று கூறப்படுகிறது.

## கிழக்கில் இராணுவ நிலைகள் பலப்படுத்தப்படுகின்றன!

கிழக்கு மாகாணத்தில் தமது நிலைகளைப் பலப்படுத்துவதில் இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.

படைத்தளபதிகள் அடிக்கடி கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்கின்றனர்.

கிழக்கை தமது கட்டுப்பாட்டிற்குள் முழுமையாகக் கொண்டுவருவதில் படையினர் தீவிர கவனம் செலுத்துகின்றனர்.

கிழக்கில் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதிலும் அதன் பின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கும் ஏற்ற சூழலை உருவாக்குவதில் படையினர் நாட்டம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. கிழக்கு மாகாண இராணுவ நடவடிக்கைகள் குறித்து படைத்தலைமையினர் திருப்தி தெரிவித்து வருகின்றனர். குறிப்பிடக்கூடிய வெற்றிகளை தாம் அங்கு பெற முடிந்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

## விளம்பரப் பகுதி


**SARIKA TEX**

Ladies Tailoring

24 மணிநேரத்தில்

சாறி பிளவுஸ் சல்வார் கமீஸ்

உங்கள் உடலமைப்புக்கேற்றபடி நவீன முறையில் தைத்துக்கொள்ள

*Hewa Shopping Complex*
*No. 69/5-1/1, 1st Floor,*
*Galle Road,*
*Dehiwela South.*





**மலையாள மாந்திரீகம்**

உலகளாவிய ரீதியில் 27 வருடங்களாகத் தொடர்ந்து உண்மைச் சேவையாற்றி வரும் உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி P.K.சாமி, எஸ்ஸோஸியேட் பிரைவேட் லிமிட்டெட் டாரின் சேவையில் கைரேகைகள், ஜாதகங்கள், மாந்திரீக ரீதியில் உங்கள் பிரச்சனைகளுக்கு நிவாரணம் பெற இன்றே எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். தொழில் பிணக்குகளா? காதல் கிலேசங்களா? வசியங்களா? கணவர், மனைவி, குடும்பப் பிரச்சனைகளா? ஆஸ்த்துமா போன்ற தீராத நோய்களா? இரகசிய ஆண், பெண் நோய்களா? வெளியூர் வாய்ப்புப்பெற வேண்டுமா? என்ன குறை?

P.K. SAAMY
ASSOCIATE PVT. LTD.,
**33, Daily fair Complex, NUWARA ELIYA.**
**Dial: 052-2508 & 3093**
**Celltel. 072-26088, 078-61933**

**COLOMBO BRANCH:**
26, CHARLYMONT ROAD,
WELLAWATTA.
DIAL:01-583250. 078-71243 FAX: 0094-523093

ஆரம்ப மனுச் செய்பவர்களுக்கு, தற்கால பலாபலனைத் தங்கள் பிறந்த திகதி, மாதம் மாத்திரம் எழுதியனுப்பினால் தற்போதைய அல்லது கடந்த ஆண்டுகளின் பலனை இலவசமாக அனுப்புவோம். விஷேடமாக வெளிநாட்டு ஆடர்கள் உடன் கவனிக்கப்படும். வாரந்தோறும் சனிக்கிழமைகளில் நடைபெறும்; துர்க்கையின் அக்கினிக் குண்டல பூஜையில் கலந்து உண்மை அறியலாமே.

தீபாவளித் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 13.11.1993 அன்று பி.ப 3மணி-3.30 மணிவரை வானொலி வர்த்தக சேவையிலும், மாலை 6 மணியிலிருந்து ரி.என்.எல். தொலைக்காட்சி சேவையிலும் எமது விஷேட நிகழ்ச்சியைக் கேட்டு மகிழலாம்.


# போரினால் முடமாவோர் தொகை அதிகரிப்பு! செயற்கை கால்கள்-செயற்கைக் கண்கள்!!

## திடமற்ற வாழ்க்கை! முடமான உறுப்புக்கள்

யாழ்ப்பாணத்தில் உள்ள செயற்கை கால்களை பொருத்தும் நிலையம் மூலப் பொருட்கள் இன்மையால் பாதிக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்புப்படைத் தலைமையினர் அனுமதி வழங்கியுள்ளபோதும் மூலப் பொருட்கள் வடக்கே செல்வதை சுங்க அதிகாரிகள் தடுத்துவருவதாக கூறப்படுகிறது.

முன்னர் வாரத்தில் 7 கால்களை பொருத்திவந்த அந்த நிறுவனம் தற்போது வாரத்தில் ஒரு காலையே பொருத்தி வருகிறது.

இதுவரை 960 செயற்கை கால்கள் வழங்கப்பட்டுள்ளன.

முதல் முறையாக செயற்கை கால் பொருத்துபவருக்கு இலவசமாகவே செயற்கைகால் பொருத்தப்படுகிறது.

கண் இழந்த 276 பேருக்கு செயற்கை கண்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட்டவர்களில் புலிகள் அமைப்பு உறுப்பினர்களும் அடங்குவர்.

## தரமான ஒரு தமிழ் இலக்கிய முயற்சி




கலாநிதி துரை மனோகரன் எழுதிய 'தமிழ் இலக்கியம் பார்வையும்-பதிவும்' என்ற நூல் சமீபத்தில் கண்டியில் வெளியிடப்பட்டது. தரமான இலக்கிய முயற்சி. நூல் வெளியீட்டு விழாவில் கருத்து வெளியிடவந்தவர்கள் படத்தில்.

## நெத்தியடி

"அரசியல் என்பது ஒரு பந்து விளையாட்டு. வெற்றியும் தோல்வியும் சகஜம். பந்து விளையாட்டில் தோல்வி கண்டதற்காக துடுப்பை தூக்கித் தரையில் அடிப்பவன் அல்ல நான்."

தென்மாகாண முன்னாள் அவைத்தலைவர்
பீ.டபிள்யூ செனவிரத்த

பந்து யார்? பொதுமக்களோ? நல்லது. துடுப்பை தரையில் அடித்தால்கூட பரவாயில்லை. பந்துகளின் தலையில் அடிக்காமல் இருந்தால் போதும்.

■

"சிறு-சிறு ஈழமாகவே இந்த பிரதேச செயலகங்கள் செயற்படவுள்ளன."

பஸீர் சேகுதாவூத்- எம்.பி

கவனம் ஐயா, உறுமயக்களின் காதுகளில் விழுந்து தொலைக்கப் போகிறது. அரசாங்கம் குட்டி ஈழம் கொடுத்துவிட்டதாக கூறப்போகிறார்கள்.

■

"அநுரா எம்.பி. பதவியைத் துறந்தார்."

-செய்தி-

சின்ன மீனைப் போட்டால்தானே பெரிய மீனைப் பிடிக்கலாம்.

■

## பாடசாலைக்கு வரும் பாம்புகள்

(கிண்ணியா நிருபர்)

தி/அல்.அக்ஸா மகா வித்தியாலயத்தில் அடிக்கடி அரவம் (பாம்பு) படையெடுப்பதாகவும், இதனால் மாணவர்கள் பீதியடைந்து ஓடுவதாகவும் வகுப்பறைகள் அல்லோலகல்லோலப் படுவதாகவும் தெரியவருகின்றது.

தற்போது இவ்வித்தியாலய மரங்களிலிருந்து இரண்டு பாம்புகள் மீட்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனவாம்.

இவ்வித்தியாலயத்தில் கட்டடம் பற்றாக் குறை காரணமாக பல வகுப்பறைகள் மர நிழல்களிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வித்தியாலயத்தில் தற்போது பாம்புகளின் வரவால், மரநிழல்களில் வகுப்பறைகளை வைத்துக்கொள்ளவும், ஆசிரியர்களும், மாணவர்களும் அச்சம் தெரிவிக்கின்றனராம்.

■

## மக்கள் மயமான போக்குவரத்தில் மாணவர்கள் ஏறத் தடையா?

(இராகலை நிருபர்)

நுவரெலியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சபையை சேர்ந்த பஸ் வண்டிகளில் அண்மைக் காலமாக பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வது குறைந்து வருகின்றது.

காலை வேளைகளில் ரூபஹாவிலிருந்து இராகலை வழியாக நுவரெலியாவுக்கு செல்லும் பஸ் வண்டியில் (நுவரெலியா டிப்போவை சேர்ந்த) பாடசாலை பிள்ளைகளை ஏற்றிச் செல்வதில்லை. பஸ் தரிப்பு நிலையங்களில் இவர்கள் கைகளை காட்டும் போது, அவ்விடத்திலுள்ள ஏனைய பிரயாணிகளை ஏற்றிவிட்டு பாடசாலை பிள்ளைகளை ஏற்றுவதில்லை.வலப்பனை, ஹங்குரங்கெத்த, வெளிமடை போன்ற பிற பஸ் டிப்போவை சேர்ந்த பஸ் வண்டிகளில் பாடசாலை பிள்ளைகளை ஏற்றிச் செல்லும் போது நுவரெலியா பஸ் டிப்போவை சேர்ந்த பஸ் வண்டிகளில், நுவரெலியா போக்குவரத்து சபையில் சீசன் பெறும் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிச் செல்லாதது வேதனைக்குரியதொன்றாகும்.


இதனை பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும், இம்மாதிரியான செயல்கள் தொடர்வது மேலும் வேதனைக்குரியதாகும்.

## அடிக்கடி தடைபடும் மின்சாரம்

(சீனக்குடா நிருபர்)

சீனக்குடா, நாச்சிக்குடா, வெள்ளைமணல் ஆகிய பகுதிகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுகின்றது. இதன் காரணமாக இப்பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகள், பேக்கரிகள், வர்த்தக நிலையங்கள் ஆகியன பாதிக்கப்படுகின்றன, ஆதலால் மேற்படி பகுதிகளில் ஏற்படும் மின் தடையை சீரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வி. அனோஜா

சங்கானையைச் சேர்ந்த அலக்ஸ்சாந்தர் வனிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி அனோஜா தனது இரண்டாவது பிறந்தநாளை 10.11.93 ஆம் திகதி புதன்கிழமை மயூரா பிளேஸ் - கொழும்பு-6 இல் கொண்டாடினார்.

அனோஜாவை அப்பா (இத்தாலி) அம்மா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அம்மம்மா, அப்பம்மா, பெரியம்மாமார், மாமாமார், அன்ரிமார், பெரியப்பாமார், அக்காமார், அண்ணாமார், மச்சான், சுவிஸ் மாமா, அன்ரி, பெரியப்பா, இத்தாலி மாமா அன்ரி, சித்தப்பா, பெரிய மாமா, மாமி, கனடா சித்தப்பா, சித்தி மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.


**ரிஷி அஜமாமிச லேகியம்**

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால், கை வலி, நாட்பட்ட வட்ய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=, 95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்திய சாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


## தரமுயர்த்தப்படவேண்டிய தபாலகம்!

வடமத்திய மாகாணமான அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள கம்பிரிகஸ்வெவ என்னும் அழகிய கிராமத்தில் இயங்கிவரும் உப-அஞ்சல் அலுவலகம். பக்கத்து கிராமங்களில் இயங்கும் கொட்டியாவை, அளுத்கம ஆகிய இரு உப-அஞ்சல் அலுவலகங்கள் கம்பிரிகஸ்வெவ உப-அஞ்சல் அலுவலகத் திற்குப் பொறுப்பு.

ஆகையால் கம்பிரிகஸ்வெவ உப-அஞ்சல் அலுவ்லகத்தை "அஞ்சல்" அலுவலகமாக மாற்றியும், தொலைபேசி மின்சாரம் தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்கவும்.

எஸ்.ஐ.நிலாம்தீன்
கம்பிரிகஸ்வெவ.

## மட்டு. கச்சேரி அதிகாரிகளின் கவனத்தில் எடுபடாத குறை!

சமூக நல சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள் போன்றவற்றைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணபப்படிவங்கள் மட்டு. கச்சேரியில் தனிச் சிங்களத்தில் மட்டுமே உள்ளன. தம்மைப் பதிவு செய்து கொள்ளச் செல்லும் சமூக நல அமைப்புக்களுக்கு மேற்படி சிங்களப் படிவங்களே மட்டு.கச்சேரி சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது. தமிழ் படிவங்கள் தங்களிடம் இல்லை யென்றும் அவை திருகோணமலை மாகாண சபையிடமே உள்ளதென்றும் சம்பந்தப்பட்ட திணைக்களப் பகுதியின் அதிகாரிகள் கூறுகிறார்கள். இக்குறை கடந்த ஒரு வருடகாலமாக இருந்து வருகிறது. இந்த நீண்ட காலக்குறைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவன மெடுக்காது அசிரத்தையாக இருப்பதே கசப்பான உண்மையாகும்.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்
ஏறாவூர்.

## புகார் பெட்டி

### மக்களுக்குத் தேவை! மக்கள் வங்கியின் சேவை!!

கொழும்பு-11, செட்டியார் தெருவில் மக்கள் வங்கிக்கிளை ஒன்றுள்ளது. இங்கு நடைமுறைக்கணக்கு, சேமிப்புக்கணக்கு நகை அடவு பிடித்தல் ஆகியவற்றைச் செய்பவர்கள் 90 வீதம் தமிழ் பேசும் மக்களே!

தமிழ் மக்கள் நிறையக் கருமமாற்றும் இக்கிளையில் பணியாற்றுபவர்களுக்குத் தமிழ் தெரிவதில்லை. தமிழ் உத்தியோகத்தர் இருவர் மட்டுமே இங்கு கடமை புரிகின்றனர். இவர்கள் இருவரும் பொதுமக்கள் தொடர்பு கொள்ளக் கூடிய கரும பீடங்களில் கடமை ஆற்றுவதில்லை.

மக்களுக்காகச் சேவையாற்றும் மக்கள் வங்கி அதிகாரிகள் என்ன எண்ணி இருக்கிறார்கள்? செல்பவர்கள் அனைவரும் ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கொண்டு செல்ல வேண்டும் என்றா? அல்லது கொழும்பில் இருப்பவர்கள் தானே சிங்களம் தெரிந்திருக்க வேண்டும் என்றா?

கொழும்பில் இருப்பவர்கள் என்பதற்காகச் சிங்களம் தெரிந்திருக்க வேண்டும் என்பதில்லை, என்பதையுணர்ந்து மக்கள் வங்கி அதன் சேவையைத் தமிழ் பேசும் மக்கள் வசதி கருதி ஏற்பாடுகளைச் செய்வார்களா?

தமிழ் உத்தியோகத்தர்கள் குறைவு என்றால் ஒரு மொழிபெயர்ப்பாளர் தமிழ் மக்களின் நலன்கருதி நியமிக்கப் படுவாரா? வாடிக்கையாளர் ஆகிய எமக்குத் தேவை மக்கள் வங்கியின் சேவையாகும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

வே.நாதன்-கொழும்பு-11.

## பொது நிலத்தில் ஒரு பொதுநூலகம் கட்டினால் என்ன?

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந் துறைத் தேர்தல் தொகுதியும் பிரதேச செயலகத்தையும் கொண்டுள்ள வரிப்பத்தான்சேனை என்ற தனி தமிழ் பேசும் மக்களைக் கொண்ட இக்கிராமத் தில் கல்வி கற்ற, கற்கும் மாணவர்கள் எதிர்நோக்கும் பெரும் குறைபாடுகளில் ஒன்றுதான் பொது நூல் நிலைய வசதி இன்மை.

கல்வியைத் தொடரும் மாணவர் களும், படித்துவீட்டில் உள்ள இளைஞர் களும், உலக செய்திகளை அறிவதற்கும், தங்களின் ஓய்வு நேரத்தை சிறந்த முறையில் பத்திரிகை, சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை போன்ற இலக்கியத் துறையில் ஈடுபடுவதற்கும் ஒரு பொதுவான நூல் நிலையம் இல்லாது மிகவும் சிரமப்படுகின்றனர்.

இக்கிராமத்தில் "பொது நிலம்" என்ற வகையில் பல ஏக்கர் நிலங்கள் வீணான முறையில் காடுபிடித்த நிலையில் உள்ளன. இந்த நிலத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதாக இருந்தால் சிறந்த சிறு நூல் நிலையம் ஒன்று அமைப்பதுக்கு இம்மாவட்ட அரசியல் வாதிகளோ அல்லது நல்லெண்ணம் கொண்ட பெரும் வர்த்தகர்களோ முன்வருவார்களாக இருந்தால், இக்கிராம மக்கள் எந்தவகையிலும் ஆக்கமும், ஊக்கமும் உதவியும் செய்வதற்கு தயாராகவும், நன்றிக்கடன் உடையவர் களாகவும் என்றும் இருப்பார்கள் என்பது உறுதி.

ஏ.எம்.சித்தீக்
வரிப்பத்தான்சேனை.

## சோதனையான பாதை!

மாவனல்லை நகரில் அரசாங்க ஆஸ்பத் திரிக்குக் கீழாலுள்ள பாதை இப்பகுதியில் வாழும் மக்களுக்கு மிக நீண்டகால பிரச்சனைக் குரிய வீதியாக உள்ளது. இப்பாதை வழியாக ஒரு நாளைக்கு சுமார் 200 பேர் பயணம் செய்கிறார்கள். நயாவலை கிராமத்திற்கும் இவ்வீதி மூலமாகவே மக்கள் செல்வதுண்டு. நகரிலுள்ள கடைக் காரர்கள் உட்பட பலரும் இப்பாதை வழியாகவே குளிக்கவும் செல்வதுண்டு.

மழை காலங்களில் சேறும் சகதியும் காரணமாக பாதசாரிகள் இப்பாதையில் பயணம் செய்ய மிகவும் சிரமப்படுகின்றனர். பாடசாலைக்குப் போகும் மாணவர்கள் சேற்றுடன் போராடிச் செல்லவேண்டிய நிலை ஒருபுறமிருக்க, தொழில்களுக்கும் கடைகளுக்கும் செல்லவேண்டியவர்கள் இன்னொருபுறம் சிரமப்படுகின்றனர். வாகனம் செல்லக் கூடிய இப்பாதையால் மழைகாலங்களில் அவசரத் தேவைக்கேனும் வாகனம் எடுக்கமுடியா துள்ளது. மாவனல்லை நகருக்குத் தொலை விலுள்ள பாதைகள் செப்பனிடப்பட்டுள்ள போதிலும் மாவனல்லை நகருக்கு மிகவும் அண்மையிலுள்ள ஒரே வீதியான இதனைப் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாரா முகமாக இருப்பது ஏனோ?

கவலைக்குரிய இப்பாதையின் நிலைபற்றி பல அதிகாரிகளிடம் கூறியும் இன்றுவரை பயனில்லாமல் போய்விட்டது என்று இப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இனிமேலாவது பரிதாபத்துக்குரிய இப்பாதையைக் கவனித்து செப்பனிடுவதன் மூலம் மக்களின் ஆதரவை பெறுவதுடன் அவர்களின் உள்ளங்களை மலரச் செய்வார்களாக!

பாரா ஓமர்-மாவனல்லை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்கில் தேர்தல் ஏற்படுத்துமா மாற்றம்?

எக்ஸ்ரே ரிப்போர்ட் -நாரதர்-

கிழக்கிலும், வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப் போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரிப்பு விடயத்திலும் ஜனாதிபதி பிரித்தேயாக வேண்டும் என்ற கருத்தினையே வலியுறுத்தி வருகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரை வடக்கு-கிழக்கு பிரிப்பை தமது தேர்தல் அறிக்கையில் தெரிவித் திருந்தனர்.

ஆயினும், சர்வகட்சி மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான அமரர் ரஞ்சன் விஜயரத்தின ஏனைய கட்சிகள் இணைப்பை ஏற்றுக் கொண்டால் தமது கட்சியின் முடிவு பரிசீலிக்கப்படும் என்றே கூறியிருந்தார்.

அவ்வாறே முன்னாள் ஜனாதிபதி அமரர் பிரேமதாசாவும் கூறிவந்தார்.

ஆனால், இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க கிழக்கு வடக்கிலிருந்து பிரியவேண்டும் என்பதை தானே முன்னின்று வலியுறுத்தி வருகிறார்.

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுவது கூட வடக்கு-கிழக்கு பிரிப்புக்காக சர்வஜன வாக்கெடுப் புக்கான ஒரு வெள்ளோட்டமாகவே அமையும்.

புலிகள் அமைப்பினர் உள்ளூ ராட்சித் தேர்தல்களை குழப்பக்கூடும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றன.

எனவே தேர்தலை முன்னிட்டு தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் படையினர் இறுக்கமான கட்டுப் பாடுகளை மேற்கொள்ள முயல்வர்.

ஏனைய தமிழர் அமைப்புக்கள் இப்போது தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை. என்றாலும் தேர்தல் நடத்தப்படுமானால் அக்கட்சிகளில் முக்கியமானவை தேர்தலில் போட்டி யிடலாம் என்றே நம்பப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றே தெரிகிறது.

அதற்கு இரண்டு காரணங்கள். அரசியல் தீர்வு முன்வைக்கப்படாமல் உள்ளபோது தேர்தலில் போட்டி யிடுவதில் அர்த்தமில்லை. இது கூட்டணி வட்டாரங்கள் சொல்லுகின்ற காரணம்.

அவர்கள் சொல்லாத அல்லது சொல்ல விரும்பாத காரணமும் ஒன்று இருக்கிறது. புலிகள் தேர்தலை எதிர்ப்பதால் அதனை மீறிச் செயல்படும் நிலையில் கூட்டணி இல்லை. எதற்கு வம்பு? அமுதரை இழந்தது போதும் என்று நினைக்கிறார்கள்.

ஏனைய தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை மக்களிடம் எந்த முகத்தோடு, என்ன முழக்கத்தோடு சென்று பிரச்சாரம் செய்வது என்பது ஒரு முக்கிய பிரச்சனை.

அது தவிர கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் செயல்படும் தமிழ் கட்சிகள் பற்றியும் அங்குள்ள மக்களிடம் பரவலான அதிருப்திகள் காணப்படுகின்றன.

ஆட்பலம் காட்டுவதற்காக சேர்க்கப் பட்ட உறுப்பினர்கள் மீது கட்டுப்பாடு பெரியளவில் செலுத்தப்படுவதில்லை.

கட்டுப்படுத்த முயன்றால்அவர்கள் விலகிப் போகலாம். அல்லது வேறொரு இயக்கத்தின் திறந்த கதவு வழியாக அங்கே போய்ச் சேரலாம்.

முன்னர் வேறு ஓர் இயக்கத்தில் இருந்து மக்கள் மத்தியில் அத்துமீறி நடந்தவர்கள் இப்போது மற்றொரு இயக்க பெயர் பலகையின் கீழ் இயங்குவதும் அவதானிக்கத்தக்கது.

கொள்கை வேறுபாடுகள், கொள்கை சார்ந்த நடைமுறை வேறுபாடுகள் காரணமாக ஓர் இயக்கத்தை விட்டு விலகுதல் என்பது பிழையானதல்ல.

ஆனால், ஒழுக்கமீறல்கள், அதிகார ஆசைகள், அட்டகாசப் போக்குகள் என்னும் நோக்கங்களோடு வாய்ப்பான வழிதேடி அலையும் நபர்களே பிரச்சனைக் குரியவர்கள்.

இவ்வாறான நபர்கள் இயக்கம் என்ற பாதுகாப்புடன் அட்டகாசம் செய்யும் போது மக்கள் பயத்தில் அடங்கிப் போகிறார்கள்.

தேர்தல் போன்ற ஜனநாயக வாய்ப்புக்கள் வரும்போது தமது வெறுப்பை மக்கள் வெளிப்படுத்தவே செய்வார்கள்.

தமிழ்க் கட்சிகள் கூட்டாகத் தேர்தலில் போட்டியிட்டால் தமிழ் வாக்குகள் சிதறாமல் இருக்கக்கூடும்.

எனினும், தேர்தலில் கூட்டாகப் போட்டியிட்டால் கூட அது எந்தளவுக்கு உளப்பூர்வமான ஒற்றுமையாக இருக்கும் என்பது கேள்விக்குறியே.

தமிழ்க் கட்சிகள் நிறுத்தப்போகும் வேட்பாளர்கள் பற்றிய பிரச்சனைகளும் இருக்கின்றன.

என்றாலும், எதிர்நீச்சல் போடுவதற்குப் பதில் நீரோட்டம் போகும் பாதையில் செல்லுவதே அரசியல் என்று மாறி விட்டதால் யாரையாவது வேட்பாளர்களாகப் போட்டு தேர்தலில் குதிக்க அவை முயலக்கூடும்.

புறச்சூழலை மாற்றுவதற்கு பதிலாக சூழலுக்கு அடிமையாகிப் போவதும், அது தவிர்க்க முடியாது என்று ஆனதுமே பெரும்பாலான தமிழ்க் கட்சிகளின் நடைமுறையாக இருக்கிறது.

முஸ்லிம் மக்களிடையே தமிழ் கட்சிகள் வாக்குகளைப் பெறுவது இயலாத காரியம்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி போன்ற கட்சிகளுக்கு முஸ்லிம்களுக்கிடையே வாக்குகளை பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

முஸ்லிம் காங்கிரசுக்கு கிழக்கில் அக்கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சனைகள் பாதிப்பை ஏற்படுத்தும்.

முன்னர் முஸ்லிம் காங்கிரசுக்கு இருந்த பலத்த ஆதரவு தற்போது சரிவடைந் திருப்பதாகக் கருதப்படுகிறது. அக்கட்சி குறித்த எதிர்ப்பார்ப்புக்கள் தவறியதும் அதற்கு ஒரு காரணம் என்று சொல்லப் படுகிறது.

கிழக்கில் இக்கட்சிகளுக்கு அப்பாலும் ஒரு அணி தேர்தல் களத்தில் குதிக்கக்கூடும்.

கிழக்கில் இராணுவம் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பிரஜைகள் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்குழுக்களில் உள்ளவர்கள் பலர் இராணுவத்தினரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக நடந்துகொள்ளு கிறார்கள்.

கிழக்கில் தேர்தலை நடத்துவதில் இராணுவத்தரப்பு அதிக அக்கறை காட்டுகிறது.

தேர்தல் பிரச்சனைகள் இல்லாமல் நடந்து முடிந்தால் அது புலிகளின் மீதான தமது இராணுவ ரீதியான வெற்றியை வெளிப்படுத்தும் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

புலிகளை முறியடித்து, கிழக்கில் தேர்தலை நடத்தி முடித்துவிட்டதாக இராணுவம் சொல்லும். அதன் மூலம் இராணுவம் என்ன செய்து கொண்டி ருக்கிறது என்று எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் எழுப்பும் கேள்விகளுக்கு பதில் சொல்வதாகவும் அமையும்.

அதே சமயம் கிழக்கில் தமது நம்பகமான பிரஜைகள் குழுவினர் தேர்தலில் வெற்றி பெறுவதையே இராணுவத் தரப்பினர் விரும்புவர் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

ஒரு வேளை தமிழ்க் கட்சிகள் தேர்தலில் போட்டியிட முன்வராவிட்டால் கூட அந்தப் பிரஜைகள் குழுவினரைபோட்டியிடவைத்து இராணுவத்தினர் தேர்தலை நடத்திக்காட்ட முயல்வர்.

ஆனாலும்-தேர்தலில் போட்டியிடுவது அல்லது போட்டியிடாமல் விடுவது என்பதில் தமிழ் கட்சிகள் ஒரே விதமான முடிவை எடுக்கப் போவதில்லை.

அது மட்டுமல்லாமல் சில கட்சி களுக்குள் ஏற்பட்டுள்ள உட் பிளவுகளும் ஒரு கட்சியே இருவிதமான முடிவை எடுக்கும் சூழ்நிலையைத்தான் ஏற்படுத்தும்.

ஒருவரை ஒருவர் வெட்டி ஓடும் விளையாட்டு. தீர்க்கமான அரசியல் முடிவுகள் சாத்தியம் இல்லை. பிறிதொரு கட்சி போட்டியிட்டு அதனால் இலாபம் பெற்றுவிடுமோ என்ற கணக்கே முடிவுகளைத் தீர்மானிக்கும்.

எனவே- தேர்தல் நடத்துவது என்று திகதி தீர்மானிக்கப்பட்டால் தமிழ்க் கட்சிகள் பல அதில் கலந்து கொள்வது உறுதி.

தமிழ்க் கட்சி வேட்பாளர்களை விட பிரஜைகள் குழு உறுப்பினர்கள் வெற்றி பெறும் சாத்தியங்கள் சில நேரங்களில் ஏற்படக்கூடும்.

சிங்கள- முஸ்லிம் வாக்குகள் தேர்தலின் ஒட்டுமொத்தமான முடிவில் முக்கியமான பங்கினை செலுத்தப் போகின்றன.

தமிழ்க் கட்சிகள் தனித்தனியே நின்று தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினால் வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு கிழக்கில் ஆதரவு உண்டு என்று அரசாங்கம் உரத்துச் சொல்லும்.

சூட்டோடு சூடாக கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பையும் அரசு நடத்த முற்படலாம். அதிலும் வெற்றி பெற்றால் ஜனாதிபதியும், ஆளும் கட்சியும் தெற்கே தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்ள முடியும்.

அடுத்த பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் சொல்லிக் கொள்ளக்கூடிய சாதனைகளாக அவற்றை முதன்மைப்படுத்தவும் முடியும்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா திட்டவட்டமான முடிவுகளோடு காய்களை நகர்த்துகிறார்.

அவரது எதிரிகள் பிரச்சாரம் செய்தது போல அரசியல் சாணக்கியம் தெரியாத வரல்ல அவர்.

அடுத்த ஜனாதிபதியும் அவர்தான். தனது அரசியல் எதிரிகளை வீழ்த்து வதற்கான வியூகங்களை ஆரவாரம் இல்லாமல் அடக்கமாக வகுத்துக் கொண்டிருக்கிறார்.

இது முன்னாள் ஜனாதிபதி பிரேமாவின் அணுகுமுறையில் இருந்து வேறுபட்டது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவைக் கண்டு அவரது அரசியல் எதிரிகள் பயந்தார்கள். இன்றைய ஜனாதிபதி எதிர்க்கட்சிகளை பகிரங்கமாக பகைத்துக் கொள்ளவில்லை. அக்கட்சிகளும் ஜனாதிபதியின் அரசியல் விவேகத்தைப் பற்றி குறைவாக மதிப்பிட்டு விட்டன.

ஆனால் ஜனாதிபதியோ மெல்ல-ஆனால் உறுதியாக தனது நிலையைப் பலப்படுத்தி வருகிறார்.

எதிர்க்கட்சிகள் நினைத்ததுபோல ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அரசியல் போரில் விருப்பம் இல்லாமல் விலகிக் கொள்ளக்கூடியவருமல்ல. சுலபமாக வெற்றி கொள்ளப்படக் கூடியவருமல்ல.

இனப்பிரச்சனை இல்லை என்று அவர் அடித்துக்கூறுவதும், புலிகளை பயங்கரவாதிகள் என்று கடுமையாகச் சாடுவதும் சிங்கள சாதாரண மக்கள் மத்தியில் அவரது செல்வாக்கை நிச்சயம் உயர்த்தும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரைதான் இனப்பிரச்சனை இல்லை என்பது பலத்த அதிர்ச்சிக்குரிய பிரச்சனை.

ஆனால், தமிழ் மக்களைப் பற்றி பல தமிழ்க் கட்சிகளே கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் ஆளும் கட்சி மீதோ அல்லது வேறு சிங்கள அரசியல் கட்சிகள் மீதோ குறை சொல்லி என்ன பயன்?

கிழக்கில் நடைபெறும் தேர்தல்கள் இனப்பிரச்சனைக்கான தீர்வில் நம்பிக்கைக் குரிய மாற்றங்களை ஏற்படுத்தப் போவ தில்லை.

ஆனால் அரச தரப்புக்கும், இராணு வத்துக்கும் புதிய நம்பிக்கைகளையும், தமது சாதனைகள் என்று கூறிக்கொள்ளக்கூடிய வாய்ப்பையும் ஏற்படுத்தும். ■

## பெண் புலிகளும் இழப்புக்களும்

புலிகள் அமைப்பினர் மத்தியில் பெண் உறுப்பினர்களின் தொகை ஆண் உறுப்பினர்களின் தொகையைவிட அதிகமாகக்கூடும் என்று தோன்றுகிறது.

சமீபத்திய யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போதும் பெண் உறுப் பினர்கள் பெருமளவில் எதிர்த்தாக்கு தல்களில் ஈடுபட்டனர்.

புலிகளது பெண்க்ள் பிரிவின் முக்கியமான உறுப்பினர்களும் பலியாகி உள்ளனர்.

பெண் உறுப்பினர்கள் சுட்டுக் கொண்டிருக்க ஆண் உறுப்பினர்கள் முன்னேறித்தாக்கியதாகவும் கூறப் பட்டது.

யுத்தத்தில் தமது பெண் பிள்ளைகள் பலியாவது பற்றி பெற்றோர்கள் கவலைப்படவே செய்கின்றனர்.

எனினும் ஆரம்பத்தில் இருந்தது போல் இல்லாமல் பெண்கள் இயக்கத்தில் சேருவது அசாதாரணமான விசயமாகப் பார்க்கப்படுவதில்லை.

இயக்கத்தில் சேரும் பெண்கள் பற்றிய தவறான பார்வைகள், பேச்சுக் கள் என்பனவும் மறைந்து வருகின்றன. இதற்கு பயம் மட்டும் காரணம் அல்ல. அது ஒரு இயல்பான போக்காக மாறுவ தால் தொடர்ந்து அது பற்றிப் பேசுவதில் எவருக்கும் சுவாரசியம் இருக்கப் போவதில்லை.

ஆண்களைப் போலவே கடினமான பயிற்சிகளில் பெண்களும் ஈடுபடு கின்றனர்.

புலிகளின் தலைமை மட்டத்தில் பெண் விடுதலை பற்றிய உளப்பூர்வ மான நாட்டம் எந்தளவில் இருக்கமுடியும் என்பது கேள்விக்குரியதே.

ஆயினும், பெண் விடுதலை பற்றிப் பெரிதாக கோசம் போட்ட அமைப்புக்கள் பெண்களை முகாமிற்குள் வைத்திருந்தன. அல்லது பெண்களும் இருக்கிறார்கள் என்றுகாட்ட அவர்களது பெயரில் பத்திரிகை வெளியிட்டன. அதற்கு மேல் செல்ல முடியவில்லை. புலிகள் அதற்கு மேலும் சென்றுவிட்டார்கள்.

திரு. பிரபாகரனின் மெய்ப்பாதுகாவ லர்கள் பிரிவில் பெண்கள் இருக்கி றார்களா என்று தெரியவில்லை. ■

## அதிரடி அய்யாத்துரை



அவர் ஒரு தமிழ்க் கட்சிப் பிரமுகர். கடத்தப்பட்ட ஆறு பேர் விடுவிக்கப்பட்ட செய்தி அவர் காதில் விழுந்திருக்கிறது. உடனடியாக பேப்பருக்கு செய்தி கொடுத்திருக்கிறார். "ஆறு பேரும் ரிலீஸ்" அவற்றை பேரோடு செய்தி வந்திருக்கிறது. செய்தியை படிச்சவை அந்தப் பிரமுகர் இருக்கிற அமைப்புத்தான் ஆட்களை கடத்தினது எண்டு நினைச்சினம். வெளிநாட்டுப் பேப்பர்காரரும் விடுவினமோ. அந்த பிரமுகரின் அலுவலகத்திற்கு போன் மேலே போன். போனுக்கு பதில் சொல்லி வாழ்க்கை வெறுத்த உறுப்பினர் சொன்னாராம்- 'உந்த மனுசன் பார்த்த விசர் வேலையாலை போன் சத்தம் கேட்டாலே ஒடலாம் போல கிடக்கு.'

ஆனையிறவுப் பாதையாலை போய்வாருங்கோ என்று படையினர் நோட்டீஸ் போடுகினம். போக வேண்டாம் எண்டு இரெண்டு எழுத்தார் அங்காலை நிண்டு கண்டிப்புப் போடுகினம். தாண்டி வர ஏலுமா? தாண்டி வாரதும் ஒண்டுதான், கிளாலியாலை போய் சாகிறதும் ஒண்டுதான். கிளாலிப் பயணத்திலை தப்ப சான்ஸ் இருக்குது. இரெண்டு எழுத்தாரின் உத்தரவை மீறினா அடுத்த கதைக்கு இடமில்லை. உந்த விசயம் படைக்கு ஏன் விளங்கேல்லை. அப்பிடியெண்டா தாங்களே கிளாலியிலை நிண்டிருக்கலாம்தானே. சனத்தின்ர கஷ்டத்தை ஒருதரும் விளங்கிக் கொள்ளுறது கிடையாதோ?

இங்கிருந்து - அதுதான் பாருங்கோ கொழும்பிலை இருந்து யாழ்ப்பாணம் போய் வரும் சிங்களப் பத்திரிகையாளர்கள் தொகை கூடிக்கொண்டே போகுது. இதுவரையும் கனபேர் போட்டு வந்திட்டினம். ஆனால் விசயம் என்னடா எண்டால் "நாங்கள் தான் முதலில் யாழ் போய் வந்தனாங்கள்" எண்டுதான் எல்லாரும் கட்டுரை எழுதுகினம். யாழ்ப்பாணத்திற்கு போட்டுவாறதெண்டா சந்திர மண்டலத்துக்கு போட்டு வந்தது மாதிரியல்லோ பரபரக்கினம்.

ஈழம் எண்டு இலங்கைக்கு ஒரு பெயர் இருந்த கதை தெற்கில் பலருக்கு தெரியாது. ரேடியோவிலை கூட ஈழத்து இலக்கியம், ஈழத்து நாடகம் எண்டு யாரும் எழுதினா ஈழத்தை ஒரே வெட்டாம். முந்தி ஈழத்துப்பாடல்கள் எண்டு ஒலிபரப்பினவை. இப்ப அது நம் நாட்டுப் பாடல் எண்டு மாறிவிட்டது. அதுமட்டுமில்லை. தமிழ் கட்சிகளில் சில தங்கள் பெயரில் ஈழத்தை வைத்திருக்கிறதும் தெற்கில் ஒரு சர்ச்சையாம். நீங்கள் இன்னும் பிரிக்கிற யோசனையை விடேல்லையோ எண்டு மெத்தப்படிச்ச சிலரும் கேட்கினமாம்.

உலகத் தொலைக்காட்சி சேவையள் எல்லாம் இஞ்சையும் ஓடி வந்துட்டுது. ஆனாப் பாருங்கோ எங்கட தொலைக்காட்சியள் மட்டும் இப்பவும் முன்னேறின மாதிரித் தெரியேல்லை. போதாது எண்டு இனப்பிரச்சனை இல்லை எண்டு சொல்லி செழிப்பான பகுதிகளை மட்டும் காட்டுகினம். அப்பிடியே கமராவை வடக்கு-கிழக்கிலையும் ஒரு ரவுண்ட் விட்டா தெரியும் விசயம், பிரச்சனை எவ்வளவு பெரிசு எண்டு!

ஊரும் போற்ற வேணும் உலகமும் போற்ற வேணும். ஏன் ஊர் எண்டு முதல் சொல்லுறன் எண்டால், சிலரை உலகம் விசயம் தெரியாமல் போற்றும். ஊருக்குத்தான் அவேன்ர ஊத்தை தெரியும். ஆனால் விபுலாநந்தர் ஊரும், உலகும் சேர்ந்து வாழ்த்திய மனுசன். கனிவு மிக்க தெளிவான நடையில் எழுதுற வித்தையும் விபுலாநந்தருக்கு கைவந்த கலை. கேளுங்கோ,

"காப்பவிழ்ந்த மாமலரோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலர் எதுவோ?
காப்பவிழ்ந்த மலரும் அல்ல கழுநீர்த் தொடையும் அல்ல
கூப்பியகைக் காந்தள் அடி கோமகனார் வேண்டுவது"

கடவுளுக்கு தாமரை மலரை விட காந்தள் மலர்தான் இசைந்ததாம். அதை என்ன கலாதியா சொல்லியிருக்கிறார் பார்த்தியளோ. ●

# உலக ரவுண்டப்

## உள்ளிருந்தே கொல்லும் பகை!

## அங்கோலா அலங்கோலாவாகிறது

வெளியே இருந்து கொல்லும் பகையைவிட உள்ளிருந்தே கொல்லும் பகை கொடியது.

ஆபிரிக்க நாடுகள் உள்ளிருந்து கொல்லும் பகையால் உருக்குலைந்து போய்க்கொண்டிருக்கின்றன.

உள்நாட்டுப் போரால் இரத்தம் கொட்டும் ஆபிரிக்க நாடுகளில் ஒன்று அங்கோலா.

கடந்த 18 வருடகாலமாகத் தொடரும் யுத்தத்தில் இதுவரை பலியாகியுள்ள மக்கள் தொகை ஒரு இலட்சத்தையும் தாண்டிவிட்டது.

ஆரம்பத்தில் அனுதாபத்துடன் அங்கோலாவை உலகம் கவனித்தது.

இப்போது உலகம் அங்கோலாவை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை.

அங்கு நடக்கும் அவலங்களும் வெளிவருவதில்லை.

மனித உரிமைகள் மீறப்படுகின்றன. மனிதாபிமானம் செத்துக்கொண்டிருக்கிறது. கொடுமைகள் கோலோச்சுகின்றன.



அத்திலாந்திக் சமுத்திரத்தை மேற்கு எல்லையாக அணைத்தபடி ஆபிரிக்காவின் தெற்கே அமைந்துள்ள அங்கோலாவின் வடக்கே ஸாயர் நாடும், கிழக்கே ஸம்பியாவும் தென் புறத்தே நமீபியாவும் உள்ளன.

அங்கோலாவின் தலைநகர் லுவண்டா. ஜனாதிபதியாக விளங்கும் ஜோஸ் எடுவார்டோ டொஸ் சான்ரோஸ் முன்னர் சோவியத் யூனியனின் வளர்ப்புப் பிள்ளை போல் இருந்தார். இப்பொழுது அமெரிக்காவின் அரவணைப்பைப் பெற்றிருக்கிறார்.

ஆனாலும் ஆட்சியைக் கைப்பற்றத் துடிக்கும் யூனிற்றா இயக்கத்தின் தலைவரான ஜோனாஸ் சவிம்பியின் கிளர்ச்சிகளால் தடுமாறிக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே நாட்டின் 65 சதவிகிதமான பகுதியைச் சவிம்பி கைப்பற்றி வைத்திருக்கிறார்.

சான்ரோஸின் ஆட்சிபீடம் சவிம்பியுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் துவங்குவதற்கு ஆயத்தமாகியுள்ளது.

கடந்த வருடம் ஐ.நா. மேற்பார்வையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசின் ஆதரவாளர்களுக்கு 129 இடங்களும் சவிம்பிக்கும் ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் 91 இடங்களும் கிடைத்தன.

இம் முடிவுகளை ஏற்க மறுத்த சவிம்பி மீண்டும் போர்க் கோலம் பூண்டார். இரத்த ஆறு பெருகியது. சவிம்பியின் ஆதிக்கத்துக்குட்பட்ட பகுதிகள் வைரச் சுரங்கங்களைக் கொண்டது. இதனால் பெறப்படும் பணத்தைக் கொண்டு ஆயுதங்களை வாங்கிக் குவிக்கிறார்கள்.

இதேவேளை எண்ணை விற்பனையினால் பெறப்படும் செலாவணி ஜனாதிபதி சான்ரோஸின் ஆதிக்கம் தொடர்ந்து நிலைபெற உதவுகிறது. இரு தரப்புகளும் ஆயுதங்களை வாங்கிக் குவித்து நடத்தும் சண்டையில் இலட்சக் கணக்கான அப்பாவி மக்கள்பட்ட துன்பம் வர்ணிப்புக்கு அப்பாற்பட்டவை.

புதிதாக சமாதானப் பேச்சுக்கள் துவங்கும்போது சவிம்பியிடம் சிக்கியிருக்கும் பிரதேசத்தில் பெரும்பகுதியை விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்படலாம். இதற்கு சவிம்பி சம்மதிக்காவிட்டால் அமைதி எட்டாக் கனிதான். யுத்தம் தொடர்கதைதான்.

அங்கோலாவில் மக்கள் வாழும் பிரதேசங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படாமல் தனித்தனித் திட்டுகளாக உள்ளன. மலைகளாலும் அடர்ந்த காடுகளாலும் சூழப்பட்ட பகுதிகளில் பல்வேறு இனங்கள் தனித் தனியாக வாழ்வதால் இங்கெல்லாம் வாழும் மக்களுக்கு வேண்டிய உணவு முதலான அன்றாடத் தேவைகள் போய்ச் சேருவதில் பல முட்டுக்கட்டைகள் ஏற்படுகின்றன. அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களும் இப்பிராந்தியங்களில் சேவைபுரிய முடியாத நிலைக்குள்ளாகியுள்ளன. ஒழுங்கான பாதைகள் இல்லாமையினாலும் திடீர் வன்முறைகள் தலைகாட்டுவதனாலும் இப்பகுதிகளில் வாழும் மக்கள் பசி, நோய் மற்றும் போராட்டங்களினால் ஏற்படும் காயங்களினாலும் தினசரி மடிந்து கொண்டு வருகின்றனர். ஏறத்தாழ 30 இலட்சம் மக்கள் இவ்வாறு மிகப் பயங்கரமான சூழ்நிலையில் சிக்கித் தவிக்கின்றனர்.



மருத்துவமனைகளில் மருந்து கிடையாது. வரும் மருந்துகளையும் அதிகாரிகள் எடுத்து விற்று விடுகிறார்கள்.

## வழிதவறிய வகுப்பாசிரியர் 76 வருடம் கம்பி எண்ண வேண்டும்!




வழிகாட்டவேண்டியவர்களே வழி தவறலாமா? தவறிவிட்டார். அவர் ஓர் ஆசிரியர்.

இப்போது அந்த வகுப்பாசிரியர் வருந்திக் கொண்டிருக்கிறார். காரணம் அவருக்கு 76 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அவர் செய்த குற்றம் என்ன?

தனது வகுப்பில் படிக்கும் மாணவிகளோடு தகாத முறையில் நடந்து கொண்டார்.

தினம் ஒரு மாணவி தன் காமப் பசிக்குத் தேவை என்றார்.

சில மாணவிகள் அவரது விருப்பத்தையும் பூர்த்தி செய்தும் உள்ளனர்.

அந்த வகுப்பாசியரின் பெயர் ரொனால்ட் பிரைஸ். வயது 48. பசடோனாவில் உள்ள பால்ரிமோர் புறநகர் பள்ளியில் அவர் ஆசிரியராக இருந்தார்.

இவர் தன் வீட்டுக்கு மாணவிகளை அழைப்பாராம். வீட்டில் அவரது மனைவி இருக்கும் போதே அவருக்கும் தெரியாமல் தனது லீலைகளை நடத்துவாராம்.

வகுப்பாசிரியரின் வரம்பு மீறல்கள் வெளியே தெரிய விஷயம் வழக்கு மன்றத்துக்குச் சென்றது.

நீதிபதி கேட்டார்- "ஒரு வகுப்பாசிரியர் இவ்வாறு தனது மாணவிகளோடு முறைகேடாக நடக்கலாமா?"

அதற்கு அந்த வகுப்பாசிரியர் என்ன சொன்னார் தெரியுமோ?

"வகுப்பு நடக்கும்போது நான் வரம்பு மீறவில்லை. வகுப்பு முடிந்த பின்னர் அவர்கள் மாணவிகளுமல்ல. அவர்களும் நானும் சமமானவர்கள். எனவே நான் குற்றம் செய்வில்லை" என்றுகூறினார்.

நீதிமன்றம் வகுப்பாசிரியர் சொன்ன விளக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

மூன்று மாணவிகள் ஆசிரியரின் அத்துமீறல்கள் பற்றி சாட்சியம் அளித்தனர். எனினும் தம்மை அவர் கட்டாயப்படுத்தவில்லை என்றும் கூறினர்.

அரச தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் "ஒரு ஆசிரியரை மதித்தே பெற்றோர் பிள்ளைகளை அனுப்பிவைக்கின்றனர். அந்த நம்பிக்கைக்கு விரோதமாக அவர்கள் நடந்து கொள்வது மன்னிக்கமுடியாத குற்றம்" என்று வாதிட்டார்.

நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொண்டது. 76 வருடம் உள்ளே போ என்று அந்த ஆசிரியருக்கு தண்டனை விதித்தது.

## ஒரு தலைவன்- ஒரு துணைவி!

## "உலக ஆசைகள் தாய்நாட்டுக்கு ஈடாகாது"



பலஸ்தீன மக்களின் அன்புக்குரிய தலைவர் யாசீர் அரபாத்துக்கு 64 வயது.

20 மாதங்களுக்கு முன்னர் சௌஹாதா என்ற கிறிஸ்தவ பெண்ணை அவர் தன் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

சௌஹாதா கிறிஸ்தவ மதத்தில் இருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறிவிட்டார்.

தன் வாழ்க்கை எப்படியிருக்கிறது என்று அவர் சமீபத்தில் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்தார். அதன் ஒரு பகுதி இது:

"அது அத்தனை சுலபமல்ல. எங்கள் தலைவரை நீ திருமணம் செய்துகொண்டிருக்கலாம். ஆனால் பாதுகாப்பு நலன் கருதி நீ உன்னுடைய வேலையை மட்டும் பார்த்துக்கொண்டிருந்தால் போதும். என்று கூறிவிட்டார்கள்.

"பெயரளவில்தான் கணவன்-மனைவி. படுக்கை வெவ்வேறு இடங்களில்தான்.

"அவருடன் சேர்ந்து எங்கும் போக முடியாது. அவருக்கென்று ஆசையாக எதையும் சமைக்க முடிவதில்லை. சேர்ந்து சாப்பிடவும் முடிவதில்லை. அப்படிச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் குறைந்தபட்சம் 50 பேரையாவது சாப்பிட அழைத்து வருவார்.

"அவருக்காக புதிதாக ஏதாவது வாங்கினாலும் அவருக்குப் பிடிப்பதில்லை. எப்போதும் பச்சை சீருடையில் இருப்பதால் புதிய உடைகள் வாங்கினாலும் பிரச்சனைதான்.

"எப்போது எல்லாவற்றையும் இழப்பதாக உனக்கு தோன்றுகிறதோ அப்போதே உன்னுடைய தாய்நாட்டையும் நீ இழக்க வேண்டியிருக்கும். வேறு எந்த விசயத்திலும் ஈடுபாடு ஏற்படாது. இந்த உலகில் உள்ள ஆசைகளனைத்தையும் ஈடாகக் கொடுத்தாலும் நீ இழக்கும் தாய்நாட்டிற்கு ஈடாகாது.

"அவர் எனக்காக எல்லாவற்றையும் தயாராக வைத்திருக்கிறார். நான் விதவையாக நேர்ந்தாலும் கூட....."

## தோல்வி வரும் என்ற பயம் துரத்துவோம்

## இதோ சுலபமான நாலு வழிகள்

வெற்றி நிச்சயம் என்ற எண்ணமே தோல்வி அடைந்துவிடுவோம் என்ற பயத்தைத் துரத்தியடித்து விடும் சக்தி வாய்ந்தது. உளவியல் நிபுணரும் ஆய்வாளருமான டாக்டர் ஹரோல்ட் வோத் இதனைக் கூறுகிறார்.

ஏதாவது ஒரு துறையில் வெற்றி பெற்றவர்கூட வேறொரு துறையில் தவறிவிடுவோம் என்று அச்சம் கொண்டாலே போதும். இதுவரை வெற்றிகண்ட துறையிலேயே அவர் தோல்வியைத் தழுவிக்கொள்ள நேரிடும். இதனால் வேறு எந்தத் துறையிலும் தங்கள் கவனத்தைத் திருப்பப் பயந்து கொண்டேயிருப்பார்கள். இவ்வாறு டாக்டர் வோத் தெரிவித்தார்.

தோல்விபற்றிப் பயப்படுவோருக்கு டாக்டர் வோத் கூறும் ஆலோசனைகள்:-

- எந்தப் பொறுப்பினையும் மேற்கொள்ளுவதற்கு முன்னர் மேலதிகமான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்:

அத்துறையில் போதுமான தகவல்களை முன்னதாகவே சேகரித்துக் கொண்டீர்களானால் அச்சம் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை. தவிர அத்துறையில் ஈடுபடவேண்டுமென்ற ஆர்வமும் தூண்டுதலுமே அதிகரிக்கும்.


உரை நிகழ்த்துவதற்கு உங்களை அழைத்துள்ளார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். எப்பொருளைப் பற்றிப் பேசப் போகின்றீர்களோ அதே பொருளைப் பற்றிப் போதுமான தகவல்களைக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அக்குறிப்புகளை வரிசைப்படுத்தி தனியாகப் பேசிப் பழக அவகாசம் எடுத்துக்கொள்ளுங்கள்.

இதேபோல புதிய பலகாரம் ஒன்றினைச் செய்து உங்கள் நண்பர்களுக்குப் பகிர்ந்தளிக்க விரும்பினால் அதே பலகாரத்தை நீங்களாகவே இருதடவைகள் செய்து சுவைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள்.

- வெற்றியே உங்கள் முழு எண்ணங்களையும் வியாபித்திருக்கட்டும்!

பெரும்பாலானோருக்கு அவர்களுடைய கற்பனையே-கனவே நனவாகி விடுகிறது. வெற்றியீட்டாமல் தோல்வி கண்டு விடுவோம் என்று கற்பனை செய்தால் நிச்சயம் அவர்களுடைய எண்ணம் பலித்துவிடுகிறது.

நீங்கள் எடுத்த காரியம் நிச்சயம் உங்களுக்கு மகத்தான வெற்றியினைத் தரப்போவதாகவே அழுத்தமாகக் கருதுங்கள். உங்கள் எண்ணங்களே உங்களுக்கு அருந்துணையாக இருக்கும். கற்பனையிலேயே வெற்றி கண்ட உங்களுக்கு நிஜத்திலேயும் வெற்றி கிட்டும்.



- இந்த உலகில் நீங்கள் ஒருவரே சிறந்த நிலையில் உள்ளவர் என்று நடியுங்கள்-

சிலர் ஏதாவது ஒரு புதிய முயற்சியிலிறங்கும் போது, தன்னைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றிக் கவலைப்பட ஆம்பித்து விடுகின்றனர். மற்றவர்கள் என்ன கருதுவார்களோ-கூறுவார்களோ என்ற எண்ணங்களில் மூழ்க ஆரம்பித்து விடுவார்கள். இது தவறான கருத்தாகும்.

உங்களுடைய நடவடிக்கைகளை தவறாக விமர்சிக்கப் பலர் உங்களை அவதானித்துக் கொண்டுள்ளனர் என்ற பயம் உங்களை அணுகவிடலாகாது. நீங்கள் மேற்கொண்ட பணி பற்றி நீங்களே முடிவெடுக்க வேண்டிய தகுதி உங்களிடமே இருப்பதாக திடமாக நம்புங்கள். இதுவே உங்களை மகிழ்ச்சியில் மூழ்கடிக்கும்.

- பழைய வெற்றிகளை அடியொற்றி புதிய வெற்றிகளுக்கு அடிகோலுங்கள்-

ஏற்கனவே பல வெற்றிகளைக் கண்டிருப்பீர்கள். அவற்றை எண்ணிப் பாருங்கள். அந்த வெற்றிக்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சிகைளக் கருத்தில் கோருங்கள். இதனைவிட அடுத்த பணியினை வெற்றிகரமாக்க பழைய வெற்றிகளை உரமாக்கிக் கொள்ளுங்கள்.

உங்களுக்குப் பரிச்சயமில்லாத ஏதாவது ஒரு துறையிலிறங்கும் போது நீங்கள் முதலில் ஈடுபட்டு வெற்றிகண்ட துறையும் ஏற்கனவே உங்களுக்குப் பழக்கமற்றதாக இருந்தும் நீங்கள் அத்துறையில் வெற்றிகண்டதை நினைவு கூருங்கள். அந்த வெற்றியினைப் பெற நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகைளக் கருத்தில் கொள்ளுங்கள். வெற்றி உங்களைத் தேடிவரும்.

"உலகம் ஒரு நாடக மேடை;
அதில் தோன்றும் அனைவரும் நடிகர்களே."
-ஷேக்ஸ்பியர்-

அலசுவது - இராஜதந்திரி

# அநுராவின் கட்சி மாற்றம்: அரசியல் நாடகத்தில் ஒரு காட்சி மாற்றம்

கொழும்பு மாநகரில் அண்மைக் காலங்களில் இடம் பெற்ற மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் நிகழ்ச்சியாக திரு.அநுரா பண்டாரநாயக்காவின் கட்சி மாற்றம் விளங்குகின்றது.

திரு.அநுரா பண்டாரநாயக்கா தமது தந்தையாரால் ஸ்தாபிக்கப்பட்டு, தயாரால் பேணி வளர்க்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் விலகி, ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளார்.

அநுராவின் இக்கட்சிமாற்றம் அரசியல் வட்டாரத்தில் பெரும் ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது.

ஆயினும் இலங்கையின் அரசியல் நாடகத்தில் இது ஒரு முக்கிய காட்சி மாற்றமாகவே காணப்படுகின்றது.

உலக அரங்கில் தோன்றி மறையும் துயரங்கள், சந்தோஷங்கள், அழிவுகள், ஏமாற்றங்கள், இணைப்புக்கள், பிளவுகள் என்பன வெல்லாம் மனிதர்களை அவ்வப் போது பல்வேறுபட்ட அனுபவங்களுக்கு ஊடாகவும் கொண்டு செல்லுகின்றன.

இதன் காரணமாகவே பிரபல ஆங்கில நாடகாசிரியரான ஷேக்ஸ்பியர் , "உலகம் ஒரு நாடக அரங்கு; அதில் தோன்றும் மனிதர்களெல்லோரும் வெவ்வேறு கதாபாத்திரங்களே" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஷேக்ஸ்பியரின் மேற்குறிப்பிடப்பட்ட வாசகங்களுக்கு அர்த்தங்கொடுக்கும் சம்பவங்கள் சர்வதேச ரீதியாக மட்டுமல்ல, சின்னஞ்சிறிய இலங்கைத்தீவிலும் நாளொரு வண்ணமும், பொழுதொருமேனியுமாக இடம்பெற்றுவருகின்றன.

வடக்கு-கிழக்கில் யுத்தங்கள்; அதனால் தோன்றியுள்ள மரணங்கள், மற்றும் இடிபாடுகள். ஆனால் தெற்கே அரசியல் கட்சிகளிடையே பிளவுகள். கூடவே இரு துருவங்களாக நின்றிருந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் கை குலுக்கும் சந்தர்ப்பங்கள்.

இவற்றுக்கு மேலாக தலைநகரில் உலக அழகுராணிகளின் வருகை; அவர்களின் வதனங்கள், நளினங்களில் மூழ்கிப் போன நிலையில் இருக்கும் ஒரு கூட்டம்.

இதுதவிர 'கண்ணாமூச்சி ஆட்டம்' போல தலைநகரில் தொடர்ந்து கொண்டிருக்கும் கைதுகள், ஆட்கடத்தல்கள், பயமுறுத்தல்கள், மற்றும் தில்லுமுல்லுகள்.

எனவே இலங்கைத்தீவின் வெவ்வேறு பாகங்களிலும் இடம் பெற்றுக்கொண்டிருக்கும் பல்வேறு சம்பவங்களையும் உற்று நோக்கும் போது, ஷேக்ஸ்பியர் கூறிய நாடகக் காட்சிகளாகவே அவை விளங்குவதைக் காணமுடிகின்றது.

சோகரசம், இன்பரசம் இழையோடியுள்ள நாடகங்களின் இடைநடுவே நகைச்சுவைப் பாத்திரமொன்று தோன்றி பார்வையாளரைச் சிரிப்பிலாழ்த்தும்.

அத்தகையதொரு நகைச்சுவைப் பாத்திரமாகவே திரு. அநுரா பண்டாரநாயக்காவும் இலங்கையின் அரசியல் நாடகத்தில் தோற்றமளிப்பதுடன், பார்வையாளர்களான பொதுமக்களையும் நகைச்சுவையுடன் கூடிய ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளார்.

திரு.அநுரா பண்டாரநாயக்கா, குடும்பரீதியாகப் பெருமை பெற்ற ஒருவராக விளங்குகின்றார். ஏனெனில் இவர் இரு பிரதமர்களின் புதல்வராவார்.

தந்தையாரான திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஒரு பிரதான எதிர்க்கட்சியாக ஸ்தாபித்திருந்தார். அத்துடன் 1956ம் ஆண்டு அக்கட்சி மூலமாக ஆட்சியைக் கைப்பற்றி பிரதமராகவும் தெரிவாகியிருந்தார்.

ஆயினும் 1959ம் ஆண்டு திரு. பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட்டார். இதனையடுத்து அவரது விதவை மனைவியான திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டதுடன், 1960ம் ஆண்டு இலங்கையின் முதலாவது பெண் பிரதம மந்திரியாகவும் தெரிவாகியிருந்தார்.

இலங்கையின் முதலாவது பெண் பிரதம மந்திரி மட்டுமல்லாது, உலகின் முதலாவது பெண் பிரதம மந்திரி என்ற பெருமையையும் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா பெற்றிருந்தார்.

ஆனால் தமது குடும்பரீதியிலான அரசியல் பாரம்பரியங்களையெல்லாம் உதறித்தள்ளியவராகவே திரு. அநுரா பண்டாரநாயக்கா தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்துள்ளார்.

திரு. அநுரா பண்டாரநாயக்கா 1977ம் ஆண்டின் பொதுத் தேர்தலையடுத்து பாராளுமன்ற அரசியலில் காலடி எடுத்து வைத்தார்.

அத்தேர்தலையடுத்தே இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதான எதிர்க்கட்சியாக இடம் பிடித்திருந்ததுடன் அக்கட்சியின் செயலதிபரான அமரர் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்கியிருந்தார்.

ஆனால் அரசியமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணியினரை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றியதையடுத்து, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியே பிரதான எதிர்க்கட்சியாக மாறியதுடன், திரு. அநுரா பண்டாரநாயக்காவும் எதிர்க் கட்சித் தலைவரானார்.

1977ம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்ததையடுத்து, திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகள் நீக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு அநுராவிடமே பெரிதும் தங்கியிருந்தது.

1978ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையினால் பாராளுமன்றம் அதன் முக்கியத்துவத்தைப் பெரிதும் இழந்திருந்தது. இந்நிலையில் திரு. அநுரா பண்டாரநாயக்காவின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் பெரியளவில் சோபித்திருக்கவில்லை.

இருந்த போதிலும் திரு. அநுரா பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்கெதிராக சகல விதமான ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கண்டனக்கூட்டங்கள் என்பவற்றில் கலந்து கொண்டு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒருமைப்பாட்டைப் பேணுவதில் பெரும்பங்கு வகித்து வந்தார்.

இதே வேளை அநுராவின் சகோதரியான திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்க தமது கணவரான திரு.விஜயகுமாரணதுங்கவினால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

தொடர்ந்து திரு. விஜயகுமாரணதுங்க 1987ம் ஆண்டில் கொலையுண்டதையடுத்து சந்திரிக்கா அரசியலில் தீவிரமாகக் குதிக்கலானார்.

ஆனால் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் திருமதி. சந்திரிகா குமாரணதுங்க காட்டிய தீவிரம் குறுகிய காலமே நீடித்திருந்தது.

நாளடைவில் அக்கட்சியின் செயற்பாடுகள் பலவீனமடைந்த நிலையில் அதன் சிரேஷ்ட அங்கத்தவர்களிடையே உட்கட்சிப் பூசல்களும் மலியவே திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்க தமது தாயாரின் தயவை நாடலானார்.

இதனையடுத்தே தாயார் சிறிமாவோ, சகோதரி சந்திரிக்கா ஆகியோருடன் அநுரா பகைமையை வளர்த்துக்கொண்டதுடன், இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்தும் வெளியேற்றப்பட்ட நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் அநுரா சேர்ந்து கொண்டுள்ளார்.

குடியியல் உரிமைகளை மீளப்பெற்ற நிலையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா 1989ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட்டிருந்தார்.

அப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரசார இயந்திரமாக திரு. அநுரா பண்டாரநாயக்காவே இயங்கியிருந்தார்.

> "எனது தாயார் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்பதற்காகவே நான் வன்னிக் காட்டுக்குள் சென்று விடுதலைப் புலிகளுடன் பேசினேன்."

திரு.அநுரா பண்டாரநாயக்கா தென்னிலங்கையில் தாயாருக்கு ஆதரவாகப் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்ததுடன் வடக்கே தமிழீழ விடுதலைப்புலிக்ளின் ஆதரவைத் திரட்டுவதிலும் ஆர்வங் காட்டியிருந்தார்.

புலிகளின் ஆதரவைப் பெறுவதன் மூலம், தமிழ் மக்களின் ஆதரவைப் பெரிதும் பெறலாம் என்பதே அநுராவின் எதிர்பார்ப்பாக இருந்தது.

திரு. அநுரா பண்டாரநாயக்காவுடன் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்தலைவர் திரு. குமார் பொன்னம்பலமும் ஒன்றாக வன்னிக் காட்டுப்பகுதிக்குச் சென்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களுடன் உரையாடியிருந்தனர்.

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அன்று அநுராவுடன் சேர்ந்து திரு. குமார் பொன்னம்பலமும் ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்.

திரு. அநுரா பண்டாரநாயக்காவும், குமார் பொன்னம்ப்லமும் எதிர்பார்த்ததைப் போல தமிழீழ விடுதலைப்புலிகள் அன்று அவர்கள் பக்கம் திரும்பியிருக்கவில்லை.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலிலும் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தோல்விகண்டதுடன், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திரு. ஆர். பிரேமதாசா இலங்கை யின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவாகியிருந்தார்.

அடுத்து இடம் பெற்ற பொதுத் தேர்தலிலும் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டிருந்த போதிலும், எதிர்க்கட்சித் தலைவியாகவே அவரால் வரமுடிந்திருந்தது. ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் அவர் மீண்டும் தோல்வியையே தழுவியிருந்தார்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தோல்வி மேல் தோல்வியைச் சந்தித்த போதெல்லாம் திரு. அநுரா பண்டாரநாயக்கா அக்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

ஆனால் இந்த ஆண்டு இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களையடுத்தே திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடும்ப அரசியலிலும், கட்சி அரசியலிலும் விரிசல்கள் ஏற்படலாயின.

மேல்மாகாண சபையின் முதலமைச்சராக அநுராவின் சகோதரி திருமதி. சந்திரிக்கா குமாரணதுங்க தெரிவாகியிருந்தார். சந்திரிக்காவின் முதலமைச்சர் நியமனத் துக்கான அரசியல் ஒத்தாசைகள் தாயாரான திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவினால் பெரிதும் வழங்கப்பட்டிருந்தன.

எனவே சந்திரிக்காவுக்கு அரசியல் ரீதியாக கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தையடுத்து அநுரா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் எற்படுத்திய ரகளையே, இன்று அக்கட்சியில் இருந்து அவர் வெளியேற்றப்படவும் தொடர்ந்து அவர் ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்து கொள்ளவும் முக்கியகாரணமாக அமைந்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை இன்று அக்கட்சி ஒரு குடும்ப அரசியல் கட்சியாகவே விளங்கி நிற்கின்றது.

தாய், மகன், மகள் ஆகியோருக்கிடையிலான பூசல்களே கட்சியின் பிரதான பூசல்களாகவும் விளங்குகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதையடுத்து திரு.அநுரா பண்டாரநாயக்கா அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்த போது தமது தாயார் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்பதற்காகவே தமிழீழ விடுதலைப்புலிகளையும் வன்னிக் காட்டில் சென்று தாம் சந்தித்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

அநுராவின் இக்கருத்து, தாயாரின் வெற்றியை மட்டும் நிர்ணயிக்கும் வகையில் அவர் புலிகளிடம் சென்றதையே தெளிவுபடுத்துவதாக இருக்கின்றது.

அநுரா தனது உள்ளக்கிடக்கையை வெளியிடும் வகையிலேயே புலிகளிடம் தான் சென்றதற்கான காரணத்தைக் கூறியிருந்தார். ஆனால் அவரது இக்கூற்று ஒரு சராசரி தென்னிலங்கை அரசியல் வாதியின் மனப்போக்கைக் குறிப்பதாகவே இருக்கின்றது.

தமக்குச் சார்பான அரசியல் சூழ்நிலையொன்றை உருவாக்க வேண்டு மென்றால், தென்னிலங்கை அரசியல் வாதிகள் எத்தகைய விரோதிகளுடனும் உறவு கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்.

இதன் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிய திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிலும் சேர்ந்து கொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் தாம் உரியவகையில் மதிக்கப்படவில்லை என்று காரணம் காட்டியே திரு அநுரா பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்து கொண்டார்.

ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 1977ம் அண்டு பொதுத் தேர்தலில் தோல்வியடைந்ததையடுத்து, அக்கட்சிக்கு பெருமளவு நெருக்கடிகளைக் கொடுத்து வரும் கட்சியாகவே ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி விளங்குகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்பு ஆட்சியமைப்பதற்கு இடதுசாரிக்கட்சிகளே பெரிதும் உதவி ஒத்தாசை வழங்கியிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடத்திய ஆர்ப்பாட்டங்கள், மற்றும் ஏனைய எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கெல்லாம் இடதுசாரிகளே முன்னின்று தோள்கொடுத்திருந்தனர்.

இந்நிலையில் திரு. அநுரா பண்டாரநாயக்கா உண்மையிலேயே நேர்மையான அரசியலாளராக இருந்திருந்தால் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகிய தறுவாயில் ஓர் இடது சாரிக்கட்சியில் சேர்ந்திருக்க வேண்டும். இல்லையேல் தாமாகவே ஒரு புதிய கட்சியை ஆரம்பித்திருக்கவேண்டும்.

ஆனால் அநுரா அவ்வாறு எதனையும் செய்வதைவிடுத்து ஆளுங்கட்சியில் சேர்ந்துள்ளார். இச்சேர்க்கையின் உள்நோக்கம் ஆளுங்கட்சியில் தமக்கு சாதகமான ஓர் அந்தஸ்த்தைப் பெறுவதே என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

கடந்த மாதங்களில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பிரமுகரான திரு.காமினி திசாநாயக்காவே ஐக்கிய தேசியக்கட்சியில் சேர்ந்து கொள்ளுவார் எனப்பரவலாகப் பேசப்பட்டது.

ஆனால் எவருமே எதிர்பார்த்திராத வகையில் அநுராவின் கட்சிமாற்றம் ஆச்சரியப்படத்தக்க வகையில் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஓரிருவருடங்களாக தென்னிலங்கை அரசியலில் வியக்கத்தக்க முறையில் மாற்றங்கள் இடம் பெற்று வருகின்றன.

புதிய கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டும், புதிய முகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டும், அம்மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

பரஸ்பர விசுவாசம், அரசியல் நேர்மை என்பன குற்றுயிராகக் கிடக்கும் நிலையே தென்னிலங்கை அரசியலில் காணப்படுகின்றது.

இந்நிலையில் நாட்டின் பிரதான பிரச்னையாக விளங்கும் வடக்கு-கிழக்குப் பிரச்னை எத்தகைய விசுவாசத்துடன்? எத்தகைய கோணத்தில்? யாரால்? எப்போது அணுகப்படும்? என்ற கேள்விகள் விடை காணப்பட முடியாதவையாகவே இருக்கின்றன.






வன்னிக்காட்டில் புலிப் பிரமுகர்களைச் சந்தித்து திரு. அநுரா பேசியபோது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சிறுவர்களின் உடைகளுக்கு அளவெடுக்கும் முறை




சிறுவர்கள் ஒவ்வொருவருக்குமான உடைகளுக்கு தனித்தனியே அளவுகளை எடுப்பது நல்லது. பொதுவான அளவுகள் பெரும்பாலும் சில சிறுவர்களுக்குப் பொருத்தமாக இருக்கப்போவதில்லை. சிறுவர்களுடைய அங்கங்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமான அமைப்புகளையும் அளவுகளையும் கொண்டதாகவே இருக்கும். அவர்களுடைய உறுப்புகளும் வயதானவர்களைப் போல தெளிவுள்ளதாக இருப்பதில்லை. அத்துடன் அளவுகளைத் தெளிவாக எடுப்பதற்கு அவர்கள் ஒழுங்காக இருக்காமல் கை கால்களை ஆட்டிக்கொண்டும் உடம்பினை அசைத்துக்கொண்டும் இருப்பார்கள். இதனால் முக்கியமான சில இடங்களை மட்டும் குறிப்பாக வைத்து அளவுகளை எடுக்க வேண்டும். சில பிள்ளைகளின் உடல் அமைப்பு ஏனையவர்களுடைய வற்றைப் பார்க்கிலும் வித்தியாசமாக அமைந்திருக்கலாம். இவர்களுடைய அளவுகளை தெளிவாக எடுத்தலே அவர்களுக்கான உடைகளை சௌகரியமான முறையில் தைக்க உதவியாக இருக்கும்.

## மார்பு அளவு: படம் 1

மார்பின் சுற்றளவு அதிகமாக உள்ள இடத்தில் நாடாவினைச் சுற்றி அளவினைக் கணக்கிடுங்கள். நாடாவுக்கும் பிள்ளையின் மார்புக்குமிடையில் உங்கள் இரு விரல்களை உள்விட்டு அளவினைக் குறித்துக்கொள்ள வேண்டும். நாடாவின் நுனி முதுகினை நேராகச் சுற்றி வந்து மார்பின் நடுப்பகுதியில் நாடாவின் இடைப்பகுதியைத் தொடவேண்டும். 2 முதல் 3 வயதுக்குழந்தைகளுக்கு மார்புச் சுற்றளவைப் பார்க்கிலும் இடைச்சுற்றளவு சற்றுப்பெரிதாக இருக்கும் என்பதனால் இடையின் அளவையே மார்பு அளவுக்கும் வைத்துக்கொள்ள வேண்டும்.

## இடை அளவு- படம் 1

சிறுவர்களின் உடலிலுள்ள சிறு பகுதிகள் பெரும்பாலும் வெளிப்படையாகத் தோற்றுவதில்லை என்பதனால் இரு தோள்களையும் கிடை நிலை மட்டமாகக் கொண்டு அளக்கலாம். இடையினை அளக்கும் போது இருவிரல்களை நாடாவுக்கும் உடலுக்குமிடையில் வைத்துக் கணக்கிட்டுக் கொள்ளவும்.

## இடுப்புக்கீழ் (HIP): படம் 1

முழு வட்டமாக- அதிகமான அதைப்புடைய பகுதியை நாடாவைச்சுற்றி வளைத்து அளவெடுங்கள். இதற்கும் 2 விரல்களை உடலுக்கும் நாடாவுக்குமிடையில் செலுத்தி அளவிடுங்கள்.

## முதுகின் மைய அளவு-படம்: 2

கழுத்தின் பின் முனைப் பகுதியிலிருந்து இடைவரைக்கும் அளவெடுங்கள்.

## உடை அளவு-படம்: 2

கழுத்தின் முதுகுப்புற முனைப் பகுதியிலிருந்து கீழ் நோக்கி, உடையின் கீழ் மடிப்பு வரையிலான அளவினை எடுங்கள். இந்த அளவினை எடுக்கும்போது மேலிருந்து வரும் நாடாவை இடைப்பகுதியில் அழுத்தியபின் கீழ் மடிப்புவரை கணக்கிடல் வேண்டும். கோட்டுக்கான அளவானால், உள்ளாடைகள் வெளியே தெரியாமைலிருக்க 2 செமீ. அளவினை அதிகரித்துக் கொள்ளலாம்.

## கை நீளம்-படம்: 3

இதற்கு தோள் மூட்டிலிருந்து மணிக்கட்டு வரை அளத்தல் வேண்டும்.

## பாவாடை (குட்டை) அளவு-படம்: 4

முதுகிலிருந்து இடை வரையிலான நீளத்தைக் கழித்துவிட்டு இடையிலிருந்து கீழே எவ்வளவு நீளம் வேண்டுமோ அதற்கேற்ற அளவினை எடுத்துக் கொள்ளலாம்.

## பக்க அளவுகள்-படம்: 4

இடையிலிருந்து கணுக்கால் வரை பக்கவாட்டில் அளந்து கொள்ள வேண்டும்.

## இருக்கை அளவு-படம்: 5

சமமான இருக்கையில் சிறுமியை அல்லது சிறுவனை இருக்க வைத்து இடையிலிருந்து இருக்கைக்கிடையிலான உயரத்தினை, பக்கவாட்டாக எடுக்க வேண்டும். பிள்ளைகள் இருக்கையில் ஒழுங்காக இருப்பதில்லை என்பதனால் இந்த அளவினை எடுப்பது சற்றுக் கடினமாக இருக்கும். இதனால் உத்தேசமாகக் கணக்கிடுவதும் நல்லது.

## தலையின் சுற்றளவு-படம்: 5

பெரும்பாலும் சிறுவர்களின் தலைகள் பெரிதாகவே இருக்கும். இதனால் உடல் அளவுகளை மட்டும் கணக்கிட்டு உடை தயாரித்தால் தலையால் போடும் சட்டைகள் சில சந்தர்ப்பங்களில் தலையால் போடும்போது தலையைத் தாண்டி கழுத்தால் கீழே இறங்குவது முடியாமற் போய்விடலாம். இதனால் தலையின் சுற்றளவை முதலில் அளந்து பார்த்து உடையின் மேல் திறப்பைத் தைப்பது அவசியமாகும். தலையின் சுற்று வட்டத்தில் பெரிதாகவுள்ள இடத்தை கிடை நிலையாக அளக்க வேண்டும். அளக்கும் போது, நாடாவுக்கும் தலைக்குமிடையில் இரு விரல்களை நுழைத்துக்கொள்ள வேண்டும்.

## லேடீஸ் ஸ்பெசல்

கதையில் குழந்தை வளர்ப்புக் கலையும் உண்டு

## நடையலங்காரம்.... -புஷ்பா அக்கா-

வழக்கமாக காலையில் சரியாக ஆறரை மணிக்கே தானாக எழுந்து விடுவான். இன்று ஏழுமணியாகியும் இன்னும் எழுந்திருக்கவில்லை.

"சுஜே.....சுஜே எழுந்திரு. மணி ஏழாகுதே ஏன் இன்னும் படுத்திருக்கிறே? இந்தா அம்மா தம்பிக்கு ரீ போட்டுக்கொண்டு வந்திருக்கேன்.... எழுந்திரு டா கண்ணு...."

தாய் கனகம் 3 வயது மகனை எட்ட நின்றே அழைத்துப் பார்த்தாள். சுஜேயின் உடல் நெளிந்ததே தவிர அவன் எழுந்திருக்கவில்லை. கூட முனகல் சப்தம் வேறு கேட்கப் பதறிப்போன கனகம் ஓடிப்போய் மகனைத் தொட்டாள். துடி துடித்தாள். சுஜேயின் உடல் அனலாகக் கொதித்தது.

அலுவலகம் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த கணவன் கேசவனிடம் ஓடினாள். "என்னாங்க சுஜேய வந்து பாருங்க... அவன் உடம்பு நெருப்பா இருக்குங்க".... கனகம் அழுதே விட்டாள்.

குளித்துவிட்டுத் தலை துவட்டிக் கொண்டிருந்த கேசவன் ஓடினான். சுஜேயின் உடம்பு அவனுடைய குளித்துக் குளிர்ந்திருந்த கைக்கு மேலும் அதிக சூடாகத் தெரிந்தது.

சற்று நேரத்தில் மருத்துவமனையில் டாக்டருக்கு முன்னால் கணவனும் மனைவியும் கலவரமடைந்தவர்களாகக் காணப்பட்டனர். கட்டிலில் அனுங்கிய படியே படுத்துக்கிடந்த சுஜேயின் உடலை அங்கும் இங்கும் பரட்டியபடி டாக்டர் பரிசோதனை செய்து கொண்டிருந்தார். 10 நிமிடங்கள் பரிசோதனையின் பின்னர், "நேற்று என்ன சாப்பாடு கொடுத்தீங்க....?" -டாக்டர்.

"வழமையாகக் கொடுப்பது போலத்தான் மத்தியானம் சோறு, கறி; இரவு இடியப்பம்...." கனகம்.

டாக்டர் சுஜேயின் கால்களைக் கவனித்தார். முழங்கால்கள் சற்று வீங்கியிருந்தன. மெதுவாக முழங்காலில் கையை வைத்தார். 'வீர்' என்று கத்தினான் சுஜே. அவனுடைய பாதங்களிலும் அதைப்பிருந்தது.

"நேற்று உங்க மகன் ஓடியாடி விளையாடினானா?"

"இல்ல டாக்டர்.... நேற்று என்னோடதான் வந்தான்..."

"ஓஹோ...எங்கெல்லாம் போனீங்க?"

"என் சினேகிதியோட 'ஷொப்பிங்' போனோம்."

"எங்கெல்லாம் போனீங்க..? எவ்வளவு தூரம் நடந்திருப்பீங்க...?"

"........"

கனகம் பதில் சொல்லத் தயங்கினாள்.

"டாக்டர் கேட்கிறாரே......சொல்லன். உங்களுக்கு கதைக்கிறதுக்கு சினேகிதிகள் மட்டும் கிடைத்து விட்டால் போதுமே....பிள்ளையையும் மறந்து புருசனையும் மறந்து....ஏன் உலகத்தையே மறந்திடுவீங்களே..."

கேசவன் சூழ்நிலையையே மறந்து சற்று உரத்த குரலில் பொரிய ஆரம்பித்தான்.

"மிஸ்டர் நீங்களும் இப்ப எங்க இருக்கிறீங்க என்பதை மறந்திட்டீங்க...."

"சொறி டாக்டர்....இவ ஷொப்பிங்என்ற பேரில....இந்தப் பச்ச மண்ணையும் தாங்க போற இடங்களுக்கெல்லாம்..."

"போதும்....எனக்குத் தெரியும்....நீங்க இரண்டு பேரும் என் ரூமில போய் உக்காருங்க.... நான் பேஷன்ரைக் கவனிக்கிறன். அவனுக்கு ஒண்ணுமில்ல.... நான் மருந்து கொடுக்கிறன். அரை மணி நேரத்தில அவன வீட்டுக்குக் கூட்டிக்கிட்டுப் போகலாம்."

டாக்டர் இருவரையும் அனுப்பிவிட்டு தன் அறைக்கு வந்தார். கேசவன் சற்றுக் கடுகடுப்புடன் காணப்பட்டான். கனகத்தின் கண்கள் குளமாகியிருந்தன.

"அம்மா..... நம்ம தாய்மார் தங்கள் குழந்தைகளை தெருவில் கையைப் பிடித்தபடி அழைத்துக்கொண்டு போவதை நான் பார்த்துப்பரிதாபப்பட்டிருக்கிறேன். இவர்கள் தங்களுக்குரிய சாதாரண வேகத்தில் நடந்து செல்வார்கள். பெரியவர்களுடைய கால் எட்டுகள் அகலமாகவே இருக்கும். அவர்களுடைய ஒரு எட்டுக்கு குழந்தைகள் தங்கள் சின்னஞ்சிறு கால்களால் நான்கு எட்டுகளையாவது வைக்க நேரிடும். ஆகவே தாய்மார் சாதாரணமாக நடக்கும் போது குழந்தைகள் வேகமாக ஓட வேண்டியிருக்கும்.

"குழந்தைகள் களைப்படைந்து, தன்னைத் தூக்கும்படி கெஞ்சும். ஆனால் தாய்மாரோ "இது தானே உன்னை நான் எங்குமே கூட்டிவாறதில்லை? இப்பிடிக்கரச்சல் குடுத்தால் நாளைக்கு உன்னை எங்குமே கூட்டிப் போகமாட்டேன்." இவ்வாறு தாய்மார் குழந்தையைக் கடிந்து கொள்வார்கள். வெளியுலகப் புதினங்களைப் பார்த்து அறிய ஆர்வம் அதிகம் கொண்ட குழந்தைகள் களைப்பையும் கால் நோவையும் பொருட்படுத்தாமல் தாய்மாரின் கையைப் பிடித்துக்கொண்டு ஓடிக் கொண்டிருக்கும்.

"இதே கதிதான் உங்க மகனுக்கும் நேற்று நடந்திருக்கிறது. நீங்கள் வெய்யிலில் நடந்து சந்தைகளில் அலைந்து திரியும் போது, உங்களுடைய நிலையினை மட்டுமே கருத்தில் கொள்வீர்களே தவிர அந்தப் பச்சிளம் பாலகனின் பரிதாப நிலையினை எண்ணிப் பார்த்திருக்க மாட்டீர்கள்...."

டாக்டர் நேற்று நடந்த சம்பவங்களை நேரடியாகக் கண்டவர்போல் தத்ரூபமாக வர்ணித்தவை அத்தனையும் உண்மை என்பதை கனகத்தின் மனச்சாட்சி ஒப்புக் கொண்டது. அத்துடன் நீண்ட நாட்களின் பின்னர் சந்தித்த விமலாவைக் கண்டதும், ஏற்பட்ட உசாரில் அவளுடன் இரண்டு கிலோமீட்டர் வரை அந்த வெய்யிலில் நடந்து கொண்டிருந்த வேளையில் அத்தனை தூரம் தன்னுடைய கையில் தன் பிஞ்சுக் கரத்தை நுழைத்துக் கொண்டு வந்த அந்தக் குழந்தையினை அவள் முற்றாக மறந்து விட்டிருந்தாள் என்பதை இப்பொழுது கனகம் நினைவுபடுத்திப் பார்க்கிறாள்.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளில் கவனம் செலுத் தாமல் விடுவதில்லை என்பது என்னவோ உண்மைதான். இருப்பினும் வெளியில் செல்லும் போது சுற்றாடல் சூழ்நிலைகள் அவர்கள் கவனத்தை ஓரளவு கவர்ந்து விடுவதனால் சில சந்தர்ப்பங்களில் இத்தகைய நிலை ஏற்பட்டு விடுகிறது.

குழந்தைகளை தங்களுடன் நடையில் அழைத்துச் செல்லும்போது அவர்களுடைய குறுகிய நடைக்கேற்ப நாமும் நடக்க வேண்டுமே தவிர, நமது வேகத்துக்கு ஈடு கொடுக்க அவர்களை இழுத்துச் செல்லலாகாது. மூன்று வயதுக் குழந்தையானால், ஒரு கிலோமீட்டர் தானும் அதனால் ஒரே சீராக நடக்க முடியாமற் போய்விடும். அடிக்கடி தூக்கி எடுத்துக்கொள்ள வேண்டும்.

சந்தைகளுக்கோ கடைத் தெருவுக்கோ சாமான்கள் வாங்கச் செல்லும் போது நிச்சயமாகக் குழந்தைகளை அழைத்துச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். பாரச்சுமையோடு குழந்தையையும் சுமக்க உங்களால் முடியாதல்லவா...!



## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை

ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள் ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.


மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (17 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.


பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

## வீட்டுக் குறிப்புகள்



சமையலறையில் இட நெருக்கடி உள்ளதா? அலுமாரி வசதி இல்லையா? கவலைப் படாதீர்கள். மரப்பலகை வாங்கி நான்கு பக்கச் சுவரிலும் அலுமாரி செட் செய்யச் சொல்லுங்கள். அதில் பொருட்களை அடுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.



குறுகலாக இருக்கும் அறையைப் பெரிதாக இருக்கும்படி காட்ட வேண்டுமா? சிரமம் பாராமல் அறையின் ஒரு பக்கச் சுவர் முழுக்க பெரிய முகம் பார்க்கும் கண்ணாடியைப் பொருத்தி விடுங்கள். அறையினுள் இருக்கும் பொருட்கள் எல்லாம் கண்ணாடியில் பிரதிபலித்து அறை பெரிதாக இருக்கும்படி காட்டும். அதற்காக, நிறைய பொருட்களைக் குவித்து வைக்காதீர்கள்.



கறிவேப்பிலை இலையை அதிகமாக வாங்கி விட்டீர்களா? சமைத்தது போக மிகுதியாக உள்ளதை ஒரு பொலித்தீன் பையில் போட்டுக் கட்டி ஃபிரிட்ஜில் வைத்து விடுங்கள். ஒரு வாரமானாலும் காய்ந்து போகாமல் இருக்கும்.

வீட்டில் மரத்தாலான அலுமாரிகள் (Racks) இருக்கிறதா? பின்பக்கம் திறந்தபடி தானே உள்ளது. இந்த அலுமாரியில் செருப்பு, பழைய தட்டுமுட்டுச்சாமான்கள் வைத்தால் பின்பக்கம் விழுந்து, உங்களுக்கு வேலை வைக்கிறதா? பெரிய அட்டைப் பெட்டிகள் இருந்தால் பிரித்து, அதை அலுமாரியின் பின்பக்கம் வைத்து மூடி விடுங்கள். எந்தப் பொருளும் கீழே விழாது. தேவைப்பட்டால் சுவரின் கலருக்குப் பொருத்தமான கலர் பேப்பர் வாங்கி அட்டையின் மீது ஒட்டி விடுங்கள். பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

## சமைப்போம் சுவைப்போம்

### பருத்தித்துறை வடை

**தேவையானவை:**

உழுந்து-1/2 சுண்டு
கோதுமை மா-2 சுண்டு
தேங்காய்ப்பூ-1/2 பாதி
பெருஞ்சீரகம்- ஒரு தேக்கரண்டி
உப்புத்தூள்-அளவாக
காய்ந்த மிளகாய்- 4
எண்ணை- பொரிப்பதற்கு அளவாக

**செய்முறை:**

உழுத்தம் பருப்பை முதல் நாளே தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். காய்ந்த மிளகாயை மொரு மொருப்பாக இடித்து எடுக்க வேண்டும். கோதுமை மாவுடன் ஊறவைத்த உழுத்தம் பருப்பையும், தேங்காய்ப்பூ, பெரும் சீரகத்தூள், உப்புத்தூள், மிளகாய்த்தூள் ஆகியவற்றையும் போட்டு, தண்ணீர் விடாமல் பிசைந்து எடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் சிறிது சிறிதாக உருட்டி வாழை இலையில் வைத்து சிறிதளவு எண்ணையைத்தடவி உள்ளங் கையளவு தட்டையாகத் தட்டி எடுங்கள். வாணலியில் எண்ணையை ஊற்றி அளவான சூட்டில் அடுப்பிலேற்றி கொதித்ததும் தட்டைகளைப் போட்டு பொன்னிறமானதும் எடுத்து, எண்ணை வடிந்து ஆறியதும் தண்ணீர்ப்பிடிப்பில்லாத டப்பாக்களில் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். எங்காவது பயணம் போகும் போதோ, திடீர் விருந்தினர் வீட்டுக்கு வந்தாலோ எடுத்துப் பரிமாறலாம். நீண்ட நாட்களுக்கு இதனைப் பத்திரமாக வைத்திருக்கலாம்.

தேவிகா சிதம்பரநாதன்
வெள்ளவத்தை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

தகவல் பெட்டி

# பூனை பாதி - நாய் பாதி

## புதிய உயிரினம் உலக அதிசயம்!



பூனை முகம்
நாய் உடம்போடு கிட்டி



நாய் முகம்
பூனை உடம்போடு
பப்ஸ்

ஆராய்ச்சிகள் பலவகை. புதிய புதிய ஆராய்ச்சிகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

மினசோட்டாவிலுள்ள மினியோப்போலிஸ் நகரில் இருப்பவர் றிச்சாட் பாண் என்னும் ஆராய்ச்சியாளர்.

புதிய உயிரினவர்க்கத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக றிச்சாட் கடுமையாக உழைத்தார்.

1989ம் ஆண்டில் இருந்தே அந்த முயற்சியில் ஈடுபட்டு வந்தார்.

அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்.

பல மாதமாக சிந்தித்து, தனது நண்பர்களுடன் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு 1989 நவம்பர் மாதம் உயிரணுக்களை மாற்றும் வேலையை ஆரம்பித்தார்.

நாயின் கருவினை எடுத்து பூனையின் உயிரணுவுடன் இணைத்தனர்.

இதே போன்று பூனையின் கரு நாயின் உயிரணுவுடன் இணைக்கப்பட்டது.

சோதனை முயற்சி வெற்றிச் சாதனையாக மலர்ந்தது.

நாயின் உடலும் பூனையின் தலையும் கொண்ட பிராணியும் பூனையின் உடலும் நாயின் தலையும் கொண்ட பிராணியும் உருவாகின. உயிர் பெற்று உலாவத் தொடங்கின.

றிச்சாட்டுக்கு அளவற்ற மகிழ்ச்சி. பத்திரிகையாளர்களை அழைத்து தன் சாதனையை விளக்கினார்.

புதிய உயிரினங்கள் இரண்டையும் காட்டினார்.

ஒன்றுக்கு கிட்டி என்றும் இரண்டாவதற்கு 'பப்ஸ்' என்றும் பெயரிட்டுள்ளார்.

இரண்டு குட்டிகளும் நாய்க்கும் பூனைக்கும் உள்ள பொதுவான குணங்களைக் கொண்டிருப்பதாக றிச்சாட் கூறுகிறார்.

மனிதர்களுடன் இவை இணக்கமாகப் பழகுமாம். ஆராய்ச்சி வெற்றி பெற்றுள்ளபோதும் இது இயற்கைக்கு மாறானது என்ற கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

அதனால் டாக்டர் றிச்சாட் தனது ஆராய்ச்சியை விரிவாக்கத் தயங்குகிறார். ■

## ஒரே படுக்கைதான்!


சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய நாடுகளில் ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே அறையில் ஒரே படுக்கையில் தூங்குவார்கள்.



அவ்வாறு தூங்கிய காலத்தில் ஒற்றுமை உணர்வு இருந்தது என்று கூறுகிறார்கள்.

பாய்கள், மெத்தைகள் என்று தனித்தனியே பிரிக்கக் தொடங்கித் தான் மனிதனில் மனிதன் பாயும் வேற்றுமையும் தோன்றியதோ!

இருக்கும்.



## சுல்தானின் தாராளம்! இதுதாண்டா ரிப்ஸ்!!

உலகில் பெரும் பணக்காரர் வரிசையில் முதலாம் இடத்தில் இருப்பவர் புறூனே நாட்டு சுல்தான். அந்த சுல்தான் மன்னனின் பெரும் குணத்தை நீங்கள் அறிய வேண்டாமா?

சமீபத்தில் சைபிரஸ் நாட்டில் பொதுநல அமைப்பு நாட்டுத் தலைவர்களின் மாநாடு நடைபெற்றது.

சுல்தான் மன்னரும் அவரது குழுவினரும் நிக்கோசியா நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தனர்.

174 அறைகளில் அவர்கள் தங்கியிருந்தனர். அத்தனை பரிவாரங்கள்.

4 இரவுகளும் மூன்று பகல்களும் அங்கு இருந்ததால் ஏற்பட்ட செலவு எவ்வளவு தெரியுமோ?

ஒரு இலட்சத்து எழுபதாயிரம் அமெரிக்க டொலர்கள்.

நமது நாட்டு பெறுமதிப்படி 81 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்கள்.

ஹோட்டலை காலி பண்ணும் தினத்தன்று அந்த ஹோட்டல் நிர்வாகியை சுல்தான் கூப்பிட்டார்.

ஒரு பெட்டியைக் கொடுத்தார்.

அதில் டொலர்கள் இருந்தன.


நிர்வாகி எண்ணிப் பார்த்தார். ஒரே வியப்பு. அதில் 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஹோட்டலில் ஏற்பட்ட செலவு போக மேலதிகமாக 3 இலட்சத்து 30 ஆயிரம் டொலர்கள் இருந்தன. நமது நாட்டுப் பெறுமதிப்படி 1 கோடியே 58 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்கள்.

நிர்வாகி புரியாமல் விழித்தார். சுல்தான் அமைதியாக சொன்னார்.

அந்த 3 இலட்சத்து 30 ஆயிரம் டொலர்கள் ஹோட்டலில் பணிபுரியும் 320 ஊழியர்களுக்கு என் அன்பளிப்பாகப் பகிர்ந்து கொடுத்துவிடுங்கள்.

உலக வரலாற்றில் இதுவரை கொடுக்கப் பட்டதில் அதிக கூடிய 'ரிப்ஸ்' இதுதான்.

யப்பா!



## ஜென்னி உள்ளாள் பழுதுக்கு பயப்படவேண்டாம்!


ஜென்னி ஷிமிசு என்ற அழகான பெண்ணுக்கு வயது 22.

அவரிடம் ஒரு அதிசய ஆற்றல் இருக்கிறது. மோட்டார் வண்டியில் பழுது ஏற்பட்டால் எங்கே பழுது என்று கண்டறிய எவ்வளவு நேரமாகும்?

பழுதுபார்ப்பவர்கள் கூட எங்கே பழுது என்று தலைமுடியைப் போட்டு பிய்த்துக்கொள்வதும் உண்டு. ஆனால் ஜென்னி இருக்கும் போது அந்த பிரச்சனையே இல்லை. மோட்டார் வண்டியின் இயந்திரம் இயங்கும்போதே எழும் சத்தத்தைக் கொண்டே எங்கே பழுது எப்படியான பழுது என்று ஜென்னி கண்டுபிடித்துவிடுவாள். இப்படியான அபூர்வ திறமை கொண்ட ஜென்னி விளம்பரங்களுக்கு போஸ் கொடுக்கும் மொடல் அழகியாக இருந்து வருகிறார்.

ஜென்னிக்கு இன்னொரு பழக்கமும் உண்டு. தனக்கு விருப்பமான படங்களை உடலில் பச்சை குத்திக்கொள்வார். கையைப் பார்த்தாலே தெரிகிறது அல்லவா?

www.padippakam.com



நம்ம அண்ணாச்சி படத்தில் கம்பீர உடல் மிடுக்கோடு சரத்குமார்




காலேஜ் ரோஜா படத்தில் ரோஜா கவர்ச்சியில் எல்லைக்கே சென்று விட்டார். கமரா புகுந்து விளையாடியிருக்கிறது. தமிழில் நம்பர் வன் ஆகும் போட்டியில் காலேஜ் ரோஜாவைத்தான் ரோஜா நம்பியிருக்கிறார். போதையேற்றும் கவர்ச்சியால் வாகை சூடும் முயற்சி.



அமைதிப்படையில் வித்தியா ச

முன்னணி நடிகர்களில் ஒருவராக வளர்ந்து வருபவர் சரத்குமார்.

இடையிலே சில படங்கள் தோல்வி. இப்போது ஐ லவ் இந்தியா சரத்குமாரை கைதூக்கி விட்டிருக்கிறது.

எவரோடும் இயல்பாகப் பேசும் சரத்குமாரை எமது சினிமா நிருபர் சந்தித்து பேட்டி கண்டபோது சரத் சிந்திய கருத்துக்கள் இங்கே.

# நாயகிகள் மூவர் - நாயகன் ஒருவர்
# சரத்குமாருடன் ஒரு பேட்டி!

**கேள்வி:** பட தயாரிப்பாளராக நீங்கள் நடிக்க வந்தது எப்படி?

**பதில்:** எதேச்சையாக நிகழ்ந்தது. என்னை இப்போதும் ராவுத்தரும் விஜயகாந்த்தும் அங்கீகரித்தனர். எனது உடலமைப்பும் அதை நான் கவனமாக வைத்திருக்கும் முறையும் 'புலன் விசாரணை' மூலம் ஒரு நடிகனாகும் வாய்ப்பை ஏற்படுத்திக் தந்தன. அந்தப் படம் என்னை வெளிப்படுத்திய முறையால் நான் விரைவிலேயே கதாநாயகனாக உயர்த்தப்பட்டேன். கேப்டன் பிரபாகரன் இதற்கு ஒரு முன்னோட்டமாக அமைந்தது. கே.எஸ். ரவிக்குமாரின் 'சேரன் பாண்டியன்' முதலிய படங்களிலும் பவித்ரனின் சூரியனிலும் நான் புகழ்ந்து பாராட்டப்பட்டேன். இதன் தயாரிப்பாளர்கள் ஆர்.பி. சவுத்திரிக்கும், குஞ்சுமோனுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.'

**கேள்வி:** தொடர்ந்து சில படங்கள் தங்களுக்கு வெற்றிவாகை சூட்டவில்லையே!

**பதில்:** அதற்குக் காரணம் எனது கவனக்குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். கதைகளில் எனது பாத்திரத்தன்மைகளை நான் பரிசீலிக்காமல் விட்டுவிட்டேன். இப்போது அதில் கவனம் செலுத்துவது மிக மிக அவசியம் என்கிற உணர்வோடு இருக்கிறேன்.

**கேள்வி:** இப்போது வெளியாகியிருக்கும் ஐ லவ் இந்தியா பிரமிப்பூட்டும் வகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. இது தங்களுக்கு வெற்றிவாகை சூட்டுமா?

**பதில்:** இப்போது தானே வெளியாகியிருக்கிறது? இது போன்ற பிரமிப்பூட்டும் கதைகளுக்கு வெற்றிகள் கிடைத்துக்கொண்டிருக்கிறது. எனவே இதற்கும் வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

**கேள்வி:** இயக்குநர் தளபதி இயக்கத்தில் ஒரு படம் செய்து கொண்டிருக்கிறீர்களா?

**பதில்:** ஆமாம். அந்தப் படம் குறிப்பிட்ட தேதிகளில் படப்பிடிப்பு நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு தாமத மாகி வருகிறது. இனி அதன் நிலைமை சீராகும் என்பது என் நம்பிக்கை. அதில் நான் மூன்று வெவ்வேறு குணச் சித்திரங்களை வெளிப்படுத்துகிறேன். ஒரு போலிஸ் அதிகாரி, வழக்கறிஞர், அண்ணாச்சி ஆகிய மூன்று மாறுபட்ட கெட்-அப்புகள். படத்தின் பெயர் "நம்ம அண்ணாச்சி" ஹீரா, சரண்யா, ராதிகா மூவரும் கதாநாயகிகள்.

**கேள்வி:** இது ஒரு தகவல். படத்தின் சிறப்பு எப்படி இருக்குமென்று நம்புகிறீர்கள்?

**பதில்:** வெற்றி என்பதையும் தோல்வி என்பதையும் படம் வெளியாகும் முன்பே எப்படித் தீர்மானிப்பது?

**கேள்வி:** கட்டபொம்மனுக்காக நீங்கள் போன வேஷம் போட்டது பலரையும் அசத்தியதாக அறிந்தோமே. வேறு என்னென்ன படங்கள் செய்கிறீர்கள்?

**பதில்:** கதையில் அப்படி ஒரு மாறுவேஷம் அவ்வளவுதான்! இது போக ஆர்.பி. சவுத்திரியின் கேப்டன், அரண்மனைக் காவலன், சிவாஜி பிலிம்ஸ் படம், முக்தா படம், ராஜகாளியம்மன் படம் போன்றவையும் கைவசமிருக்கின்றன. இவையே 1994 வரை சரியாக இருக்குமென்று நினைக்கிறேன். புதிய கதைகளைக் கேட்டுப் பரிசீலிப்பதில் அதிகமான அக்கறை செலுத்துகிறேன்.

**கேள்வி:** அரண்மனைக் காவலனுக்காகத் தாங்கள் ஒரு பாடல் பாடியிருக்கிறீர்களே! உங்களுக்குப் பாடவும் வருமா?

**பதில்:** வைரமுத்துவின் பாடல் தயாரிப்பாளர்களின் வற்புறுத்தலுக்காகப் பாடிப்பார்த்தேன். கதாநாயகர்கள் சொந்தக் குரலில் பாடுவது சில நேரம் இயல்பும் விரும்பப்படுகிறது. மறுப்பானேன். பாடியிருக்கிறேன். கேட்டுப்பார்த்துவிட்டுச் சொல்லுங்கள். நன்றாக இருந்தால் மறுபடியும் பாடுகிறேன். (சிரிக்கிறார்) இயல்பில் ஒரு முரட்டுத்தோற்றம் தெரிந்தாலும் பேசும்போது சரத்குமாரிடம் வார்த்தைக்கு வார்த்தை நகைச்சுவை இழையோடு ரசிக்கத் தக்க ஒரு விஷயம். எதையும் சகஜமாகவே எடுத்துக்கொள்கிற குணம். காதல் திருமணம் செய்து கொண்டவர் இவர். மனைவி சாயாதேவியும் கலையுணர்வு கொண்டவர். அலங்காரத்துறையில் பட்டம் பெற்றுள்ள அவருக்கு வீட்டை மட்டுமில்லை கணவரையும் நேர்த்தியாக வைத்திருப்பதில் அதிக விருப்பம். வரலட்சுமி என்றொரு செல்லமகள் இருக்கிறாள். படு சுட்டி.





## ரஜனி+ மணிரத்தினம்= புதிய படம்!

பிரபல படத்தயாரிப்பாளர் ஜீவி எனப்படும் ஜி.வெங்கடேஸ்வரன் புதுடில்லியில் மைக்கேல் ஜாக்சன் இசை நிகழ்ச்சியை நடத்துவதில் மும்முரமாக இருக்கிறார். 6 கோடி ரூபா வசூலாகும் என்று எதிர்பார்க்கிறார். ரஜனிகாந்த் தனது தயாரிப்பில் நடிக்கப்போவதில் மாற்றம் கிடையாது என்கிறார் ஜீவி. ஏற்கனவே ஜீவி. தயாரிப்பில் ரஜனி நடித்த படம் தளபதி. ஜீவி. அடுத்து ரஜனியை வைத்து இயக்கும் படத்திற்கு சுரேஷ்கிருஷ்ணாதான் இயக்குநர் என்று சொல்லப்பட்டது. இப்போது மணிரத்தினம் இயக்குவதாக எண்ணம் உண்டாம். ஜீவியின் சொந்தச் சகோதரர்தான் மணிரத்தினம்.

## மினி சினி

★ பேபி ஷாமிலிக்கு முன்பே குட்டி நட்சத்திரமாக திரையுலகில் வெற்றிப் பவனி வந்தவர் ஷாமிலியின் அக்கா பேபி ஷாலினி. 'இப்போது அவர் நன்கு வளர்ந்து விட்டார். விரைவில் கதாநாயகியாகப் படமொன்றில் நடிக்கவுள்ளார்.

★ பம்பாயிலிருந்து வந்து ஊழியன் படத்தில் கதாநாயகியாக நடிக்க வந்தவர் வினிதா. அப்படம் வெளிவருவதற்கு முன்பே மேலும் இரு தமிழ்ப் படங்களிலும் ஒரு தெலுங்குப் படத்திலும் நடித்தார். தற்போது அவர் சம்பந்தப்பட்ட படப்பிடிப்புக்கள் முடிவடைந்துள்ளதால் மீண்டும் பம்பாயில் சென்று தங்கியுள்ளார்.

★ பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடல்களைப் பாடுவதில் மட்டுமல்ல நடிப்பதிலும் இப்போது அதிக ஆர்வம் காட்டி வருகிறார். தற்போது மணிரத்தினத்திடம் உதவியாளர் இயக்கும் படமொன்றில் குஷ்பூவின் தந்தையாக நடிக்கவுள்ளார்.

★ பாதுகாப்பு என்ற படத்தைத் தயாரித்து கதாநாயகியாக நடித்தவர் அபிலாஷா. பல இடையூறுகளால் இப்படம் தாமதமாக வெளியிடப்பட்டது. இப்படம் சுமாராகவே ஓடியிருப்பதால் அபிலாஷாவுக்கு போட்ட பணம் திரும்பவரவில்லை.

★ இயக்குநர் கே.ரங்கராஜ் பிரசாந்த்- சிவரஞ்சனி ஜோடி நடிக்கும் புதிய படமொன்றை தயாரிக்கப் போகிறார். சிறந்த காதல் கதை ஒன்றை யோசித்து வருகிறார்.

★ முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு கதாநாயகனாக நடித்தவர். இப்போது அவர் துணைக்கதாநாயகனாக நடிக்கும் படம் மன்னவன். கதாநாயகனாக ஜெய்போலியன் நடிக்கிறார்.

★ பல்வேறு படங்களுக்கு ஒளிப்பதிவாளராக பணியாற்றியவர் விஜயலட்சுமி. அவர் இப்போது கதை, திரைக்கதை வசனம் எழுதுவதிலும் இறங்கியிருக்கிறார். படம் பம்பிடாடி. அரவிந்த சாமி நாயகன். நாயகி கௌதமி.

★ விஜயகாந்த் நடிக்க பி.வாசு இயக்கும் சேதுபதி ஐ.பி.எஸ். மிகுந்த பொருட் செலவில் பிரமாண்டமான அரங்குகளில் படமாக்கப்பட்டுவருகிறது.

★ பிரபு நடிக்கும் செந்தமிழ் செல்வன் படத்தில் சிவரஞ்சனி குளியல் உடையோடு தாராளமான கவர்ச்சிக்காட்சியில் நடித்துள்ளார். அருவியில் குளிக்கும் காட்சி அட்டகாசமாகப் படமாக்கப்பட்டுள்ளதாம்.

பாப்பா முரசு சிறுகதை

# மூர்த்தியின் உறுதி

சோலையூர் என்ற ஊரில் நாகப்பன் என்றொரு வியாபாரி இருந்தான். அவன் பெரிய பலசரக்குக்கடை ஒன்றை நடத்தி வந்தான்.

அவன் நேர்மையான வியாபாரி இல்லை. பணம் நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற பேராசை பிடித்தவன். இதனால் தனது கடையில் அத்தியாவசியப் பொருட்களில் கலப்படம் செய்து நிறையப் பணம் சம்பாதித்தான். இதனால் அவனது வியாபாரம் பெருகியது.

அப்பொழுது அவனுக்கு உதவி செய்ய ஒரு ஆள் தேவைப்பட்டது. இதற்காகச் சம்பளம் கொடுத்து ஒரு வேலைக்காரனை வைத்துக்கொள்ள அவன் விரும்பவில்லை. யாராவது ஒரு அனாதைச் சிறுவன் கிடைத்தால் அவனுக்கு சாப்பாடு மட்டும் போட்டு தன் கடையில் வைத்துக்கொள்ளலாம் என்று நினைத்தான்.

அப்படித் தேடியபோது அவன் விரும்பியது போலவே அவனுக்கு ஒரு அனாதைச் சிறுவன் கிடைத்தான். அவனுக்கு வயது பதின்மூன்று இருக்கும். ஆனால், அவன் நல்ல ஒழுக்கமுள்ளவனாக இருந்தான். அவனிடம் பொய், திருட்டு போன்ற எவ்வித தீய குணங்களும் இல்லை. அந்தச் சிறிய வயதிலேயே கடவுள் மீது அபார நம்பிக்கை கொண்டிருந்தான்.

அவன் நாகப்பனின் வீட்டில் உணவு சாப்பிட்டுக்கொண்டு கடையில் கடுமையாக உழைத்தான். இப்படியே சில நாட்கள் சென்றன.

ஒருநாள் கடையில் புதிதாக விற்பனைக்கு வாங்கி வைத்திருந்த அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றில் நாகப்பன் கலப்படம் செய்வதைச் சிறுவன் மூர்த்தி பார்த்துவிட்டான். அவனுக்கு உடல், உள்ளம் எல்லாம் நடுங்கி விட்டது. நாகப்பன் மக்களை ஏமாற்றி பொருள் சம்பாதிப்பதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"ஐயோ, என்ன அக்கிரமம் இது. மக்கள் உபயோகிக்கும் அத்தியாவசியப் பொருட்களில் எல்லாம் கலப்படம் செய்கிறீர்களே... இது பெரிய பாவம் என்று உங்களுக்குத் தெரியாதா? இது பெரிய பாவம் ஐயா! இனிமேல் இப்படிச் செய்யாதீர்கள்," என்று சொன்னான் மூர்த்தி.

அதைக் கேட்ட நாகப்பன் வெகுண்டெழுந்தான்.

"அடேய் அனாதைப் பயலே, அன்னக்காவடி நீ. பாவம்னு இரக்கப்பட்டுச் சாப்பாடு போட்டு வேலைக்கு வச்சா எனக்கே புத்தி சொல்லுறியா? ராஸ்கல்", என்று கர்ஜித்தபடி மூர்த்தியைக் கண்மண் தெரியாமல் அடித்துவிட்டான்.



ஆனால் அதற்கெல்லாம் மூர்த்தி கலங்கி விடவில்லை. நாகப்பனை எப்படியும் மக்களிடம் காட்டிக் கொடுத்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டான்.

மறுநாளே தனது கடைக்கு வரும் வாடிக்கையாளர்களிடம் எல்லாம் நாகப்பனின் கலப்படப் பொருட்களைப் பற்றிச் சொல்லி வேறு கடைகளுக்கு அனுப்பி விட்டான். மக்களும் உண்மையை உணர்ந்து நாகப்பனின் கடையைப் புறக்கணித்து வேறுகடைகளுக்குப் போய்விட்டார்கள். இதனால் நாகப்பனின் வியாபாரம் படுத்துவிட்டது. சில நாட்களிலேயே அதை இழுத்து மூடும் நிலையும் ஏற்பட்டது.

இதனால் பெரிதும் ஆத்திரமடைந்த நாகப்பன், மூர்த்தியைக் கொன்று விட நினைத்தான். இதை எப்படியோ உணர்ந்து கொண்ட மூர்த்தி, நாகப்பனிடமிருந்து மிகவும் சமயோசிதமாகத் தப்பியோடி அருகில் இருந்த பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நாகப்பனின் திருட்டு வேலையையும், அதைத் தடுத்து நிறுத்த முயன்ற தன்னைக் கொலை செய்ய வருகிறான் என்ற உண்மையையும் சொன்னான்.

சிறுவன் மூர்த்தியின் நல்லொழுக்கத்தைப் பாராட்டிய பொலிசார், விரைந்து சென்று நாகப்பனைக் கைது செய்தார்கள்.

அவனது கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை எடுத்துப் பரிசோதனை சாலைக்கு அனுப்பி வைத்தார்கள். அவை எல்லாவற்றிலும் நாகப்பன் கலப்படம் செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸ் நாகப்பனின் மீது வழக்குத் தொடர்ந்தார்கள்.


அத்தியாவசிய உணவுப் பொருட்களில் கலப்படம் செய்த குற்றத்திற்காகவும், நேர்மையாக வாழ வலியுறுத்திய சிறுவன் மூர்த்தியை அடித்துத் துன்புறுத்தி இறுதியில் அவனைக் கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காவும், நாகப்பனுக்குச் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சிறுவன் மூர்த்தியின் நேர்மையையும், அநியாயத்தையும் கண்டிக்கும் மன உறுதியையும் பாராட்டிய நீதிமன்றம் அரசாங்க செலவில் அவனுக்குச் சிறந்த கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்து கொடுத்தது. மூர்த்தியும் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நல்ல முறையில் படித்து முன்னேறி பல்லாண்டுகள் நலமாக வாழ்ந்தான்.

குழந்தைகளே! அனாதைச் சிறுவனான மூர்த்தி எதனால் உயர்ந்தான்? கண்முன்னே நடக்கும் பாதகத்திற்குத் துணை போகாமல், அதை எதிர்த்துப் போராடியதால் தானே, நீங்களும், கண்முன்னே அநியாயம் நடப்பதைப் பார்த்துக்கொண்டு சென்றுவிடாமல், கூடியவரை அதைத் தடுக்க முயற்சி எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் சமூகத்தில் தீய சக்திகள் ஒடுங்கும். நாமும், நாடும் வளம் பெறுவோம்.

பாப்பா முரசு

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20.11.1933.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 15
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு -05.

## வர்ணம் தீட்டும் போட்டி இல.12

| | |
|---|---|
| பரிசுக்குரியவர்: செல்வி நர்மதா வேல்முருகு, வின்சன் மகளிர் பாடசாலை, மட்டக்களப்பு. | ஆர். செந்தூரன், பாரதி வித்தியாலயம், பதுளை. |
| | செல்வன் இ.இ. டினேஸ்காந்த், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| பாராட்டுக்குரியவர்கள்: செல்வி அஞ்சனா இரெங்கசாமி, இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. | ரூபினி சௌந்தர ராஜன், தமிழ் மகா வித்தியாலயம், மன்னம்பிட்டி. |
| | செல்வன் ர.வி. துஷ்யந்தன், புனித பிரான்சிஸ் சவேரியார் மகாவித்தியாலயம் திருகோணமலை. |
| எம்.எஸ். சாதாத் அலி, ஸமஸ் மத்திய கல்லூரி, மருதமுனை, கல்முனை. | எம்.ஆர்.எம். அம்ஜாத், கே.கே.வீதி, புத்தளம். |
| செல்வி கா. இர்பானா, பாத்திமா மத்திய கல்லூரி, புத்தளம். | ஏற்றியன்ஸ்ரரக், இந்துக்கல்லூரி, வாழைச்சேனை. ஆர். நூருள் ஹாஜரா-கொலன்னாவ. |

## பட்டுப் பாவாடை

பட்டுப் பட்டுப் பாவாடை
பள்ளிக்குடுக்கும் பூவாடை
தொட்டுத் தொட்டுப் பார்ப்பார்கள்
தீபாவும் பவிக்குட்டியும்
பார்த்துப் பார்த்து நடப்பேனே
பகட்டும் எங்கும் மிகத்தானே
கோர்த்துக் கையை ஒன்றாக
நின்று சுற்றுவோம் நன்றாக
விறுவிறென்று சுற்றியதும்- அது
விசுறும் நல்ல தேரைப்போல்
விறுக்கென நான் இருந்திட்டால்
விரியும் நல்ல குடையைப் போல்....!

ஜெயந்தி-பம்பலப்பிட்டி.

## இந்த நாடுகள் இப்படி

1. பன்னிரெண்டு நாடுகளை தம் எல்லையில் கொண்டுள்ள ஒரே ஒரு நாடு-**ரஷ்யா.**
2. பனி காலத்தில் தினமும் 16 மணி நேரம் இருளில் மூழ்கி இருக்கும் நாடு-**பின்லாந்து.**
3. எரிமலை இல்லாத கண்டம்- **அவுஸ்திரேலியா.**
4. போதைவஸ்து பாவிப்பதன் மூலம் அதிக மரணம் உண்டாகும் நாடு-**பிரான்சு.**
5. பரப்பளவில் மிகப் பெரிய இரண்டாவது நாடு- **கனடா.**
6. சனத்தொகை கூடுதலான நாடு-**சீனா.**
7. உலகை சுற்றி வந்த கப்பலின் பெயர்-**விக்டோரியா.**
8. சணல் உற்பத்தியில் முதலிடம் பெற்ற நாடு- **தசாம்சா.**
9. கோடிஸ்வரர்கள் அதிகமுள்ள முதல் மூன்றுநாடுகள்-**அமெரிக்கா, ஜப்பான், மேற்குஜேர்மனி.**

எஸ்.சித்ராதேவி
தமிழ் மகாவித்தியாலயம்,தெல்தோட்டை.

## இவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால்...!

**ஐஸ் வியாபாரி:** உருகிப் போவார்.
**கண்ணாடி வியாபாரி:** உடைந்து போவார்.
**பூவியாபாரி:** வாடிப் போவார்.
**துணி வியாபாரி:** நைந்து போவார்.
**மீன் வியாபாரி:** நாறிப் வோவார்.
**எண்ணெய் வியாபாரி:** கொதித்துப் போவார்.
**மரவியாபாரி:** சாய்ந்து போவார்.
**பல்பு வியாபாரி:** மங்கிப் போவார்.

தொகுத்தவர்: செல்வி.ஜெமீலா காசிம்
வெயாங்கொட.

1. வட்ட வட்ட தட்டு. வால் இருக்கும் தட்டு. பச்சை நிறத்தட்டு. அது என்ன?
2. இல்லாத இடமில்லை. அது இல்லா விட்டால் எதுவும் இல்லை. அது எது?
3. இரவு பகலாக உழைப்பான். ஊதியம் வாங்க மாட்டான். அவன் யார்?
4. கொட்டி விட்டு ஓடும், தேள் அல்ல. குட்டையில் கிடக்கும், மீனும் அல்ல. அது என்ன?
5. நீரிலே பிறந்தான். நீரிலே அழிந்து விடுவான். அவன் யார்?


1. தாமரை இலை
2. காற்று
3. சூரியன்
4. தண்ணீர்
5. உப்பு

அஹ்மட் நஸுர்- ஆண்டு 2.பீ
அறபா கனிஷ்டவித்தியாலயம்-
வெலிகாமம்.



ஐரோப்பாவுக்கு வான் கோழிகளை அறிமுகப்படுத்தியவர் கொலம்பஸ். மத்திய அமெரிக்காவில் காணப்பட்ட இக் கோழிகளைப் பிடித்து ஐரோப்பாவுக்கு கொண்டு சென்றனர்.

சூரிய சக்தி மூலம் கார், விமானம் ஆகியவற்றை இயக்கும் முயற்சிகள் துவங்கிவிட்டன. அமெரிக்காவில் 1988ம் ஆண்டு ஜுன் 24ம் திகதி சூரிய சக்தி மூலம் இயக்கப்பட்ட கார் மணிக்கு 78.37 கி.மீ வேகத்தில் ஓடியது-சூரியசக்தி மூலம் ஓடிய கார்களில் மிக வேகமாக ஓடியது இக்கார் மட்டும் தான்.



இங்கிலாந்தில் 14ம் நூற்றாண்டில் 80 இலட்சம் ஆடுகள் இருந்தன. ஒரு மனிதனுக்கு மூன்று ஆடுகள் என்ற விகிதத்தில் இருந்தன.

## விடுகதைகளும் விடைகளும்

1. வட்டமான வீட்டுக்குள்ளே 3 மனிதர்கள்.
2. குண்டு மூஞ்சுக்காரிக்கு உடம்புண்டு. தலையில்லை, வாலுண்டு. காலில்லை. அவள் யார்?
3. பல்லு மீசைக்காரன் மூலையிலே முடங்கிக்கிடப்பான். அவன் யார்?
4. தொப்பி போட்ட மாப்பிள்ளை தன் உதிரத்தைக் கக்குவார். அதை ஈடு செய்யமாட்டார். அவர் யார்?
5. வயிறுபெருத்த ஆசாமி எந்தநேரமும் மூலையில் முடங்கிக் கிடப்பார். அவர் யார்?
6. காலால் மிதித்தால் அழுவாள், கடதாசியைக் கொடுத்தால் பல பொருட்கள் செய்வான். அவன் யார்?
7. தாய் பச்சை, தந்தை மஞ்சல், மகள் வெள்ளை இவை எவை?
8. குண்டு மூஞ்சுக்காரன் இரகசியத்தை ஊர்மக்களுக்கு வெளிப்படுத்துவான். அவன்யார்!
9. நீண்ட மூஞ்சுக்காரன் தன் வயிற்றினுள்ளே நீரை நிறைத்திருப்பான். அவன் யார்?

1. கடிகாரம் 2. கிணற்று வாளி
3. திரு விலைக்குற்றி 4. பேனை.
5. மண்பானை (முடாப்பானை)
6. தையல் இயந்திரம்.
7. உரிமட்டை, தேங்காய்ச்சுரட்டை, தேங்காய்ப்பூ
8. ஒலிபெருக்கி 9. தேனீர் போத்தல்

ஏ.எச்.ஏ.கபூர்
ஏறாவூர்-03.

1. ஐந்தும் ஐந்து நிறம். கூட்டிற்குள் சென்றால் ஒரு நிறம். அது என்ன?
2. ஒரு குப்பி நெய் எடுத்து உரெங்கும் கலியாணம். அது என்ன?
3. எங்கள் அம்மா நடுக்காட்டுக்குள் நெல்லாய வைத்து இருக்கிறாள். அதனை கொக்கும் உண்ணாது. குருவியும் உண்ணாது. அது என்ன?
4. காட்டுக்குள்ளே 'கரும் சோலைக் குள்ளே கருப்பியும், செகப்பியும் கண்ணைக்கண்ணை மின்னுகின்றாள் அது என்ன?
5. சங்கூதி பனிபெய சாமியார் வெளியே வந்தார். அது என்ன?

1. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை, காசிக்கட்டி
2. சந்திரன் 3. உப்பு
4. குண்டுமணி 5. மலம்.

எம்.ஏ.றகீம்
பேராருட் கந்தளாய்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்

## அந்த இரவில்

காற்று ஓடிவந்து
காலில் வீழ்ந்தது.

• •

நான்-
வானைச் சுருட்டி
ஒரு பந்துபோல்
எறிந்தேன்.

• •

சூரியனை நசுக்கி
காலால் உதைத்தேன்
நிலவு சுட்டது
கதறக் கதற
கழுத்தை நெரித்து
கடலில் எறிந்தேன்.

• •

பூமியை
ஒரு பாயைப் போல்
சுருட்டச் சுருட்ட
உருண்டு போனது
சவங்கள்!

• •

மனித இறைச்சியை
உரித்து வைத்து
மலைகள் தின்றன.

• •

எரிச்சலாய் இருந்தது
எனக்கு,
நான் மட்டும்
வாழ்ந்து கொண்டிருக்க

• •

கடலின் வெறி
அடங்கவில்லை
இறங்கி அதற்குள்,
மூழ்கப் போனேன்.
அலைகள்
இரத்தமாய்
நுரை கக்கின.

• •

அந்த இரவில்
அவித்த முட்டையைப்
போல்
மனிதச் சதைகளை
பூமி உண்டு
கொண்டிருந்தது.

■ ஒட்டமாவடி- அறபாத்.

## தீபாவளிக் கவிதை

### வாழ்வதெப்போ?

ஏட்டிலும் பாட்டிலும்
எழுதி என்ன கண்டோம்?
நாட்டிலும் வீட்டிலும்
நரகாசுரர் தொல்லை!
வேட்டிலும் வெட்டிலும்
விழுந்திடும் பிணங்கள்!
நாட்டிலும் வீட்டிலும்
நாம் வாழ வழியில்லை!

தீபாவளியே!
நீதான் வந்தும் என்ன?
நின்'தை' வந்து மென்ன?
சித்திரை வந்தும் என்ன?
இத்தரையில் எமக்கு
இல்லையெனில் வாழ்வு?

செத்து செத்து வாழ்கின்றோம்
சிறப்பில்லை வாழ்க்கை!
சொத்து சுகம் எல்லாம்.
தொட முடியா தூரத்தில்
பந்து மித்திரர் எல்லாம்
பரிதாபம்! அகதி முகாமில்!

தீர்வுதான் கிடைப்பதெப்போ?
சேர்ந்து நாம் வாழ்வதெப்போ?

■ முகில் வண்ணன்





முரசு 23ல் இடம்பெற்ற "தேன் கிண்ணம்" தந்த வடக்கு -காதல் மடலுக்குப் பதிலாக அமைகிறது இந்த மடல்.

## "அன்புக் காதலருக்கு தெற்கிலிருந்து..."

அன்பே!
உம்மோடு நான்
பயணத்தைத்
தொடராவிட்டாலும்
என் பயணத்தில்
நீர் தொடர்ந்து வருகிறீர்
நினைவுகளால்...

பதினாறு
வருடங்களின் பின்
உமது நிலை
அறியக் கிடைத்தேன்-
உமது மகன்
உம்மை பழிவாங்கவல்ல
புறப்பட்டு இருக்கிறான்
நாட்டு மண்
அவனை புறப்பட
வைத்திருக்கிறது-

இந்தப் பதினைந்தில்-
மாட்டின் லூதர்
ஏபிரகாம் லிங்கன்
புத்தர்
காந்தி
இயேசு
அவனுக்கு கசப்பாக
இருக்கலாம்

ஹிட்லர்
அவனுக்கு இனிப்பாக
இராது....

கவலைப்படுகிறேன்
அவனை என்
வயிற்றில்
சுமக்கவில்லையே என்று...
இல்லையில்லை
அவனை நான்
சுமந்திருப்பின்
நீர் கூறியது போல்
இந்த சாக்கடை
அரசியலில் வீழ்ந்து
நாறிப் போயிருப்பான்.....

விதி நம்மை
பிரித்தாலும்
உமது இனத்தின்
விதியை மாற்ற
அவனின் பயணமும்
மண்ணை
சிவப்பாக்கட்டும்...
அவனைப் பெற்றதற்காக
பெருமைப்படும்
என் காதலரே!

■ காரைதீவு நிலாமதி

## தேதி குறித்தல்

எனது-
சொந்த மண்ணின்
பரப்பு எங்கிலும்
விடியாத இரவுகளே
இன்னும்;
இறுக்கும் முழு இருளின்
பரவுதலில்
அபகரிப்பாவதெல்லாம்
எனக்கு-
அவசியமான சுதந்திரங்கள்

•

தசை சிலிர்க்கும்
கருவி ராட்சதர்களின்
வெறி பதித்த சிறையில்
என்-
வாழ்தலின் நிம்மதி.
கொதிக்கும் அனல் கக்குவதோ
வலிமை உணர்வுகளே.
அடிமை பண்ணலையும்
நொறுக்கி.

•

மரணச் சிதைவு
மட்டுமே நிகழ்த்துகிற
துப்பாக்கி தரும்
இரவல் வீரத்தில்
நாசகாரனின் இருப்பு:
இந்த-
நசுக்கும் நோவு கீறி
உண்டான கோபத்தின்
எனது துணிவு
அர்த்தப்படுத்துவது
நாளைய வைகறையை.

•

இரத்தம் நனைத்து
ஈரமான மண்ணும்
வீரமான மனதும்
ஒரு-
நேர்கோட்டுப் பயணத்தை
உணர்ந்தவாறே:

இனி-
விடுதலை சூடிக்கொள்ளுகிற
நாளைய தினங்களுக்காக
குறிக்கப்படும் தேதி!

•

காய காலங்கள் உணர்த்தும்
எழுதலின் வேக அசைவுகளில்
எதிரியின் கரங்கள்
நடுக்கும்:
வைர உணர்ச்சிகள்
அழுத்தி-
ஓங்கும் எனது கரங்கள்.

■ காத்தான்குடி அனு

## நிகழ்காலம்

கனவுகள் தேக்கிய,
விழிகளும்-
கற்பனை தேக்கிய
மனங்களும்-
மலிந்து கிடக்கும்
நிகழ்காலம்.
வெளியில்-
மானுடம்
வேஷம் போட்டுக்கொள்ளும்.
சமூகந்தன்னைச்
சாக்கடையாக்கி.

அறிவைத் தொலைத்த,
மானுடரின்-
சிந்தனா யாத்திரை
புத்தி ஜீவிகளைப்
புதைத்திட நினைக்கிற
வேதனை யுகத்தில்
கரைகின்ற வினாடிகள்,
வரலாற்றில் மறையாத
குறிப்புகள் எழுதும்.

முன்னர்,
இனவெறி உணர்வுகள்
தூண்டப்பட்ட
இளைய சமூகம்,
இன்று,
சகோதரப் படுகொலை
நிகழும் காலத்தில்,
திகைத்து நிற்பதைக்.

காலக் கண்ணாடி சோகமாய்க்
காட்டும்.
ஆதலால்,
கனவுகள் தேக்கிய விழிகளும்,
கற்பனை தேக்கிய
மனங்களும்,
அதிர்ச்சியின் எல்லையில்
மரணத்தின் வாயிலில்
நிற்கின்ற நிகழ்காலம்.

■ பாலையூர் அநா.

## என்னவளே......

நானிலத்தில் நடைபயின்று வந்தாள்!-எந்தன்
அகத்தினிலே தனியிடங் கொண்டாள்!
பொன்நிற மேனியவள் அங்கம்!-எனை
களிப்படையச் செய்த அவள் தங்கம்!

காதற் கதையினை கண்ணிரண்டில் பேசி-எந்தன்
அகத்தினிலே அன்புக்கனை வீசி
இந்நிலத்தார் போற்ற நீ வந்தாய்!-உந்தன்
அன்பினால் எனக்குயிர் தந்தாய்!

உன்னினைவே என் மனதில் ஓடும்-தினம்
உனையெண்ணி என் இதழ்கள் பாடும்!
கற்கண்டு மொழி பேசும் குயிலு-எனை
கண்டாலே களிகொள்ளும் மயிலு!

நீயிருந்தால் என்னிதயம் வாழும்-எனை
நீபிரிந்தால் என்னுயிரே மாளும்-!
நாமிணைய என்னருக்கில் வாடி-இவ்வுலகில்
நீயேயென் ஜோடி!

■ ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்



## முக உரசல்



காதலி!
உன்-
மனசின் குகைகளில்
என்னை பத்திரப்படுத்து
நான்-
ரகசியமாய் தந்த,
முத்தத்தைப் போல்

■ குருநாகல்-ம.பெரோஸ்க்கான்

# அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



இலக்கம்-16
சுப்பர் ஸ்டார் சந்திப்பு

காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-..............................
படத்தின் இயக்குநர் பெயர்:-..............................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-..............................
இப்படம் வெளியான ஆண்டு:-..............................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

## அது சரிதான்

ஒரு குடிகாரன் தன் நண்பர்களுடன் ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தான். வண்டி கிளம்பியது. உடனே அவசர அவசரமாக நண்பர்கள் வண்டியில் தொற்றிக்கொண்டனர். அவன் ஏற முன்னரே வண்டி புறப்பட்டு விட்டது.

குடிகாரன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்"

அருகில் நின்றவர் கேட்டார்.

"என்ன வழியனுப்ப வந்தவர்கள் ரயிலில் போய்விட்டனர். நான் கீழேயே நிற்கிறேன்" என்றான்.

இன்னொரு முறை அவன் ரயிலில் பயணம் செய்தான். ரயில் வேகமாகச் செல்லும் போது கீழே இறங்கினான். இரண்டு கால் எலும்பும் டமார்.

அவனோ மருத்துவமனையில் சந்தோசமாக இருந்தான்.

"உன்னால் எப்படி சந்தோசமாக இருக்க முடிகிறது" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"அதுவா, நல்லவேளை ரயிலில் இருந்து விழுந்தேன். இதுவே விமானத்தில் இருந்து விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்"

அவன் கூற, கேள்வி கேட்டவர் வாயை மூடிக்கொண்டார்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(14.11.93 முதல் 20.11.93 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| துலாம் | - சூரியன், புதன், குரு, வெள்ளி |
| விருட்சிகம் | - இராகு, செவ்வாய் |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |

துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் சந்திரன் சஞ்சரிப்பார்.
சூரியன் 16.11.93ல் விருட்சிகத்தில் பிரவேசிக்கிறார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு நீங்கல், காரிய வெற்றி. | பகல் 12 மணி |
| திங்கள்- | சுபகாரிய மகிழ்ச்சி, புதிய செலவுகள். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், எண்ணிய கருமம் வெற்றி. | பி.ப 2 மணி |
| புதன்- | பணவரவு, காரியானுகூலம். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியரால் தொல்லை, வீண் மனஸ்தாபம். | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம் அலைச்சல். | காலை 11 மணி |
| சனி- | செலவு மிகுதி, புதிய திட்டங்கள் உருவாகுதல். | பி.ப 3 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்- 7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய வெற்றி, கடன் பயம் நீங்கல். | பி.ப 1 மணி |
| திங்கள்- | பணவரவு மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | மனமாற்றம், வீண் சிரமம். | பி.ப 3 மணி |
| புதன்- | வீடு மனை கைமாறல், பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மன ஆறுதல். | காலை 8 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், முன்னேற்றம். | காலை 10 மணி |
| சனி- | எடுத்த காரியம் வெற்றி, பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | பணவரவு, காரிய வெற்றி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, இனசனக் கொண்டாட்டம். | பி.ப 3 மணி |
| புதன்- | துயர் நீங்கும், புதிய திட்டங்கள் வெற்றி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | காரியத் தடை, அந்நியர் விரோதம். | காலை 8 மணி |
| வெள்ளி- | தனலாபம், தேக சுக விருத்தி. | பி.ப 4 மணி |
| சனி- | வீண் அலைச்சல், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, புத்திர சோகம். | பி.ப 4 மணி |
| திங்கள்- | அந்நியர் நட்பு, மனக்கிலேசம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தேகசுகத்தடை, பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பணக்கஷ்டம் மறையும். | காலை 10 மணி |
| வியாழன்- | அந்நியரால் உதவி, மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | இனசனக் கொண்டாட்டம், பணச்செலவு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், பிரயாச மிகுதி. | காலை 9 மணி |
| திங்கள்- | தன இலாபம், தெய்வ அநுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பிரயாணம், வீண் தொல்லை. | பி.ப 3 மணி |
| புதன்- | பணவரவு, காரியசித்தி. | காலை 10 மணி |
| வியாழன்- | வீண் சந்தேகம், மனக்கவலை. | காலை 7 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| சனி- | செலவு மிகுதி, மனக்குறை நீங்கும். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை நீங்கும், காரியசித்தி. | பி.ப 3 மணி |
| திங்கள்- | பணத்தடை நீங்கும், பெரியோர் அனுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- | வீண் அலைச்சல், தொல்லைகள் நீங்கும். | பி.ப 3 மணி |
| வியாழன்- | தனஇலாபம், காரிய வெற்றி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | மறைமுக நோய், மனக்கவலை. | காலை 7 மணி |
| சனி- | செலவு மிகுதி, வீண் மனஸ்தாபம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செல்வாக்கு மேன்மை, புகழ். | பி.ப 4 மணி |
| திங்கள்- | பணத்தடை நீங்கும், பிரயாசம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | காரிய சித்தி, உறவினர் தொல்லை. | காலை 9 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், துயர் நீங்கும். | பகல் 11 மணி |
| வியாழன்- | பணவரவு, காரிய மேன்மை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிடச் சகவாசம், மனமகிழ்ச்சி. | பி.ப 2 மணி |
| சனி- | தேகசுகம் பாதிப்பு, பணச் செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கடன்பயம், வீண் செலவு, | காலை 7 மணி |
| திங்கள்- | ஞாபக மறதி, புதிய முயற்சி | காலை 10 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் உதவி, தேகசுகம் பாதிப்பு. | காலை 9 மணி |
| புதன்- | பணவரவு, காரியங்களில் வெற்றி. | பி.ப 2 மணி |
| வியாழன்- | மனச் சோர்வு, நடைக்கஷ்டம். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | தெய்வ அனுகூலம், பெரியோர் நட்பு. | பகல் 11 மணி |
| சனி- | சுகவீனம் மறையும், எண்ணங்கள் பலிதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, தேகசுக நன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியரால் உதவி, பணத்தட்டுப்பாடு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், உறவினர் தொல்லை. | பகல் 12 மணி |
| புதன்- | மறைமுக எதிர்ப்பு, வாக்கு வசீகரம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | தன இலாபம், கௌரவம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, தெய்வதரிசனம். | பி.ப 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் - 5

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கலக்கம், தொழில் மந்த நிலை. | காலை 6 மணி |
| திங்கள்- | பணக்கஷ்டம், பெண்களினால் தொல்லை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் அதிகம், வீண் செலவு. | பகல் 11 மணி |
| புதன்- | அந்நியர் நட்பு, திடீர் பிரயாணம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, காரிய சித்தி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | எடுத்த கருமம் சிறு தடை, வீண் மனஸ்தாபம். | காலை 10 மணி |
| சனி- | செலவு மிகுதி, துயர் நீங்கும். | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் - 7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பணவரவு, காரிய அனுகூலம். | பி.ப 2 மணி |
| திங்கள்- | தன இலாபம், செய்தொழில் நன்மை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, செலவு மிகுதி. | காலை 10 மணி |
| புதன்- | வீண் வாக்குவாதம், கவலை. | பி.ப 3 மணி |
| வியாழன்- | எடுத்த காரியம் வெற்றி, சுபகாரியச் சேர்க்கை. | காலை 8 மணி |
| வெள்ளி- | காரிய அனுகூலம், பண விருத்தி. | காலை 9 மணி |
| சனி- | செய்தொழில் நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 4

### மீனம்: சுப நேரம்

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | கருமங்களில் வெற்றி, மகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் முயற்சி, விரோதம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பணக்கஷ்டம், கடன் பயம். | பி.ப 2 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனச்சந்தோஷம். | காலை 10 மணி |
| வியாழன்- | முயற்சிகளில் வீண் தடை, அந்நியர் பகை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தனவிருத்தி, தெய்வ அனுகூலம். | காலை 8 மணி |
| சனி- | அரச விரோதம், உறவினர் உதவி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 1

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## மருத்துவ ✚ விந்தைகள்

# உடலில் ஏற்படும் மாற்றங்கள்!

## அச்சம் வேண்டாம் - இதோ அரிய யோசனைகள்

நமது உடலில் அவ்வப்போது வழக்கத்துக்கு மாறான அறிகுறிகள் ஏற்படுவதுண்டு. இவை பெரும்பாலும் ஆபத்தற்றவையாக இருந்த போதிலும் பலர் இவற்றினால் பயந்து விடுகின்றனர். சில பொதுவான அறிகுறிகளைப் பற்றி அறிந்து கொள்ள நம்மவர்களுக்கு ஆர்வம் இருக்கலாம். ஆகவே தலைசிறந்த மருத்துவர்கள் தந்துள்ள விளக்கங்களை இங்கு தருகிறோம்:

உதாரணமாக சில வேளைகளில் சிலருக்கு சாதாரண தலைவலி ஏற்படும். இதற்காக ஏதாவது மாத்திரைகளை விழுங்க வேண்டும், அல்லது மருத்துவரை அணுகவேண்டும் என்ற கவலை இவர்களுக்கு ஏற்படும். பெரும்பாலான தலைவலி இலேசாகவே இருக்கும். அரை மணி நேரத்துக்கு மேல் அது நீடிக்காது. இத்தகைய தலைவலி அரை மணி நேரத்துக்கு மேல் நீடித்தும் நேரமாக ஆகக் கூடிக்கொண்டிருக்குமானால் நிச்சயமாக 'ஆஸ்பிறின்' போன்ற மாத்திரைகளை உட்கொள்ளலாம். இதற்கும் பயன் கிடைக்காவிட்டால் நிச்சயமாக மருத்துவரை நாடவேண்டும்.

பல கடுமையான நோய்களின் தாக்கம் நமக்கு ஏற்படப் போகிறது என்பதை முன் எச்சரிக்கையாக அறிவிக்கும் சைகையாகவும் தலைவலி இருக்கலாம் என்றும் மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இயக்கம், உணர்ச்சி மற்றும் சுவைகளை உணர்த்தும் ஒரு நரம்பு நமது தாடையில் உள்ளது. இந்நரம்புக்கு குளிர் அல்லது சூடு தாவக்கூடிய நிலை ஏற்படுமானால் இதற்கு ஏற்படும் பாதிப்பு தாடையினூடாகக் கன்னம் வரை விரிவடையும். இதனால் தான் சாதாரணமான தலைவலி தோன்றுகிறது. 10 அல்லது 15 நிமிடம் வரைதான் இந்தத் தலைவலி நீடிக்கும். இந்தத் தலைவலிக்கு எந்த மருத்துவமும் தேவையில்லை. சிறிதளவு ஓய்வெடுத்தால் தானாக நீங்கிவிடும்.

### ஏப்பம்

'வாயுச் சேட்டை' என்று ஏப்பத்தை நம்மவர்கள் கூறுவதுண்டு. ஏப்பம் வரும் போது காற்று வெளியேறுகிறதே தவிர இது வாயுக்கோளாறுகளால் ஏற்படுவதல்ல. வாய்வழியே வயிற்றுக்குள் புகும் காற்று வாய் வழியே ஏப்பமாக வெளியேறுகிறது. இது எந்தவொரு நோய்க்கும் அறிகுறியல்ல.

ஏப்பம் வருவதைத்தவிர்க்க வேண்டுமானால் வாய் மூலமாகக் காற்று வயிற்றுக்குள் செல்வதைத் தவிர்த்துக் கொண்டால் போதுமானது.

### முகத்தில் ஏற்படும் தசைச் சுரிப்பு

கன்னக் கதுப்பு மற்றும் சொக்குகளில் சுண்டி இழுப்பதைப் போன்ற துடிப்பு சிலருக்கு ஏற்படுவதுண்டு. திடீரென ஏற்படும் அத்தகைய சுரிப்பு சில நொடிகளே தென்படும். இதனையும் பெரிது படுத்துவோர் பலருளர். பொதுவாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் ஒருவருக்கு இத்தகைய துடிப்பு முகத்தில் உண்டாகும். முகத்திலுள்ள சில நரம்புகள் அசைய நேர்ந்தால் அத்துடன் ஒட்டியுள்ள தசை துடிக்கக்கூடும். இதனை எவரும் பொருட்படுத்தத் தேவையில்லை. சிலருக்கு இது ஒரு பழக்கமாக வந்து விடவும் கூடும். அவரவர் மனவலிமையைக் கொண்டே இப்பழக்கம் தொடராமல் கட்டுப்படுத்தப்படலாம்.

### பாதங்களில் ஏற்படும் சுழுக்கு

அடிக்கடி பாதங்களில் நரம்புச் சுழுக்கு ஏற்படுவதுண்டு. இதனை எதிர்கால நோயின் எச்சரிக்கைக்குறியாகவும் கருத இடமுண்டு. இருப்பினும் 99 சதவிகிதம் இத்தகைய சுழுக்குகள் ஒருவரை படுக்கையிலிருந்து கிளப்புவதற்காக வருபவையே.

இத்தகைய சுழுக்குகள் அடிக்கடி வருமானால் முன்பெல்லாம் குயினயின் மாத்திரையைத்தான் மருத்துவர்கள் சிபாரிசு செய்வார்கள். இதுவும் ஒவ்வொரு நாளும் பாதச்சுழுக்கு ஏற்படுவதானால் மட்டும் படுக்கைக்கு முன்னர் ஒரு குளிசையை உட்கொள்ள வேண்டியதுதான்.

தூக்க வேளையில் கால்களில் இச்சுழுக்கு ஏற்பட்டதும் காலை உதறுவதன் மூலம் சுழுக்கு நீங்கிவிடும். கால்களின் அசைவுகளில் ஏற்படும் தாக்கங்களின் விளைவாகவே இது உண்டாகிறது என்பதை விட மருத்துவரீதியாக இதற்கு போதிய விளக்கம் கிடையாது.

### நாக்குத் தடித்தல்

சிலருக்கு சில சமயம் நாக்குத்தடித்துவிடும். சில வேளைகளில் ஒரு வகை வெண்படலம் படர்ந்திருக்கும். பச்சை நிறமாகவும் கூட சில சந்தர்ப்பங்களில் நாக்கு மாறுவதும் உண்டு. இவற்றைப் பொருட்படுத்த




வேண்டிய அவசியமில்லை. இவ்வாறான மாற்றங்கள் நாக்கில் ஏற்படுவதற்கு சீரான காரணம் எதுவும் தெரியவில்லை. இது எந்த நோய்க்கான - அறிகுறியுமில்லை என்பதை நிச்சயம் நம்பலாம்.

### வயிற்றில் ஏற்படும் விசித்திர ஒலிகள்

வயிற்றிலும் குடலிலும் நீர்த்தன்மை ஒட்டங்களுடன் காற்றும் செல்வதனால் இத்தகைய சப்தங்கள் ஏற்படுவதுண்டு. வயிற்றில் கேட்கும் 'இசை' பசியினாலோ அல்லது வயிறு நிரம்பியிருப்பதாலோ ஏற்படுவதில்லை. குடல்களின் நடவடிக்கைகளினாலேயே ஒலிகள் கிளம்புகின்றன.

### திடீரெனத்தாக்கும் 'சுளீர்' வலி

உடலின் எந்தப் பகுதியிலும் திடீரென ஒரு கடுமையான வலி தென்படும். அதைப் பற்றிக் கவனமெடுப்பதற்கு முன்னதாகவே அந்த வலி வந்தது போல் அரை நொடியில் மறைந்து விடும்.

இந்த வலி கண்டதும் உடனே அதிர்ச்சிக்குள்ளாகி விடுகிறோம். இது எதனால் ஏற்படுகிறது என்று இதுவரை எவரும் கண்டு பிடிக்கவில்லை.

ஏதாவது ஒரு நரம்பில் ஏற்படும் ஒரு தொய்வு மூளையை அடைந்ததும் குறிப்பிட்ட இடத்தில் வலியாக அதனைப் பிரதி பலிக்கச் செய்கிறது.

### சிவப்பாகும் கண்கள்

சிலருக்கு அடிக்கடி கண் கூசிச் சிவந்து போகும். பிறபொருள் புகுந்து விடுவதனாலோ அழற்சியின் காரணமாகவோ கண்கள் சிவப்படையும். அவ்வாறானால் அத்தகைய பொருளையே அழற்சியையோ அகற்ற வழி தேட வேண்டும். பலருக்கு எவ்வித நோவுமின்றி அடிக்கடி கண் சிவக்கும். திடீரெனச் சிவப்பேறி திடீரென மறைந்து விடும். இது எத்தகைய தீங்கையும் உண்டாக்காது என்பதனால் அதனையிட்டுக்கவலை கொள்ள வேண்டாம்.

### விக்கல்

மருத்துவத்துறையினால் சரியான காரணம் காணப்படமுடியாத ஒருவகை இயக்கம் விக்கல். குடலுக்கும் ஈரலுக்குமிடையிலுள்ள சவ்வு ஏதாவதொரு காரணத்தினால் சுருங்கும் வேளை காற்று உள் இழுக்கப்படும் போதே விக்கல் தோன்றுகிறது. காற்று போதுமான அளவு உள்வாங்கப்பட்டு ஏப்பம் வெளிவருமானால் விக்கல் நின்று விடுகிறது. சிலருக்கு ஒவ்வாத உணவு உட்சென்றாலும் விக்கல் தோன்றும். குறிப்பிட்ட சவ்வுடன் தொடர்புடைய நரம்பு அழற்சியுறுவதனாலும் விக்கல் வரும்.

### காதுகளில் 'மணி ஓசை'

சிலருடைய காதுகளில் இடையறாத ஓசை கேட்கும். காதுக்குள் உள்ள மிக மெல்லிய நரம்புகளில் ஏதாவது தாக்கம் ஏற்படும் போது இடையறாத மணி ஓசைபோன்ற ஒலி கேட்டுக் கொண்டிருக்கும். இதனால் எதுவித துன்பமும் ஏற்படப்போவதில்லை. தானாக நின்றுவிடும்.

சில சந்தர்ப்பங்களில் அஸ்பிறின் மாத்திரைகளை அதிகமாக உட்கொண்டாலும் இத்தகைய ஒலி காதுகளில் கேட்கும்.

### விசித்திரமான எலும்பு வலி

முழங்கைகளிலுள்ள எலும்புகளுடன் இணைந்திருக்கும் நரம்புகள் அல்லது விரல் எலும்புகளுடன் உராசிக்கொண்டிருக்கும் நரம்புகள்-சில அவயவங்களில் எதாவது பொருள் முட்டும் போது அதனை மூளைக்கு அறிவிக்கின்றன. உடனே அது 'வலி' என்று மூளை பிரதிபலிக்க வைக்கிறது. இது சிறிது நேரம் மட்டுமே தோன்றி மறையுமானால் கவலை அடையத் தேவையில்லை. கையை அல்லது புயத்தை வலுவிழந்ததாகச் சிறிது நேரம் காட்டும். சில சமயங்களில் இந்த இடங்கள் மரத்தும் போகலாம். சிறிது நேரம் மட்டும் இது நீடித்திருந்தால் அபாயமெதுவுமில்லை.

### எலும்பு மூட்டுகளில் எழும் ஒலி

கை கால்கள் அசையும் போது சில சமயங்களில் எலும்பு மூட்டுகளில் சில உராய்வுச் சப்தங்கள் கேட்பதுண்டு. சிலர் நடக்கும் போது பாதங்களிலோ முழங்கால்களிலோ சப்தம் கேட்கும். ஒருவருக்கொருவர் கை கொடுக்கும் போதும் கையில் உராய்வுச் சப்தம் கேட்பதுண்டு. இதனால் அச்சம் கொள்ளத் தேவையில்லை. உங்கள் முட்டிகள், பாதங்கள், கைகள் ஆகியவற்றிலுள்ள எலும்புகளுக்கு இதனால் எந்தச் சிக்கலும் தோன்றப் போவதில்லை. ■




### பார்வையைப் பாதுகாப்பது எப்படி?

கண் பார்வையினைப் பாதுகாக்கும் முறை பற்றி சிங்கப்பூர் தேசிய கண் மையம் சில உபயோகமான முறைகளைத் தந்திருக்கிறது.

புத்தகம் அல்லது பத்திரிகை படிக்கும் போது கண்ணுக்கும் வாசிக்கப்படும் எழுத்துக்களுக்கும் 30 சென்ரிமீட்டர் இடைவெளியிருக்க வேண்டும். இடைக்கிடை 30 நிமிடங்கள் கண்களை யன்னல் பக்கம் திருப்பி வேறு பல காட்சிகளைப் பார்ப்பதன் மூலம் அவற்றுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும்.

தொலைக்காட்சிப் பெட்டியிலிருந்து (திரைக்கு) 3 மீட்டர் தூரத்திலிருந்தே பார்க்க வேண்டும். உங்கள் கண்களின் பார்வை மட்டத்துக்கோ அல்லது சற்றுக் கீழ்ப்புறமாகவோ தொலைக்காட்சித் திரை இருத்தல் வேண்டும். திரையில் வேறு ஒளியோ அல்லது உங்கள் கண்களில் வேறு ஒளியோ படாமலிருப்பது நல்லது. படுக்கையில் புரண்டு கொண்டு தொ.கா. பார்ப்பதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கணனி (கொம்பியூட்டர்) திரையிலிருந்து 60 செ.மீட்டர் இடைவெளிக்கப்பால் தான் கண் பார்வை இருக்க வேண்டும். இங்கும் வேறு ஒளிகளோ நிழல்களோ திரையிலும் கண்களிலும்படலாகாது. தொலைக்காட்சி மற்றும் கணனித் திரைகளைப் பார்ப்பவர்கள் அரைமணி நேரத்துக்கொரு தடவை சில நிமிடங்களாவது வேறு புறம் தமது பார்வைகளைத் திருப்புதல் வேண்டும்.

கடுமையான சூரிய வெளிச்சத்திலும் அதிக ஒளிதரும் மின் விளக்கிலும் புத்தகங்களைப் படிப்பது கூடாது. எழுத்துக்கள் கண்களை உறுத்துபவையாகவும் இருக்கலாகாது. படுத்துக்கொண்டு படிப்பது; வேகமாக ஓடும் வாகனத்திலிருந்து படிப்பது; உங்கள் முகத்தில் ஒளி அதிகமாகப்படும் போது படிப்பது எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## புதுமைத் தொடர்



## அத்தியாயம்—20

செத்துவிட்டான் என்று சொல்லப்பட்ட சந்தோஷ் உயிரோடு, அதுவும் உடலில் குண் டோடு... ரம்யாவுக்கு பெரிய ஆச்சரியம்.

ஷாவுக்கும் ஆச்சரியம்.

ஒரு கையால் ஸ்ரேறிங்கை பிடித்து லாவகமாகக் காரைச் செலுத்திக்கொண்டி ருந்தான் சந்தோஷ். மறு கையில் றிமோட் கொன்ட்றோலைத் தயாராக வைத்திருந்தான்.

"என்ன ரம்யா செத்தவன் எப்படி எழுந்து வந்தான் என்று யோசிக்கிறாயா? என்ன மிஸ்டர் குலாம்ஷா நீங்களும் அப்படித்தானே யோசிப்பீர்கள்."

ரம்யாவும் பேசவில்லை. ஷாவும் பதில் சொல்லவில்லை. சந்தோசே தொடர்ந்து பேசினான்.

"குலாம்ஷா கடத்தலுக்கு நான்தான் பொறுப்பு என்று மோப்பம் பிடித்த பொலிஸ் தீவிரமாய் வலைவீசியது. டி.ஐ.ஜி டென்சில் வேறு, சந்தோசை பிணமாக்கினாலும் ஓ.கே என்று இரகசியமாய் சொல்லியிருந்தாராம். அப்படி ஒரு நட்பு அவருக்கும் ஷாவுக்கும். சோ... பொலிசை ஏமாற்றவும், தீவிரத்தை குறைக்கவும் சந்தோஷ் செத்துவிட்டதாக ஒரு செட்டப்."

சொல்லிவிட்டு உள்ளே திரும்பிப் பார்த்து சிரித்தான்.

கார் விரைந்து கொண்டிருக்க எதிரே ஒரு பொலிஸ் ஜீப் நின்றது தெரிந்தது.

குலாம்ஷா உஷாரானார். சந்தோஷ் சற்று பதட்டமானது தெரிந்தது.

"மிஸ்டர் குலாம்ஷா உங்கள் ஆட்கள் நிற்கிறார்கள். ஏதாவது புத்திசாலித்தனமாகச் செய்யலாம் என்று நினைத்தீர்கள் என்று வையுங்கள். அடுத்த நொடியே எண்ணுவதற்கு எலும்புகள் கூட மிஞ்சாது."

சொல்லியபடியே காரைச் செலுத்த ரம்யா திரும்பி குலாம்ஷாவின் முகம் பார்த்தாள்.

ரம்யாவுக்கு துணிச்சல் அதிகம். அதனால் அவசரப்பட்டுவிடுவாளோ என்று நினைத்து குலாம்ஷா கண்களை மூடித்திறந்தார். 'பொறுத் துக்கொள்' என்று அந்தச் சைகை சொன்னது.

கார் ஜீப்பை நெருங்கியது. ஜீப்பின் முன்னால் நின்ற பொலிஸ்காரர் வரும் காரையே பார்த்துக்கொண்டிருந்தது தெரிந்தது.

மறுநொடி பொலிஸ்காரர் கைநீட்டி காரை மறிக்க,

குலாம்ஷா திகைத்துப்போனார்.

சந்தோஷ் பதட்டத்தில் பட்டனை அழுத்தி விட்டால்....

சந்தோஷ் காரின் வேகத்தைக் குறைப்பது புரிந்தது.

கைகாட்டி மறித்த பொலிஸ்காரர் பின்னர் போகலாம் என்பது போல் சைகை செய்ய சந்தோஷ் காரை வேகப்படுத்தினான்.

குலாம்ஷாவுக்கு நிம்மதியாக இருந்தது. தப்பிக்கொள்ள வேறுதந்திரம்தான் செய்ய வேண்டும்.

முட்டாள் எதிரியோடு மோதும் போது கவனம் வேண்டும். தவறினால் மரணம் நிச்சயம்.

எதிர்பாராத தருணத்தில் அவனை மடக்கு வதே புத்திசாலித்தனம்.

கார் விரைந்து கொண்டிருந்தது. ரம்யா மீண்டும் குலாம்ஷாவின் முகம் பார்த்தாள்.

"எதிரியை எப்போது மடக்குவது." என்று கேட்பது போலப் பார்த்தான்.

"ஒத்துழைத்ததற்கு நன்றி. இறுதிவரை ஒத்துழைப்பது புத்தி."

என்றான் சந்தோஷ்.

கார் இடப்பக்கச் சந்தொன்றில் திரும்பி விரைந்து வேகம் எடுத்து சீறிக்கொண்டிருந்தது.

சுற்றிலும் அடர்ந்த மரங்கள் உள்ள பகுதியாக அது தெரிந்தது.

இப்போது இடையில் தப்பிக்கொள்ளும் எண்ணம் ஷாவுக்கு கிடையாது.

என்ன நடக்கிறது என்று பார்க்கும் எண்ணம் மனதில் எழுந்தது.

அடர்ந்த மரங்களின் மத்தியில் தலை முடியின் நடுவே உச்சி பிரிப்பது போலஇருந்த பாதை வழியாகக் கார் திரும்பியது.

ஒரு வாகனம் மட்டுமே செல்லக்கூடிய பாதையாகத் தெரிந்தது.

காரின் வேகத்தை குறைத்து மூன்று முறை ஹோனை அடித்துவிட்டு பின் வேகத்தை சற்று அதிகப்படுத்தின்னான்.

தூரத்தே ஒரு டோர்ச்லைற் வெளிச்சம் போன்ற புள்ளி ஒன்று தெரிந்தது. அது மூன்று முறை எரிந்து அணைந்தது.

அடர்ந்த மரங்கள் இருட்டைக் கொடுத்தி ருந்தன.

திடீரென்று ஒரு ஆந்தை அலறுவது போன்ற ஓசை எழுந்து அடங்கியது.

# கண்ணே மதுமிதா

### எழுதுவது ரசிகன்



இப்போது சந்தோஷ் காரின் ஹோனை இரு முறை அடித்தான்.

காரின் ஹெட் லைட்டை ஒரு முறை போட்டு அணைத்தான்.

அடர்ந்த மரச் சாலையில் ஒரு பத்து நிமிட ஓட்டத்தின் பின் கார் ஒரு வீட்டின் முன் போய் மூச்சை நிறுத்தியது.

அது மரத்தால் செய்யப்பட்ட வீடாகத் தெரிந்தது.

கார் நின்ற மறுநொடியே காரை வளைத்து ஐந்து பேர் ஆயுதங்களோடு சூழ்ந் தார்கள். இரண்டுபேர் எம். 16ரக துப்பாக்கி வைத்திருந்தார்கள். ஒருவன் ஏ.கே47 துப்பாக்கி யோடு தெரிந்தான். மற்றவர்களில் இடுப்பில் பிஸ்டல் வெளியே தெரியக்கூடியதாய் உறை யில் தொங்கிக்கொண்டிருந்தது. எல்லோரும் முகத்தை கறுத்த துணிகளால் மூடி மறைத் திருந்தனர்.

ஒருவன் வந்து காரின் பின் கதவைத் திறந்து இறுக்கமான குரலில்

'இறங்குங்கள்' என்றான்.

குலாம்ஷா கீழே இறங்க அவர் கரத்தில் இருந்த ஆயுதம் பறிக்கப்பட்டது.

ஒருவன் குலாம்ஷாவின் மார்பில் தொடங்கி கால்களின் முடிவு வரை வேறு ஆயுதம் இருக்கிறதா என்று தடவினான்.

ரம்யா இறங்க இன்னொரு முகமூடி அவளை நெருங்கி மார்பில் கைவைத்தான்.

ரம்யா கோபத்தில் அவனை தோளில் கைவைத்து பின்னால் தள்ளினாள். அவன் மலைபோல் அசையாமல் நின்று மீண்டும் மார்பை நோக்கி கை நீட்ட ரம்யா கை முஸ்டி மடக்கினாள்.

முஸ்டியை இறுக்கமாக்கி பலம் திரட்டி முகமூடியின் நெற்றி மையத்தில் ஓங்கிக் குத்தினாள்.

கற்றுக்கொண்ட கராட்டி உபயத்தில் கண்ணிமைக்கும் நேரத்தில் இரண்டு பலமான குத்துக்கள். முகமூடி திணறிப்போய் தலையை பின்னால் சரித்து இரண்டடி தூரம் பின் வாங்கினான்.

ரம்யா தாக்குவது தடுக்க குறுக்கே வந்த சந்தோஷ் ரம்யாவை தாக்கவந்த முகமூடிகளை கை உயர்த்தி மறித்தான்.

"ரம்யா உன்னிடம் ஆயுதங்கள் இருந்தால் கொடுத்துவிடு. மறுத்தால் சாவு உன்னை வெறுக்காமல் அணைக்கும்."

ரம்யா முன்னால் நின்ற குலாம்ஷாவைப் பார்த்தாள். சந்தோஷ் சிரித்தான்.

"இப்போது உனக்கு குலாம்ஷாதானே பொஸ். எங்களையெல்லாம் மறந்துவிட்டாய் பார். ஓ.கே. ஷா உங்கள் இனிய நண்பிக்கு புத்தி சொல்லுங்கள்."

"ரம்யா இப்போது இவர்கள் சொல்வதைக் கேட்போம்."

என்றார் ஷா.

"இது புத்தி. விவேகம்."

என்று சந்தோஷ் சொல்ல ரம்யா தன் இடுப்பில் இருந்த கத்தி எடுத்து சந்தோசிடம் நீட்டினாள்.

குலாம்ஷாவும், ரம்யாவும் துப்பாக்கிகள் முதுகில் உரச வீட்டுக்குள் கொண்டு செல்லப் பட்டார்கள்.

வெளியே இருந்து பார்த்த போது சிறியதாய் தோன்றினாலும் உள்ளே விசாலமாக இருந்தது.

நான்கு அறைகள் மரத்தால் பிரிக்கப்பட்டு பரந்த முன்ஹோலின் தரையில் அழகான விரிப்பு போடப்பட்டு....

"குலாம்ஷா வந்த வழியையும் கணக்கெடுத்து கொண்டு வந்தீர்கள். இப்போது வீட்டையும் அளவெடுக்கிறீர்கள். இதற்கெல்லாம் வசதியாய் உங்கள் கண்களை சுதந்திரமாக விட்டிருக் கிறோம். நாங்கள் வித்தியாசமான வில்லன்கள்."

சந்தோஷ் சொல்லிச் சிரித்தான்.

"இங்கிருந்து நீங்கள் தப்பிச் செல்லப் போவதில்லை. முயலலாம். ஆனால் முடி யாது."சந்தோஷ் குரலில் அளவுக்கதிகமான உறுதி தெரிந்தது. பின் முகமூடிகள் இருவரை சைகையால் அருகே அழைத்தான்.

"இவர்களை மூன்றாம் அறையில் தங்க வையுங்கள். விருந்தினர்கள் போல் கவனியுங் கள். தப்ப முயன்றால்....விருந்துக்கு இரையாக்க வேண்டிய வெள்ளாடுகள் ஆக்கிவிடலாம்."

குலாம்ஷாவும், ரம்யாவும் இரு முகமூடிகள் பின்னால் செல்ல, திடீரென்று சந்தோஷ்.

"ரம்யா" என்றான்.

திரும்பி என்னவென்பது போல பார்த்தாள்.

"உன்னோடு பேசவேண்டும் என் அறைக்கு வா."என்றான்.

ரம்யா தயங்கினாள். மறு நொடியே ரம்யாவின் மனதில் அந்த யோசனை வந்தது. சந்தோஷ் எங்கே தட்டினால் சரணாவான் என்று ரம்யாவுக்கு தெரியும். முயன்று பார்க்க லாம் என்று ரம்யா நினைத்தாள். எனவே தயக்கம் துறந்து சந்தோசின் அழைப்பை ஏற்றாள்.

சந்தோஷ் தன் அறைக்குள் நுழைய ரம்யா பின் தொடர்ந்தாள். உள்ளே ரம்யா வந்ததும் கதவை தாழிட்டான் சந்தோஷ்.

"சந்தேகப்படாதே ரம்யா. தனியே பேச வேண்டும். நிறையப் பேசவேண்டும். உனக்குத் தெரியுமா நான் இப்போது வைத்தியோடு இல்லை."

ரம்யா புரியாமல் பார்த்தாள். ரம்யாவின் தோளில் சந்தோஷ் மெல்லக் கை போட்டான்.

"இருந்து பேசலாம் அப்போது தான் புரியும்." என்றான்.

ரம்யாவை சோபாவில் அமரவைத்து தானும் அருகே அமர்ந்தான்.

"வைத்தி எங்களை வைத்து வசதியாகி விட்டான். வளர்த்துவிட்டது எங்கள் விசுவாசம் என்பதை மட்டும் மறந்து விட்டான்."

சந்தோஷ் பொய்சொல்லவில்லை என்று அவன் குரல் சத்தியம் செய்தது.

ரம்யா இதுதான் தருணம் என்று நினைத் தாள். அதற்கு முன் சந்தோஷின் பலவீனத்தை பயன்படுத்த முடிவு செய்தாள்.

கைகள் இரண்டையும் தலைக்கு மேல் உயர்த்தி சோம்பல் முறித்தாள்.

கரங்கள் உயர்ந்ததில் நிமிர்ந்து உயர்ந்து அசைவு காட்டிய மார்புகளை பக்கவாட்டில் இருந்து சந்தோஷ் ரசித்தான்.

ரம்யா சோபாவில் வசதியாக நிமிர்ந்து சாய்ந்தாள்.மார்புகள் கம்பீரமாய் நிமிர்ந்து எங்களைக் கவனி என்று சந்தோசை வதைத்தன.

சந்தோஷ் தன் கரம் நீட்டி ரம்யாவின் தொடையில் கைவைத்து மெல்ல அழுத்தினான்.

ரம்யா தடுக்கவில்லை. சந்தோசின் கரம் மேலும் உயர்ந்து மேல் நோக்கி நகர்ந்தது. ரம்யா இப்போது தன் கரத்தை சந்தோசின் கரத்தின் மீது வைத்து தடுத்தாள். ஆனால் கரத்தை விலக்கிவிட முயலவில்லை. சந்தோஷ் தன்னை மறந்தான். தன்சூழல் மறந்தான்.

"ரம்யா நீ எனக்கு வேண்டும். நான் இப் போது ஒரு கூட்டத்தின் தலைவன். வைத்தி என் குறியில். அதன் பின் நானே குற்ற சாம்ராஜ்ஜியத்தின் ஏக அதிபன். என்னோடு நீ இருக்க வேண்டும். எனக்கு நீ... நீ மட்டுமே வேண்டும்." என்று புலம்புவது போல் பேசினான்.

ரம்யா தருணம் வந்துவிட்டது அறிந்து காயை நகர்த்தினாள்.

"சந்தோஷ்"

என்றாள். அழைப்பிலே ஆளை மயக்கும் வசீகரம் இருந்தது.

"என்ன...ரம்....யா"

சந்தோசின் குரலில் பலவீனம் முழுதாய் தெரிந்தது.

"நீ செத்துவிட்டாய் என்று சொன்னார்கள். என்னை ஒரு பூச்சிபோல நடத்தினார்கள். என் உழைப்பை புறங்கையால் தள்ளி அலட்சியம் செய்தார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. நீ போனபின் எனக்கு யாரும் இல்லை. அதுதான் ஷாவோடு சேர்ந்து தப்ப நினைத்தேன். அந்தக் கூட்டத்தையே பொலிஸில் மாட்டி நசித்துவிடத் துடித்தேன்."

"புரிகிறது ரம்யா. உன் இடத்தில் நான் இருந்தாலும் இப்படித்தான் செய்திருப்பேன்."

"இப்போதுதான் நிம்மதி."

"ஏன் ரம்யா?"

"எங்கே நீயும் என்னைப் புரிந்து கொள்ளா மல் போய்விடுவாயோ என்று பயந்தேன்."

"நானா? ரம்யா உன்னை முழுதாய் அறிந்த வன் இந்த சந்தோஷ். நீ தந்த சுகம் நரகத்துக்கு நான் போனாலும் சொர்க்கமாய் நினைத்துப் பார்க்க வைக்கும். சொல் ரம்யா என்னோடு இருந்து விடுகிறாயா?"

"ஏன் நம்பவில்லையா நீ?" ரம்யா கேட்க சந்தோஷ் சோபாவில் இருந்த படி குதித்தான். ரம்யாவின் தொடையில் இருந்து கரம் விலக்கி அப்படியே ரம்யா மீது சரிந்தான்.

"பொறு சந்தோஷ்."

என்று அவனை விலக்கிய ரம்யா

"எனக்காக நீ ஒரு காரியம் செய்யவேண்டும். செய்வாயா?"

"சொல்லு ரம்யா."

சந்தோஷ் அவசரப்பட்டான். ரம்யா அவன் என்ன செய்யவேண்டும் என்று சொன்னாள்.

அது கேட்ட சந்தோஷ் இடியோசை கேட்ட நாகம்போல் அதிர்ந்தான்.

■

மதுமிதாவை நோக்கி நகர்ந்த இன்பராஜ் பின்புறமாய் மதுமிதாவை வளைத்துப் பிடிக்க கைகளை நீட்டினான். வேகமாயத் திரும்பிய மதுமிதா பிஸ்டல் விசையை தட்டினாள்.

டுமீல்......

தோட்டா இன்பராஜின் மார்பைக் கிழித்தது.

பின்புறமாய் சரிந்து இன்பராஜ் தரையில் இரத்தம் சிந்தியபடி விழுந்தான்.

நீட்டா தன் வாயைப் பொத்தி, ஐயோ என்று உள்ளே இருந்து எழுந்து வந்த அலறலை அடக்கி னாள். மதுமிதாவின் முகம் மாற்றமின்றி, சலன மின்றி இருந்தது.

"நீ சொல்லு போட்டோக்கள் எங்கே." என்று நீட்டாவின் பக்கம் திரும்பிக் கேட்டாள்.

"அந்தப் போட்டோக்கள்"

தயங்கினாள்.

"சொல்லு அந்தப் போட்டோக்கள்?"

"உன்...உங்கள் தந்தையார் வைத்திலிங்கத் தின் கையில்தான் இருக்கிறது."

"நீட்டா பொய் உன்னைக் காக்காது. கொல் வது எனக்கு இனிப் புதிதல்ல."

"சத்தியமாய் நான் சொல்வது உண்மை மது. என்னை நம்பு மது."

"ஓ.கே....."

சொல்லிவிட்டு கதவுநோக்கிச் சென்ற மதுமிதா தாழ் விலக்கினாள்.

பின் நீட்டாவைப் பார்த்துச் சிரித்தாள். மீண்டும் தாழ் போட்டாள்.

நீட்டா புரியாமல் விழித்தாள்.

மதுமிதா கேட்டாள்.

"நீட்டா நீ உயிரோடு இருப்பதால் என்ன பயன். யாருக்கு இலாபம்?"

நீட்டா பயத்தால் வியர்த்தாள்.

"நீ வாழ்வதால் எனக்குத்தான் நஷ்டம். ஏன் சொல்லு. இன்பராஜ் கொலைக்கு நீ தானே சாட்சி. சாட்சியோடு கொலை செய்வது முட்டாள் தனம். சோ.. மதுமிதா முட்டாள் அல்ல"

சொல்லியபடியே மதுமிதா சுட்டாள்.

டுமீல்....

நீட்டா அப்படியே கட்டிலில் சரிந்தாள்.

இண்டர்கொம் குக்.குக் என்றது.

மதுமிதா ஒரு கணம் யோசித்து பின் இண்டர் கொம் தூக்கினாள்.

மதுமிதாவை நீட்டா என்று நினைத்து மறு முனை பேசியது.

"மேடம் பொலிஸ் நமது இடத்தை சுற்றி வளைத்துவிட்டது. முக்கிய ஆவணங்கள் இருந் தால் உடன் அழித்துவிடுங்கள். தப்ப முடியாது. நாலு புறமும் சூழ்ந்துவிட்டார்கள்."

பதில் சொல்லாமல் மதுமிதா இண்டர்கொம் ரிசீவரை வைத்தாள்.

■

இன்ஸ்பெக்டர் அரவிந்த் என்ன தேடுகிறீர்கள் என்று கேட்டபடி வந்தார். வைத்தி இன்ஸ்பெக்டரின் கரத்தில் இருந்த துண்டுக்காகிதம் பார்த்து அதிர்ந்தார்.

இனித் தப்ப முடியாது என்று அவசரமாய் முடிவு செய்தார்.

இடுப்பில் இருந்த பிஸ்டலை கண்ணிமைக்கும் நேரத்தில் உருவி எடுத்த வைத்தி டி.ஐ.ஜி டென்சிலை நோக்கி நீட்டினார்.

டி.ஐ.ஜி டென்சில் வைத்தியின் கரத்தில் இருந்த பிஸ்டலைப் பார்த்தார். பின்னர் இன்ஸ்பெக்டர் அரவிந்த்தைப் பார்த்தார்.

மறு நொடியே டி.ஐ.ஜி டென்சில் வாய்விட்டுச் சிரித்தார்.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: ஸ்டாலின் ஜோன்
வயது: 25
முகவரி: கல்பிட்டி வீதி,
நரக்களி-நுரைச்சோலை,
புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கவிதை எழுதுதல், நண்பர்கள் தொடர்பு.



பெயர்: வேலு தவமணிச்செல்வி
வயது: 17
முகவரி: 35/3 ஏ, மாக்கும்புர.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், பூந்தோட்டம் அமைத்தல்.



பெயர்: எம்.ஆர். அன்வர்
வயது: 27
முகவரி: KUWAIT INTERNATIONAL HOTEL
P.0.BOX -5996
SAFAT - 13060
KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி



பெயர்: வை.எம். நிசார்டீன்
வயது: 21
முகவரி: 26, குருநாகல றோட்,
கட்டுகஸ்தோட்டை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: சிவலிங்கம் ஜெயசீலன்
வயது: 20
முகவரி: 705/1, பிரின்ஸ் ஒவ் வேல்ஸ்
அவனியூ, கொழும்பு-14.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட் விளையாடுதல், பேனா நண்பர்கள்

பெயர்: தங்கவேல் கமலசுந்தரி
வயது: 18
முகவரி: 9, நீர்த்தாங்கி வீதி,
ஹிந்தகொட, பதுளை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, புத்தகங்கள் வாசித்தல்.

பெயர்: ஏ.டபிள்யூ.எம். நஸீர்
வயது: 19
முகவரி: எப் 39/1, தல்கஸ்பிட்டிய,
அரநாயக்கா.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: சில்மியா அனீஸ்
வயது: 16
முகவரி: 247/2, புளுகொஹதென்னை,
அக்குறணை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

**பெண்கள் கோபப்படாமல் முடிவுவரை செல்லவும்.**




இளைஞர்களே காதலிக்காதீர்கள். பெண்களை நம்பாதீர்கள். அவர்களை நம்பினால் உங்கள் எதிர்காலம் வீணாகி விடும், காதல் உங்களைப் படுகுழியில் விழுத்திவிடும். இதைக்கூற நான் யாரென்று நினைக்கிறீர்களா? உங்களைப் போல நானும் ஒரு வாலிபன்தான். ஒரு பெண்ணை நம்பி, காதலை நம்பி, இப்போது ஹோட்டலொன்றில் சர்வராக இருந்துகொண்டு சொல்லுகிறேன். எனக்கேற்பட்ட அனுபவம் உங்களுக்கும் நிகழக்கூடாதென்ற நல்லெண்ணத்தில் சொல்லுகிறேன். கேளுங்கள்.

எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அவளை முதன் முதலாக நான் சந்தித்தது எங்களுடைய இன்ஸ்டிட்டியூட்டில். ஒரு போட்டிப் பரீட்சையொன்று வைத்தார்கள். அதற்குப் பரிசு கொடுப்பதாகவும் அறிவித்திருந்தார்கள். எல்லாப் பாடசாலைகளிலிருந்தும் மாணவ மாணவியர் கலந்து கொண்டார்கள்.

நான் வகுப்பில் எப்போதும் முதலாவது ஆள்.நன்றாகக் கணக்குப் போடுவேன். சரளமாக ஆங்கிலம் கூட பேச வரும். என்னுடைய காலேஜிலிருந்து என்னைத்தான் சகல ஆசிரியரும் ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து, போட்டிக்கு அனுப்பியிருந்தார்கள். எனக்கும் என் திறமைமேல் முழு நம்பிக்கையிருந்தது. பரீட்சை ஹோலில் ஆண்-பெண் பேதமின்றி பக்கத்து பக்கத்தில் அமர வைத்தார்கள். எனக்கு முன்னும் ஒரு பெண் தான் அமர்ந்திருந்தாள். ஆனால் என் கவனமெல்லாம் பரீட்சையைப் பற்றியதாகவேயிருந்தது.

பரீட்சை தொடங்கி, ஒரு அரை மணிக்குப் பின்னாடி, ஏதோ கச முச உரையாடல் சத்தம் எழுதிக்கொண்டிருந்த என் சிந்தனையைக் கலைத்தது.

"என்னம்மா, பரீட்சைக்கு வாற போது பேனாவில் இங்க் இருக்கா என்று பார்த்து வாறதில்லையாம்மா...?"

"ஸாரி ஸார், அவசரத்தில் பார்க்காது வந்துவிட்டேன்."

எனக்குத் தெளிவாக அவர்களது உரையாடல் கேட்டது. நான் சிறிதும் தாமதிக்காமல் என்னுடைய கம்பாஸிலிருந்த போல்பொயின்ட் பேனாவை எடுத்து சேரிடம் கொடுத்து, அந்தப் பெண்ணுக்கு கொடுக்கச் சொன்னேன்.

அவள் பார்வையாலே எனக்கு நன்றி கூறுவதை நான் உணர்ந்து கொண்டேன். ஆனால் மறுகணம் அவள் மளமளவென்று எழுதத் துவங்கிவிட்டாள். நான் திரும்பவும் என் கவனத்தை வினாத்தாளில் செலுத்தினேன்.

இப்படித்தான் நான் அவளை முதன் முதலில் சந்தித்தேன். பின்னால் அதுவே என்னை வம்பில் கொண்டுபோய் விடுமென்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

போட்டிப்பரீட்சை முடிவுகள் வெளி யாகியிருந்தன. எனக்கு இரண்டாம் இடம் தான் கிடைத்தது. முதலாவது இடத்தை ஒரு பெண் தட்டிச் சென்று விட்டதாக நண்பர்கள் சொன்னார்கள். எனக்கு சிறிது வருத்தமாய்த் தானிருந்தது.

ஒரு நாள் இன்ஸ்டிட்டியூட்டில் வைத்து நான் போல்பெயின்ட் பேனா கொடுத்த அதே பெண்ணைக் கண்டேன். அவளும் என்னைப் பார்த்துவிட்டாள். சென்று பேசுவோமா என்று நான் யோசித்துக் கொண்டிருக்கையில், அவளே என்னை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

"ஹலோ திவாகர், உங்களைத்தான் இந்த ஒருவாரமாய்த் தேடிக்கொண்டிருக்கிறேன்." எனக்கு ஆச்சரியமாகவும் அதிர்ச்சியுமாயுமிருந்தது, என் பெயரைக் கூட தெரிந்துவைத்திருக்கிறாள் என்று.

"உங்களுக்குத் தான் நான் முதலில் நன்றி சொல்லணும், நீங்கள் அன்றைக்கு உதவி செய்திருக்காட்டில், எனக்கு முதல் பரிசு கிடைச்சிருக்காது."

எனக்கு இன்னும் வியப்பாயிருந்தது. என்னைவிட இவள் திறமைசாலியா என்று.

"என்ன ஒன்றுமே பேசமாட்டேங்கிறீங்க. என்மேல கோபமா, உங்களுக்கு கிடைக்கவேண்டிய பரிசை நான் பறிச்சிட்டன் என்று...?"

"சீ.... சீ... அப்படியொன்றுமில்லங்க..." நான் ஏதோ உளறினேன்.

"என்ன இது எனக்கு மரியாதை இனிமேல் ப்ரியா என்று என் பெயரை சொல்லியே கூப்பிடலாம்..."

அவள் இவ்வளவு அந்நியோன்யமாய் பேசியது எனக்கு அதிர்ச்சியாயிருந்தது. இப்போது தான் நான் அவளை முழுதாக ஆராய ஆரம்பித்தேன். சிவப்பு நிறத்தில் உடுத்தியிருந்த சுரிதார். முடி இரட்டைப் பின்னலாய் பின்னிவிடப்பட்டு முன்னால் நெஞ்சில்பட்டுக்கொண்டு நின்றது. பட படவென அவள் பேசுகின்றபோது கண்களும் சேர்ந்து பேசியது. எனக்கு முதன் முதலாக என்னவோ போலாயிற்று. மனசுக்குள் ஆயிரம் வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தன. மின்சாரம் பாய்வதுபோல் உடம்பெல்லாம் சிலிர்த்தது.

பிறகென்ன, இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமாக அவள் என் மனதில் இடம் பிடித்துக்கொண்டாள். என் நண்பர்களும் அதற்கேற்றாற்போல் என். ஆசையைத் தூபம் போட்டு வளர்த்துவிட்டார்கள்.

தினமும் இரவில் படிப்பதற்காக புத்தகத்தை திறக்கின்றபோது அவளது சிரித்த முகம் தான் கண் முன் தோன்றும். அவளோடு விதம் விதமான உடைகளில் டூயட் பாடித்திரிந்தேன் கனவில்.

படிப்பில் சிறிது சிறிதாக அக்கறை குறைந்து கொண்டு வந்தது. எப்போதும் வகுப்பில் முதலாம் பிள்ளையாய் வரும் நான் ஐந்து, பத்து, இருபது என்று ஒவ்வொரு பரீட்சையிலும் பின்னால் வந்து கொண்டிருந்தேன். கடைசியில் இறுதிப் பரீட்சையிலும் கோட்டை விட்டேன். என் வீட்டில், நீ படித்தது போதுமென்று படிப்பிற்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். அதற்காக கூட நான் வருத்தப்படவில்லை. படிப்புத் தான் நிறைவேறவில்லை, காதலாவது கை கூடட்டும் என்று என் உயிர்க் காதலை அவளுக்குத் தெரிவித்த போது அவள் கூறிய வார்த்தைகள்...

"இங்க பாருங்க திவாகர், நான் உங்களோட சிநேகிதமா பழகினதை வைச்சு உங்களைக் காதலிக்கிறதா நீங்கள் நினைச்சா, அதற்கு நானா பொறுப்பு. இப்படித் தெரிந்திருந்தா உங்களோட நான் பழகியிருக்கவே மாட்டேன். காதல் என்ன கடையில வாங்கிற பொருளா, நீங்க கேட்ட உடன நான் தாரதுக்கு?"

அவள் கேட்டாள், என்னைப்பார்த்து கேட்டாள். அவளுக்காக சகலதையும் இழந்து நிற்கும் என்னிடமே கேட்டாள். இரும்பைக் காய்ச்சி காதில் ஊத்தியது போலிருந்தது அவளது வார்த்தைகள். குதிரையில் நான் மட்டும் பின்னோக்கிப் போவது போலிருந்தது. என்னுடன் டூயட் பாடிக்கொண்டிருந்த வெள்ளைத் தேவதைகளெல்லாம் என்னைத் தனியாக விட்டுவிட்டுப் பின்னால் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

நான் கேட்டேன் இறுதியாக அவளிடம்,

"அப்ப என்னை என்னதான் செய்ய சொல்றீங்க?"

"இந்தக் காதல் கத்தரிக்காய் என்றதையெல்லாம் மறந்துவிட்டு, முதலில படிச்சு முன்னேறுர வழியைப் பாருங்க திவாகர்.

"உங்க மனசில ஆசை வளர்ர மாதிரி நான் நடந்துகிட்டிருந்தா என்னை மன்னிச் சிடுங்க்."

கூறிவிட்டு என் பதிலுக்குக்கூட காத்திராமல் அவள் விறுவிறென்று நடந்து போய்விட்டாள். என்னால் சினிமாவில் வாரது போல் தாடி வளர்த்துக்கொண்டு, போத்தலும் கையுமாக தேவதாஸ் கோலத்தில் திரியமுடியவில்லை. அதற்கு என் குடும்ப நிலைமை இடம் தரவில்லை. ஏதோ ஓரளவுக்கு ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டது இந்த வெள்ளைக்கார ஹோட்டலில் சர்வராக சேர்வதற்கு உதவியது. இரண்டு வருடங்களாக மனதில் பூட்டிய உணர்ச்சிகளுடன் இதே ஹோட்டலில் இருந்து வருகிறேன்.

ஆகவே இளைஞர்களே காதலிக் காதீர்கள் பெண்க.....

ஆ கொஞ்சம் பொறுங்கள்..... அவள்......அவள்...ப்ரியாவே தான்.....

தோழிகளுடன் ஹோட்டலுக்குள் நுழை கிறாள். எனக்கு இதயம் பக்பக் கென்று அடித்துக்கொண்டது. இங்கும் வந்து விட்டாள்.....

என்னை ஒழுங்காக வேலை செய்யக் கூட விடமாட்டாள் போலிருக்கிறதே. ஆ... என்ன இவள் எனக்கு ஒதுக்கப் பட்டிருந்த டேபிளிலேயே அமர்கிறாள்....

எப்படிப் போய் அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கப் போகிறேன். முருகா இது என்ன சோதனை மீண்டும் எனக்கு....!

மனதைக் கல்லாக்கிக் கொண்டு மெனுகார்டை டேபிளில்கொண்டு போய் வைத்தேன்.

அவள்தான் கார்டைப் பார்த்து ஆர்டர் பண்ணிக் கொண்டிருந்தாள். கடைசியாக கூறியபடி நிமிர்ந்தபோது என்னைப் பார்த்து விட்டாள்.

"ஆ.... திவாகர் நீ...ங்களா?" அதிர்ச்சியுற்றவளாக புருவங்கள் உயரப் பார்த்தாள். நானோ முகத்தில் எந்த வித சலனத்தையும் காட்டவில்லை. ஆனால் உள்மனதோ சொல்லிற்று:

'திவாகரே தான், உன்னால், உன் மீது கொண்ட காதலால் எல்லாவற்றையும் இழந்து நின்ற அதே திவாகர் தான், உனக்கு சந்தோஷம் தானே...'

என் மனம் அவளுக்கு புரிந்ததோ என்னவோ தலையைக் குனிந்து கொண்டாள். "எனி மோர் ஐடம்ஸ்" நான் கேட்டதற்கு அவளிடமிருந்து பதிலில்லை. நான் கொண்டு வந்து வைத்த உணவு வகைகளை அவளது தோழிகள் தான் ருசி பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவளது கைகளோ மேசையில் வட்டம் போட்டுக் கொண்டிருந்தன. அடிக்கடி என்னையே திரும்பித் திரும்பி பார்த்தபடியிருந்தாள். கண்கள் ஆயிரம் "ஸாரி" சொல்லிற்று. எனக்கே அவளது நிலையைப் பார்க்க சிறிது சங்கடமாய்ப் போயிற்று.

பில்லுக்குரிய மிகுதியை வைத்த போது அதை அப்படியே வைத்துவிட்டு தோழிகளுடன் சென்றாள். மீண்டும் அவளது கண்கள் என்னையே பார்த்தன.

எனக்குத் தெரியும். அவளால் இன்று இரவு முழுக்க தூங்கவே முடியாது என்று. அவளது மனசாட்சி உறுத்திக்கொண்டே தான் இருக்கும்.

'அடியேய் உனக்கு அன்று உதவி புரியப்போய்த் தானே அவருக்கு இன்று இந்த நிலைமை' என்று குத்திக்காட்டும்.

என் முகம் அவள் கண்முன் தோன்றியபடியே தான் இருக்கும்.

திரும்பத் திரும்ப என்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் போது அவளுக்கே அவள் மீது சந்தேகம் ஏற்படும். என்னைக் காதலிக்குறோமா என்று....

ஒரு இனம்புரியாத புது உணர்ச்சி அவள் உடல் முழுக்க ஓடிக்கொண்டிருக்கும்....

தலையணையை இறுக அணைத்துக் கொள்வாள். அப்படியும் தூக்கம் வராது. படுக்கையில் புரண்டு கொண்டேயிருப்பாள்.

எப்போ விடியும், மறுபடியும் என்னை காணலாமென்று அவள் மனம் ஏங்கித் தவித்துக் கொண்டு விடிய விடிய விழித்திருப்பாள்.

மறுநாள் பொழுது விடிந்து ஹோட்டல் திறந்ததும் என் கண்கள் வாசலையே பார்த்துக்கொண்டிருந்தது. அவள் வருவாளோ என்று. நான் நினைத்தது வீண் போகவேயில்லை. அவள் ஓடி வந்து கொண்டிருந்தாள். எனக்குத் தெரியும். நான் எண்ணியது போல் அவள் என்னை நினைத்து தவித்திருக்கிறாள். என்னைப் போலவே அவளும் உறங்காது விழித்திருக்கிறாள்.....

நான் என் வேலையை மறக்கிறேன். அந்த இடத்தை மறக்கின்றேன். என்னையே மறக்கிறேன். நானும் அவளை நோக்கி ஓடுகின்றேன்.

இருவரும் ஒருவரையொருவர் கண் வெட்டாது பார்த்துக்கொண்டு நிற்கின்றோம்.

எங்கள் இருவர் கண்களும் ஒராயிரம் கதை பேசிற்று....

திடீரென்று எங்கள் முன் வெள்ளைத் தேவதைகள் தோன்றினார்கள். நாங்கள் டூயட் பாடினோம். இருவரும் ஒன்றாக குதிரையில் முன்னோக்கி வந்து கொண்டிருந்தோம்.

என் உதடுகள் முணுமுணுத்தன. இளைஞர்களே காதலியுங்கள், பெண்களை நம்புங்கள். காதல் உங்களை வாழவைக்கும். காதல் வாழ்க.

சுபம்.

---

**தினமுரசு வாசகர்கள் வித்தியாசமானவர்கள், புத்திசாலிகள்....!**

## தீபாவளி வாழ்த்துக்கள்

ஒவ்வொரு தீபாவளிக்கும் சும்மா கதையும், கவிதையுமெழுதி ஒண்டையும் சாதிக்க முடியேல்ல கண்டியளோ, அதனால இந்த முறை நேராப் போய் நல்லூர் கந்தனை (அந்த மனுசனைக் கண்டும் கனகாலமாச்சு) கும்பிட்டுப் போட்டு, அப்பிடியே மடத்தடியில எங்கட சனம் தீபாவளியப்பத்தி என்ன கதைக்கினமெண்டு கேட்டுப்பாப்பம்.

(மடத்தடியில் நிற்கும் சண்முகம், சைக்கிளில் வரும் மணியத்தாரை இடைமறித்துக் கதைக்க ஆரம்பிக்கிறார். நாடகப் பாணியில் ஒவ்வொரு உரையாடலுக்கும் முன்பு "சண்முகம்", "மணியம்" என்று குறிப்பிடத் தேவையில்லையென்று நினைக்கிறேன். காரணம் "தினமுர"சின் வாசகர்கள் வித்தியாசமானவர்கள், புத்திசாலிகள் என்பது எனக்குத் தெரியும் (புல்லரித்துப் போனவர்கள் கொஞ்ச நேரம் இருந்துவிட்டு, தொடர்ந்து வாசிக்கலாம்)

"அட! அதில வாறது எங்கட மணியத்தாரெல்லே....ம்.... மனிசன் புதுச் சைக்கிளும் வாங்கிப்போட்டது போலக் கிடக்கிது....மணியம்.....மச்சான் மணியம்"

"யாரடா அவன் இந்த வயசில என்னை மச்சானெண்டு கூப்புடுறவன்... அட! சண்முகமே....(சைக்கிளை விட்டு இறங்குகிறார்.) எல்லாருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்."

(சுற்று முற்றும் பார்த்த சண்முகம்) "என்னடாப்பா! தீபாவளியும் அதுவுமா உனக்குத் தட்டிக்கிட்டிப் போட்டுதே.... இங்க நான் மட்டும்தான் நிக்கிறன். நீ எல்லாருக்கும் தீபாவளி வாழ்த்துச் சொல்லுறே?"

"ஹி...ஹி....ஹி.... அது ஒண்டுமில்ல மச்சான். எப்பவும் பொது நோக்கோடு சிந்திக்கவேணுமெண்டு யாரோ சொல்லியிருக்கினமாம்."

"அதுசரி. இண்டைக்குப் பேப்பர் பாத்தனியே? பொதுவா ஒவ்வொரு முறையும் பொங்கல், தீபாவளியெண்டால் யாராவது "விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கும்" எண்டு அறிக்கை விடுறதுதானே ஃபாஷன். ஆனா இந்த முறை அப்பிடி ஒண்டையும் பெரிசாக் காணேல்லை."

"அப்ப என்ன மச்சான் தீபாவளி பேப்பர் நியூஸ்?

"குடா நாட்டில் யுத்தம் எப்ப தொடங்குமெண்டு சொல்ல முடியாமக் கிடக்குதாம்.... உதப்பாத்தவுடன ஒரு புதுப்பாட்டுத்தான் ஞாபகம் வருது."

"என்ன பாட்டு மச்சான்?"

"(யுத்தம்) இப்பவருமோ, எப்ப வருமோ, ஆசையாயிருந்தா அப்ப வருமோ...ஒரு சோடிக்கிளி சோலை ஒண்டைத் தேடு...."

"மச்சான் கோவமிருந்தால் என்னை அடி. அதுக்காக இப்பிடிப் பாட்டுப் பாடாதே"

"ஹி...ஹி... பாத்தியே கடிச்சுப் போட்டே! வேம்படியில (50 வருஷத்துக்கு முந்தி) படிக்கேக்க இருந்த "கடிப் பழக்கம்" இன்னும் உன்னைவிட்டுப் போகயில்ல மச்சான். அதுசரி, பெண்டில் பிள்ளையள் ஊரோட தானோ?"

"மூத்தவன் சுவிசில, இரண்டாவது பெடியன்.... தெரியும்தானே? மூண்டாவது பெட்டை கலியாணம் கட்டி கனடாவில, நாலாவது பெடியன் கொழும்பில, அஞ்சாவது பெட்டை கெம்பசுக்குப் போறாள் (இடைக்கிடை படிக்கிறதாவும் கேள்வி) மொத்தம் எத்தினையைச் சொல்லிப் போட்டன்?"

"ம்... அஞ்சு மச்சான்."

"அப்ப இன்னும் மூண்டு மிச்சம்! ஆறாவதும், எட்டாவதும் எங்களோட நிக்குது. இந்த விடுபட்ட ஏழாவது யாரோ ஒரு தறுதலையோட ஓடிப் போட்டுது"

"அப்ப மனிசி?"

"அட்! முக்கியமான ஆளை.... (கொஞ்சம் மரத்தடியில வந்து நிண்டு




கதையுங்கோ. வானத்தில "ஏதோ" வாற சத்தம் கேக்குது)...மனிசியப் பத்திக் கேட்டனீங்களெல்லோ.... அவள் நாலாவது பெடியனைப் பார்க்க கொழும்புக்குப் போட்டாள். போகேக்க கிளாலியில தப்பினது அருந்தப்பாம்."

"ம்.... நாங்கள்தான் இங்கை தீபாவளியும் அதுவுமா கஷ்டப்படவும் கொழும்பில இருக்கிற சனம் (எங்கயோ ஹெலி சத்தம் கேக்குதெல்லே) சந்தோஷமா தீபாவளி கொண்டாடுறதா இருக்கும் என்ன?"

"நீயொண்டு! .... எனக்குக் கவலையெல்லாம் (என்னதான்) பிரச்சனையெண்டாலும் ஒரு தீபாவளித் தினத்திலாவது உலகம் முழுக்க சிதறி இருக்கிற என்ர பிள்ளையள் ஒரே இடத்தில இருந்து சந்தோஷமா இருக்க வேணும் எண்டுறதுதான்."

"மச்சான்! கவலைப்படாத. தீபாவளியெண்டால் என்ன? நரகாசுரன் என்ற அசுரனை எங்கட கடவுள் "நொக்கவுட்" செஞ்ச நாளெல்லே..... இன்டைக்குச் சொல்லுறன். நிச்சயமா அமைதி வரும்....

இங்க இதை வாசிச்சனியே" அடுத்த தீபாவளிக்காவது முழுக்குடும்பத்தோடும் அமைதியாக மூச்சுவிட வழிபிறக்க வேண்டும்."

"அருமையான வேண்டுதல்தான்...... மச்சான் அப்ப நான் வரப்போறன் ஒருக்கா கச்சேரியடிக்குப் போட்டு அப்பிடியே சந்தைக்கும் போகவேணும்."

"கொஞ்சம் பொறு மச்சான். உந்தச் சந்திக் கடையில நிக்கிற சிவகுமாரையும், புஸ்பானந்தனையும், குளத்தடி ஆனந்த சாமியின்ர மூத்த மகன் சத்திய நாதனையும் எங்கட வீட்டுப்பக்கம் ஒருக்கா வந்திட்டுப் போகச் சொல்லு. அதோட உன்ர பெடிச்சியள் புனிதா, மீனா, தேவி, புதுசா கலியாணம் கட்டின... ஆ. கீதா, சுகா, உவள் கடைக்குட்டி?..."

"விஜிதாவோ?"

"ஓமோம் விஜிதாவுக்கும் என்ர உள்ளம் நிறைஞ்ச தீபாவளி வாழ்த்தைச் சொல்லிப் போடுங்கோ.... மச்சான் சும்மா சொல்லக்கூடாது. எங்கட தமிழினம் அழிஞ்சு போகக் கூடா தெண்டே நீயும் பெட்டையாப் பெத்திருக்கிறே!"

"ஹி....ஹி... மச்சான் பொறுத்திருந்து பார், அடுத்த் தீபாவளிக்கு (மனிசி சம்மதிச்சா) ஆற, ஏழாக்கிக் காட்டுறன்."

"வேண்டாம் மச்சான். உன்ர வயசுக்கு ஏழாவது பிறந்தால் உன்னைத் "தாத்தா" எண்டுதான் கூப்புடும்."

"பரவாயில்லை மச்சான். பிள்ளைக்குச் சிங்களம் தெரியுமெண்டு சொல்லிச் சமாளிக்கலாம்....ஹி.....ஹி"

(தாத்தா என்றால் சிங்களத்தில் அப்பா)

"ப்ார்த்தியே திரும்பவும் கடிச்சுப் போட்டே!....அப்ப நான் வாறன் மச்சான். எல்லாருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்.

(அதற்கும் மேலதிகமாக வாசகர்களுக்கு எனது அதிகபட்ச தீபாவளி வாழ்த்துக்கள்!)

(நன்றி)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# என்ன செய்யப் போகிறாய்?



முகில் வண்ணன்

'டும்.....டமார்'

பலத்த ஓசையுடன் எழுந்த அந்த வெடிச்சத்தம் அந்தப் பிரதேசம் முழுவதையும் அதிர வைத்தது. அக்கம் பக்கத்தில் இரவு நேரம் படுத்து இருந்த மக்கள் 'இடியோசை' போன்ற சத்தத்தையும் நில அதிர்வையும் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தனர்.

அவர்களுக்குச் சிந்திக்க நேரமில்லை. அந்தக் கிராமமே பயந்து வெருண்டு ஓடியது. பாக்கியமும் தன் வயதுவந்த மகள் சுகந்தியுடனும் வயதுக்கு வர இன்றோ, நாளையோ என்று இருக்கும் சுகன்யாவுடனும் அவளுக்கு அண்ணனான சுதர்சன், தம்பி சுதன் ஆகியவர்களுடன் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

வானத்தில் இருந்து சலசலவெனச் சத்தம் கேட்டது. நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுகின்றதா? இல்லை வெடியில் கிளம்பிய வாகனமும் அதில் இருந்தவர்களும் அவர்களது ஆயுதமுமாக இருக்க வேண்டும்.

என்னவாய் இருந்தால் என்ன? உயிர் தப்பிப் பிழைக்க வேண்டாமா? குண்டியில் காலடிபட ஓடிக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

ஓடியவர்கள் குளத்தோரம் இருந்த நாணல் பற்றைக்குள்- சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை என்ற காரணத்துக்காகத் தங்கள், சின்னஞ்சிறுசுகளையும் கணவன் மாரையும் ஒழிந்து இருக்கும்படி கூறுகின்றனர்.

இடுப்பளவு சகதியில், நுளம்புக் கடிக்கு மத்தியில் தம்மை நாணல்களுக்கிடையில் மறைத்துக்கொள்கின்றனர்.

பெண்கள் மட்டும் பக்கத்தில் இருந்த மாரியம்மன் கோயிலை நோக்கி ஓடுகின்றனர். சுகன்யாவினால் ஓடமுடியவில்லை. தாய் பூனைக் குட்டியைக் கவ்விக் கொண்டு ஓடுவது போல் தூக்காத குறையாக இழுத்துக்கொண்டு செல்கிறாள். 'இன்னும் கொஞ்சம் தான் மகள்' அங்குபோய் இருக்கலாம் வா' என்று மூச்சிரைக்கக் கூறுகிறாள்.

கோயிலில் ஊர்ப் பெண்கள் அனைவரும் திரண்டிருந்தனர். ஓடிவந்த சுகன்யா ஒரு மூலையில் உட்கார்ந்து விட்டாள். கூடவந்த சுகந்தி அலங்கமலங்க விழித்தவாறு இருந்தாள். நெஞ்சம் தெய்வத்தை இடையறாது பிரார்த்தித்துக் கொண்டிருந்தது. "தெய்வமே எங்களைக் காப்பாற்று, எனதுசகோதரர்களைக் காப்பாற்று. இந்த ஊரையும் மக்களையும் காப்பாற்று தாயே, உன்தாழ் சரணம் அம்மா" என்று இடைவிடாமல் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். இடைக்கிடையே நேர்த்திகள்.

அம்மன் கைவிட்டாளோ என்னவோ என்று பக்கத்தில் இருக்கும் மாதா கோயிலுக்கு மெழுகுதிரி ஏற்றுவதாக வேண்டுதல். அதை அடுத்து சற்று தொலைவில் இருக்கும் பன்சலையில் புத்தருக்கு, அரச இலை வடிவில் இருக்கும் அகல்விளக்கு அனைத்தையும் ஏற்றுவதாக- இப்படி மாறிமாறி எண்ணங்கள் சுழன்று கொண்டிருக்கின்றன.

நெஞ்சுத் துடிப்பு இன்னமும் அமைதியடையவில்லை. பயப் பிராந்தியில் வேகம் தணியவில்லை.

இருபக்கங்களில் இருந்தும் பல வாகனங்கள் வரும் சத்தம் அந்த இருட்டையும் கிழித்துக்கொண்டு கேட்டது. சுற்று நேரத்தில் சுற்றுப் புறமெங்கும் வெடிச்சத்தம் சிறிது நேரத்துக்குக் கேட்டவண்ணம் இருந்தது. அடிக்கடி ஆகாயத்தில் வெளிச்சக்குண்டுகள் வண்ண ஜாலம் காட்டி வெளிச்சத்தைக் காட்டின. ஓ....... அந்தக் காலத்தில் கோயிற் திருவிழாக்களில் வாண வேடிக்கை காட்டுவது போல்.

வெடியோசை- தீர்ந்ததும், வீடெங்கும் தேடுதல் வேட்டை. திறந்தது திறந்தபடியே வெறிச்சோடிக் கிடக்கும் வீடுகள். எந்த வீட்டிலும் எவரும் இல்லை. இறுதியாக விடியும் நேரம் கோயிலை வந்தடைகிறார்கள்.

"ஆண்கள் எல்லாம் எங்கே?"

அதட்டல்!

"........." மௌனம்.

"பயந்து ஓடி விட்டாங்களா?" பயம் வேண்டாம். வீட்டுக்குப் போங்க......" ஆத்திரம் அடங்கியவர்களாகக் கூறிச் செல்கிறார்கள்.

விடிந்ததும், அவர்களின் நடமாட்ட அரவம் அடங்கியதும் மெல்ல மெல்லக் கூட்டம் கலைந்து வீடுகளுக்குச் செல்கின்றது. பாக்கியம் மக்களை கூப்பிடுகிறாள்.

"என்னால ஏலாது அம்மா. இடுப்பு வலிக்கிது." என்கிறாள் சுகன்யா. குந்தியவள் இதுவரை எழும்பவே இல்லை. தாய்க்குப் புரிந்து விடுகின்றது.

"கடவுளே இந்த நேரத்திலா? தாயே உன் கோயிலிலா?" என்று எண்ணித் தலையில் அடித்துக்கொண்டவள் "எழும்பு மகள் உடனே வீட்டுக்குப் போயிருவம்."

'ஏலாது' என்று சிணுங்கியவளை தாய் தூக்கி நிறுத்த அதிர்ந்து போகிறாள். தாய் தனது சேலையில் பாதியைக் கிழித்து மகளைச் சுற்றிக் கொண்டு வீட்டுக்குப் புறப்படும் போது கோயிலில் வேறு எவரும் இருக்கவில்லை. வீட்டை நெருங்கிக் கொண்டிருந்த போது அக்கம் பக்கத்தில் இருந்து ஓலம் வந்தது. என்ன ஏது என்று விசாரிக்க ஏது நேரம்? விரைவாக வீட்டைச் சென்றடைய வேண்டுமே. மகளை அணைத்தபடி நடக்கிறாள் பாக்கியம்.

இன்னும் சற்றுத் தொலைவில்தான் வீடு.

வீட்டுக்கு வந்தவர்கள் தடுமாறுகிறார்கள். தாங்கள் வீடுமாறி வந்து விட்டோமோ என்ற வியப்பு. வீட்டில் உள்ள அனைத்துப் பொருட் களும் அடித்து நொருக்கப்பட்டு நடு ஹோலில் போட்டு எரிக்கப்பட்டு இருந்தது. சுகன்யாவுக்கு மாற்றி உடுக்கக்கூட மாற்றுத் துணி ஒன்றுகூட இருக்கவில்லை.

தாய் நெஞ்சிலடித்து ஒப்பாரி வைத்தாள். பிள்ளைகள் சிலையாக நின்றார்கள். சுகந்திக்கு அடுத்த மாதம் திருமணத்திற்காக செய்த நகைகள், வாங்கிய புடவைகள், காசு பணம்எதுவுமே இல்லை. தாயை ஆசுவாசப் படுத்தப் பிள்ளைகளால் முடியவில்லை.

வீட்டுக்கு வீடு வாசற்படி போல் எங்கும் இதே நிலைதான். ஆறுதலடைந்த மக்கள் சிலர் வந்து "வாருங்கள் அகதிமுகாமுக்குச் செல்வோம்" என்று அழைக்கிறார்கள்.

தனக்காக இல்லாவிட்டாலும் தன் குழந்தைகளை மனதில் எண்ணி நாணல் பற்றைக்குள் புதையுண்டு கிடந்த மக்களையும் அழைத்துக்கொண்டு நடக்கிறார்கள். ஏற்கனவே அகதிமுகாமில் குடியிருக்கும் மக்கள் இவர்களை வரவேற்கிறார்கள்.

பாக்கியம் மக்களுடன் ஒரு மரநிழலில் இருந்து அழுகிறாள். பிள்ளைகளும் சேர்ந்து அழுகிறார்கள்.

பெயர்கள் பதிவு நடக்கின்றது. தேவாலய சுவாமி நோட்டமிட்டவாறு சுற்றிப் பார்க்கிறார். இவர்கள் அருகே வருகின்றார். இவர்கள் அழுகைச் சத்தம் கூடுகின்றது. மக்களும் கூடுகின்றனர்.

"இந்த நேரத்தில் எனக்கு இப்படி ஒரு நிலை" என்று சொல்லி அழுகிறாள் பாக்கியம்.

"கர்த்தர் உங்களை ஆசிர்வதிக்கட்டும்" என்று சிலுவை அடையாளமிட்ட சுவாமி தனது பொக்கற்றுக்குள் இருந்து பணமெடுத்துக் கொடுத்து 'வேண்டியதைச் செய்யுங்கள்' என்கிறார்.

"வேண்டாம் சுவாமி எங்களுக்கு அடைக்கலம் தந்ததே போதும்" என்று மறுத்து விடுகிறாள்.

அங்கிருந்த பெண்கள் நிலைமையை உணர்ந்து கொள்கிறார்கள். சுகன்யாவை அந்த மண்டபத்தின் ஒரு மூலையில் உட்கார வைக்கிறார்கள். இரவைக்கு 'நீவார்க்க' ஏற்பாடு செய்யப்படுகின்றது. ஆளுக்கொரு உடுப்பு சாறி என்று கொடுத்து உதவுகிறார்கள். அகதியாக வந்த பின்னர்தான் எவ்வளவு பெருந்தன்மை!

அன்று மாலை நீரை வார்த்து ஆடை மாற்றியதுடன் அந்தச் சடங்கு நிறைவேறி விடுகின்றது. கறிக்குப் போடவே மஞ்சள் இல்லை. அரைத்துப் பூச மஞ்சள் ஏது? தலைக்குப் பூசவே எண்ணை இல்லை குடிக்கக் கொடுக்க நல்லெண்ணை ஏது? சாப்பிடவே தவங்கிடந்தோம். முட்டைக்கு வழியேது? இத்தியாதி கருமங்கள் எதுவும் இல்லாமலே தண்ணீர் வார்த்த பின் முகாமில் கொடுக்கப் பட்ட பாண் ஒரு துண்டும் பருப்புக் கறியும் கொடுக்கப்படுகின்றது.

சுகந்தி தனக்கு நடந்ததையும், சுகன்யாவுக்கு இப்போது நடப்பதையும் மனதுக்குள் ஒப்பிட்டுக்கலங்குகின்றாள்.

விடிந்ததும் வழமைபோல் எழுந்து நடமாடுகின்றாள் சுகன்யா. இரவு ஒரு மணியில் இருந்து விடியும்வரை ஊர் 'ரவுண்ட்அப்' பண்ணப்பட்டு ஆண்கள் எல்லாம் அழைத்துச் செல்லப்பட்டதாகச் செய்தி வருகின்றது. இது முந்திய செய்தி. பிந்திவந்த செய்தியில் சுகந்திக்குப் பேசிய மாப்பிள்ளை வரதனும் பிடிபட்டிருக்கிறான், என்று தகவல் வருகின்றது. இப்போது சுகந்தி ஒரு மூலையில் குந்திவிட்டாள்,

அவள் மனம் பட்டபாடு- சொல்லுந் தரமன்று. அவள் வேண்டாத தெய்வம் இல்லை. வணங்காத நேரம் இல்லை. கண்ணீர் வழிந்த வண்ணமே இருந்தாள். ஊனும் இல்லை. உறக்கமும் இல்லை. இன்று வருவார் நாளை வருவார் என்று எதிர்பார்ப்பில் இருதயம் மெல்ல மெல்ல இயங்கிக் கொண்டிருந்தது.

வரதன் பிடிபட்ட மூன்றாம்நாள். தேடிச் சென்ற தாய் தகப்பனுக்குக் கிடைத்த தகவல்: "வரதனா? அப்படி ஒருவரை நாங்கள் பிடிக்கவில்லையே!" வரதனும் காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்க்கப்படுகின்றான்.

தாய் தலையில் அடித்து ஓலமிட்டவாறு அகதிமுகாம் வருகிறாள். அவள் செய்தி எதுவுமே சொல்லவில்லை. மருமகளைக் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைக்கிறாள். கையிலிருந்து மருமகள் நழுவி விழுகிறாள்.

சத்தம், சந்தடி, "விலகுங்கள். விலகுங்கள், தண்ணீர் கொண்டு வாருங்கள், வீசுங்கள்," என்று பலகுரல்கள். தாயின் ஒப்பாரியும் மாமியின் ஒப்பாரியுடன் சேர்ந்து விடுகின்றன. சற்று நேரம் அகதி முகாமே சோகத்தில் ஆழ்ந்து விடுகின்றது.

அவர்களுக்குள் தான் என்ன ஒற்றுமை! என்ன பாசப்பிணைப்பு! தமிழர்களைக் கண்டு தமிழர்களே பொறாமைப்படவேண்டும். ஆனால் இது அகதிமுகாமை விட்டு நீங்கியதும் இருக்குமா?

அவள் கண் விழிக்கிறாள். தாயின் ஓலம் மெல்லக் குறைகிறது.

"தெய்வமே தமிழினத்தை என்ன செய்யப் போகிறாய்? பாபப்பட்ட சமூகமா நாங்கள்? இல்லை யாரிட்ட சாபமோ? அப்படி என்றால் இயற்கையைச் சீறவைத்து எம்மை மொத்தமாக அழித்துவிடு. இப்படியும் ஒரு வாழ்க்கை தேவையா எமக்கு?" எண்ணிக் கலங்குகிறது அந்த தாயுள்ளம். ■

(யாவும் கற்பனையே)

குட்டிக்கதை

# கதையெழுது கண்ணீரில் எழுதாதே...

-ஷர்மிளா இஸ்மாயில்-



"உங்களது கதைகளில், கவிதைகளில் பிரதானக் கருவாக காதல் தோல்வியையே வைத்தெழுதுவது சரியெனப்படவில்லை எனக்கு"-கூறிய அவளைத் தீர்க்கமாகப் பார்த்தான் அவன். நிமிட நேர மௌனத்தின் பின் "அது என் விருப்பம். இன்னும் சொல்லப் போனா என் உரிமையும் கூட. மனசு நினைக்கிறத எழுதுறதில தவறேதும் இல்லையே." சொன்னான் அவன்.

அவள் சளைக்கவில்லை. "உலகத்துல எத்தனையோ பிரச்சனைகள். நம் நாடு எரியுது. அகதிக் கூட்டம், இயற்கை அனர்த்தம், வாழ்க்கையின் யதார்த்தமான நிகழ்வுகள் - இதப்பத்தியெல்லாம் எழுதலாமில்லே. காதல் வாழ்க்கையில் ஒரு பகுதி மாத்திரம் தான். வாழ்க்கையே காதலுக்கு தான் என்கிற தவறான கருத்து உங்ககிட்ட விதைக்கப்பட்டிருக்கு. கூடாது. அதுவும் முன்பெல்லாம் ஆரோக்கியமா சமூகப் பிரக்ஞையுடன் எழுதினீங்க. இப்போ வெறுமனே காதலை, தோல்வியை எழுதுவது நல்லதில்லைன்னு நான் சொன்னா தவறா எடுத்துக்கப்படாது நீங்க." அவள் தொடர அவன் சற்று கரிச்சல் முகம் காட்டியவனாய், "நீங்க என்ன சொன்னாலும் என் முடிவ நான் மாத்திக்கப் போறதில்ல. 'ஐம் ஸொரி.' இனிமே இதப்பத்திக் கதைக்கிறதில எனக்கு இஷ்டமில்ல. அடிபட்டவன் நான். உயிரையே வெச்சு அன்பாயிருந்தேன். கடைசியில காயப்படுத்திட்டுப் போய்ட்டா. கவலைப்படாதீங்க, படக்கூடாதுன்னு யாரும் சொன்னா என்னால அத ஏத்துக்க முடியறதில்ல. எழுத்துக்களால என் மனசைக் கழுவிக் கிறேன். கண்ணீர பேனை நுனியால சிந்திக்கிறேன். ப்ளீஸ். இப்படிச் செய்யாதேன்னு சொல்லி என்ன தடுத்திராதீங்க. நீங்க என் இரசிகன்னு நினைச்சு பெருமைப்படறேன். என்ன வந்து சந்திச்சதுக்கு ரொம்ப நன்றி." அவன் முற்றுப் புள்ளியிட்டான்.

மனதுக்குள் பாரமாய் ஏதோ அழுத்த அவளும் நன்றிகூறி விடைபெற்றாள். நல்ல எழுத்தாளனாக இருந்தவன். தெளிவான நடையும், சிறப்பான கருத்துக்களும் துள்ளிப் பாயும் அவனது எழுத்துக்களில் துடிப்பான எண்ணவோட்டம். வாசகர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை. அவளும் இரசிகையானாள். ஆனால், அவனது மறுபக்கம் அவளுக்குத் தெரிய—ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அவனது எழுத்தின் திமிர் திருப்பமும் ஏனென்பதும் புரிந்தது.

அவளது பக்கத்து வீட்டில் புதிதாய்க் குடிவந்த புதுமணத் தம்பதிகளில் மணப் பெண் ரேகாவே அவனது பழைய காதலியென்பது இவளுக்குத் தெரிய வந்ததும் ஏகமாய் அதிர்ந்தாள். இவளை ஒரு தோழியெனக் கொண்டு விட்ட ரேகா, அவன் அங்கே பத்திரிகையில் கவிதைகளில், கதைகளில் கண்ணீர் வடித்தெழுதுகையில் இங்கு இதயம் துடித்து அழுவாள். இவளிடம் கூறி ஆறுதல் தேடுவாள். பாவம். பரிதாபமான பெண். பெற்றோரின் கட்டளையும் கெடுபிடியும் ரேகாவை அவனைவிட்டும் பிரித்து வேறொருவனுக்கு மாலையிட வைத்தன. பலவீனமான பெண் ரேகா. பெற்றோருக்குப் பணிந்து விட்டாள். ஆனால் அவன் மீது வைத்த அன்பு அப்படியே உயிர்ப்பாயிருந்தது. அதுவும் அவனது படைப்புக்களில் அவனது சோகம் கண்டு துடித்துப் போவாள். கூடவே குற்ற உணர்வும் நெஞ்சத்தை உறுத்துவதாய்ப் புலம்புவாள். பேதைப் பெண்ணின் நிலமை கண்டு நெஞ்சு கலங்கிய இவள் அவனது விலாசம் தேடிப் போனாள்.

அவனிடம் எழுத்துக்களில் அவளைப் பிரதாபிப்பதைத் தவிர்க்குமாறு வேண்டிய இவளது வேண்டுதலை- காதல் காயத்தைக் காட்டிப் புறக்கணித்தான் அவன். அவனும் பாவம்தான்! ஊமைக் காயத்தைக் கட்டி வைத்துக் கஷ்டப்படும் மனசு, எழுத்தில் அழுகிறது. தடுப்பதும் சரியெனப் படவில்லை இப்போது.

என்ன செய்வது- தர்ம சங்கடமாய்ப் போய் விட்டது. ரேகா நாளுக்கு நாள் மனம் கலங்கிப் போனாள். மீண்டும் அவனைச் சந்திப்பது இயலாது என்றெண்ணிய இவள் அவனுக்கு பெரியதொரு மடல் வரைந்தாள். பதிலில்லை. பத்திரிகை, வானொலியில் அவனது ஆக்கங்கள் சோகம் சுமந்தனவாய் தடம் பதித்துச் செல்வது மாத்திரம் நிற்கவில்லை.

காலம் உருண்டோட, வாழ்க்கையிலும் நினைக்காத-நினைத்துப் பார்க்க முடியாத பல திருப்பங்கள். ஒரு நாள் வாசற் கதவை அழைப்பு மணியோசை கேட்டு திறந்தவள் திடுக்கிட்டாள்.

அவன் நின்றிருந்தான். "வாங்க" என்று சொல்லக் கூட தோன்றவில்லை இவளுக்கு. அவனாகப் பேசினான்.

"உங்க லெட்டர் கிடைச்சது. நீங்க சொன்னதையெல்லாம் வெச்சு யோசிச்சுப் பார்த்தேன். அப்போ நான் செய்றது தவறுதான்னு பட்டிச்சு. ரேகா பாவம். ஏதோ என்னை ஏமாத்திட்டான்னு நினைச்சு ஏற்பட்ட வெறி. நீங்க அவ பக்கம் இருந்த நியாயத்தைச் சொன்னீங்க. ஆனா வெறி கண்ணை மறைச்சுட்டது.... இனிமே அப்படி எழுதப் போறதில்லன்னு முடிவெடுத்துட்டேன். அத உங்ககிட்டச் சொல்லிட்டு, முடிஞ்சா ரேகாகிட்டயும் மன்னிப்பு கேட்டுட்டுப் போகலாம்னுதான் வந்தேன். 'டூ லேட்னு' தெரியுது, ஆனாலும்..."

அவள் நீண்ட மௌனம் சுமந்தாள். பெருமூச்சு ஒன்று விடை பெற்றது.... பின் மெதுவாய் வாய் திறந்தாள்.

"யெஸ் மிஸ்டர் ரகுவரன். யூ ஆர் டூ லேட்." அவன் திடுக்கிட்டுப் போனான். "வாட் டு யூ மீன்?"

"ஐ மீன், ரேகா இஸ் நோ மோர்." இப்போ ரேகா இங்க இல்ல. இங்க மட்டுமில்லை. இந்த உலகத்தையும் விட்டுட்டுப் போய்ட்டா அவ. உங்க எழுத்து அவ மனசை ரொம்பவும் பாதிச்சிடுச்சு. குற்ற உணர்வு தாங்க முடியாம ஒரு நாள் தற்கொலை பண்ணிக்கிட்டா. மென்மையான மனசு கொண்டவ. அவளுக்கு இந்தக் கதி வந்திருக்க வேண்டாம்." குரல் கரகரக்க கண்ணீரோடு சொல்லி முடித்தவளை அதிர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தான் ரகுவரன்.

(கற்பனையில் பிறந்த கதை)



கத்தரித்த கடி ஜோக்ஸ்

## அடையாளம் தெரியவில்லை!

ஒரு நவ நாகரிக யுவதி காவல் நிலையத்திற்குள் நுழைந்தாள். அதிகாரியிடம் முறையிட்டாள்.

"என்ன அநியாயம்? பட்டப்பகலில் பார்க்கில் உலாவிக் கொண்டிருந்த போது ஒரு தடியன் என்னை பலவந்தமாக அணைத்து முத்தமிட்டுவிட்டு ஓடி விட்டான்."

அதிகாரி கேட்டார்:

"அவன் எப்படி இருந்தான்? ஏதாவது அடையாளங்கள் சொல்ல முடியுமா?"

பெண் சொன்னாள்:

"நான் சரியாகப் பார்க்கவில்லையே"

அதிகாரி விடவில்லை.

"என்னம்மா இது. பட்டப் பகலில் கூடவா அடையாளம் தெரியவில்லை?"

அவள் சொன்னாள்:

"எப்படிச் சொல்ல முடியும்? நான் தான் என்னை யாராவது முத்தமிட்டால் வழக்கமாகக் கண்களை மூடிக்கொள்பவளாயிற்றே." ■

ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் இப்படியொரு விளம்பரம் வெளியாகியிருந்தது.

**அறிவிப்பு:**

"இனி என் மனைவி வாங்கும் எந்தக் கடனுக்கும் நான் பொறுப்பாளி அல்ல. இப்படிக்கு, ஜான்."

மறுநாள் மனைவியின் விளம்பரம் வெளியாகியிருந்தது.

"என் கணவர் என் கடன்களுக்கு பொறுப்பாளியாக இருக்க வேண்டியதில்லை. ஏனென்றால் அவர் கடன்களையே அவரால் திருப்பிக் கொடுக்க முடியாது." ■



ஆசிரியர்- எங்கள் பத்திரிகையில் அரச கதை ஒன்று எழுதவேண்டும். என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

எழுத்தாளர்- அந்தப்புரம் ஒன்றும், உப்பரிகையும் கட்டிக்கொடுங்கள் போதும்.

அவள்- நான் இணங்க மறுத்தால், நீ சொன்னபடி உண்மையாகவே தற்கொலை செய்து கொள்வாயா?

அவன்- நிச்சயமாக, அதுதான் என் வழக்கம். ■

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மணியடித்தால் வெளியே வருவார்கள் மாணவர்கள்! பேயறைந்தது போல நடுங்குவார்கள் அயலவர்கள்!!




அமெரிக்காவில் நாகரிகம் வளர்ந்து வருகிறது. அதே சமயம் நாகரிகம் என்ற போர்வையில் சில அநாகரிகங்களும் அங்கங்கே தலைகாட்டத் தவறுவதில்லை.

கட்டற்ற சுதந்திரத்தை விரும்பும் இளைய தலைமுறை கட்டுப்பாடற்ற கூட்டமாக மாறிவருகிறது.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் கற்றுக்கொள்வதை விட கெட்டுக் குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறார்கள்.

மாணவ பருவம் ஜாலியான பருவம்தான். ஆனாலும் அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு.

அமெரிக்க மாணவர்களில் ஒரு பகுதியினர் மத்தியில் வன்முறைக் கலாசாரம் பரவி வருகிறது. மாணவர்கள் என்றாலே மற்றவர்கள் முகம் சுளிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

"சிறைச்சாலைக்கு அருகே இருக்கச் சொல்லுங்கள் இருக்கிறேன். உயர் நிலைப் பாடசாலைக்கு அருகில் மட்டும் வாழ மாட்டேன்"

இப்படித்தான் அமெரிக்காவின் பல மாநிலங்களிலும் பள்ளிகள் அருகே உள்ளவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

"சிறைச்சாலைகளில் கொலையாளிகள், கொள்ளையர்கள் போன்ற குற்றவாளிகள் உள்ளனர். ஒரு மணியடித்ததும் திறந்து விடப்படுகின்றனர். ஆனாலும் அவர்கள் வெளியே நடமாடமுடியாது.

ஒரு பள்ளிக்கூடத்தின் அருகில் இருந்தால் நிலைமையே வேறு. பள்ளிக்கூடம் விடப்படுகிறது என்றால், இன்று என்ன நடக்குமோ என்று அஞ்சி நடுங்கவேண்டியிருக்கிறது." என்கின்றனர் அயலில் உள்ளவர்கள்.

பள்ளிக்கூடங்களுக்கு அருகில் உள்ளவர்கள் மட்டுமல்ல, பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர்களும் பயந்து சாகிறார்கள்.

மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பயந்த காலம் மலையேறிவிட்டது என்கிறார் ஒரு ஆசிரியர்.

அவர் சொல்வது பொய்யல்ல. அண்மையில் கார் நெகி-அற்ரெக்ஸ் என்னும் அமைப்பு அமெரிக்க ஆசிரியர்களிடம் மாணவர்களின் இன்றைய போக்குப் பற்றி ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தியது.

97 சதவிகிதமான ஆசிரியர்கள் மாணவர்களால் தாம் அட்டூழியங்களை அனுபவித்ததாகக் கூறியுள்ளனர்.

இவர்களில் 51 சத விகிதமானவர்கள் மாணவர்களால் கத்தியால் குத்தப்பட்டுள்ளனர். துப்பாக்கிகளால் சுடப்பட்டுள்ளனர்.

பல பெண் ஆசிரியைகள் மாணவர்களால் பலாத்காரப்படுத்தப்பட்டனர்.

ஆசிரியர் யாராவது ஒரு மாணவரை சிறு தட்டுத் தட்டினால்போதும் உடனே ஆர்ப்பாட்டம். குழப்பம்.

மாணவர்களின் கோஷ்டிச் சண்டைகள் வீதிகளிலும் களம் காண்பது நடக்கும் போது அருகிலுள்ள வீடுகளின் தளபாடங்கள் நாசம்.

வீட்டு உரிமையாளர் வாய்திறந்தால் உயிர் போகக்கூடும்.அதனால் கப் சிப்.

ஆக, அமெரிக்காவில் மாணவர்களில் ஒரு பகுதியினரைக் கண்டால் மக்களுக்கு மரண தூதர்கள் கண்ணில் தெரிகிறார்கள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-24

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | ■ |
| | 3 | | | ■ | | 4 |
| | | ■ | 5 | 6 | | |
| 7 | | ■ | 8 | | | |
| ■ | | ■ | | | ■ | |
| 9 | | | | ■ | 10 | ■ |
| | ■ | 11 | | | | ■ |

### இடமிருந்து வலம்

1. மர்மக் கதைகளில் இது இருக்க வேண்டும்.
3. வீசினால் நாசம்தான்.
5. பெரிய மிருகத்தின் பெறுமதியான பொருள். (குழம்பியுள்ளது)
7. பிறக்கும் போது இதனுடன் பிறப்பதில்லை.
9. இட்லிக்குச் சுவையூட்டும்.
11. அழிவு ஆயுதங்களில் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. இதுவும் மருந்தும் மூன்று நாளுக்கு.
2. உடலுக்குத் தேவைதான்.
3. இதைச் செய்தால் சொர்க்கத்திற்குப் போகலாம் என்று சொல்லுவார்கள்.
4. பொய்கள் சிறகணிந்து கொண்டு திரியும் நிலை. (தலைகீழ உள்ளது)
6. நக்கீரனிடம் மாட்டியவர்.
8. தாக்கத்தில் ஒரு வகை.
9. தோட்டத்திலும் இருக்கும்.
10. கலைமகளின் கையில் இருப்பது.

இதற்குரிய சரியான விடைய்யைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 20.11.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-24
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

## நடந்த கதை

# வங்கிக்கொள்ளையரை வலையில் மாட்டியவர்!




பாரிஸ் மாநகரில் ஒரு வங்கி. காசாளரிடம் வந்த ஒருவர் முதலில் கையை நீட்டினார். பின்னர் மறுகையில் இருந்த பிஸ்டலை நீட்டினார்.

காசாளர் பயந்துபோனார்.

என்றாலும் காசாளர் புத்திசாலியாக இருந்தார்.

கைக்கெட்டிய தூரத்தில் இருந்த இரகசிய எச்சரிக்கை மணிக்குரிய பொத்தானை அவனுக்குத் தெரியாமல் ஒரு அழுத்தல். உரிய இடத்திற்கு அபாய அறிவிப்பு போய்ச் சேர்ந்துவிட்டது.

வந்தவனோடு பேச்சுக்கொடுத்து சற்றுநேரம் தாமதித்தால் போதும். பொலிஸ் வந்துவிடும்.

காசாளர் நேரத்தை இழுத்தடிக்க நினைத்து பிஸ்டலை நீட்டியவனிடம் "என்ன வேண்டும்" என்று கேட்டார்.

"ப..ப.....ண..த்...தை..எடு...எ...டு" என்று இழுத்தான் வந்தவன். வந்திருப்பவன் ஒரு திக்குவாய்க்காரன் என்று காசாளர் தெரிந்துகொண்டார்.

அவனோடு கதைத்துக்கொண்டே அவன் கொடுத்த பையில் பணக்கட்டுக்களை எடுத்துவைத்துக் கொண்டிருந்தார் காசாளர்.

பின்னர் பணக்கட்டோடு பையைக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்டு திரும்பிய கொள்ளைக்காரன் திகைத்துப் போனான்.

அவனைச் சுற்றி மூன்று பொலிஸ் காரர்கள் நின்றார்கள்.

மௌலி ஹென்றி என்னும் 23 வயதான அந்தக் கொள்ளையன் வசமாகச் சிக்கிக் கொண்டான். திக்குவாய்க்காரனராக இருந்ததால் காசாளர் கேட்ட கேள்விகளுக்கு பதில் சொல்லி உத்தரவு போடவே குறிப்பிட்ட நேரம் போதவில்லை.

பெண்காசாளர் புத்திசாலித்தனமாய் நடந்து திக்குவாய்க்காரனை மேலும் தாமதிக்க வைத்ததால் வசமாய் சிக்கிக் கொண்டான்.

இப்போது தண்டனையை எதிர் பார்த்துக் காத்திருக்கிறான்.

## சிந்தியா பதில்கள்

### மனிதனின் முதலாவது வெற்றி எது?

சிந்தியா! இல்லத் தூய்மையை விட எது உயர்ந்தது?
எஸ்.பிரதாப் சந்திரன்-உடபுஸலாவ.

உள்ளத்தூய்மை. ஆனால் இல்லத் தூய்மையும் தேவைதான்.

•

இலங்கை அரசு அதிகமாக ஆயுதங்களை கொள்வனவு செய்வதைப் பார்க்கும் போது...?
சுரேஷ் விஸ்வநாதன்-நீர்கொழும்பு.

பேச்சுகளுக்கான சாதகங்கள் இல்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

•

மீண்டும் இந்தப் பூவுலகில் புத்தர்-இயேசு, காந்தி பிறந்தால் எப்படியிருக்கும்?
எ.இராமகிருஷ்ணன்-பூனாகலை.

விடமாட்டார்கள்.

•

ஒரு மனிதனுக்கு முதலாவது சிறந்த வெற்றி எது?
வி.பி.சிவா-தலவாக்கலை.

அவனை நேசிக்கின்ற, நேசிக்கப்படுகின்ற சுற்றம் கிடைப்பது.

•

உங்களுக்கு யாருடைய பேச்சு இனிக்கும்?
நமீமா ஸஜ்ஜாத்-அளுத்கம

உள்ளத்தில் நஞ்சும், உதட்டிலே இனிப்பும் இல்லாதவர்களின் பேச்சு.

•

சில பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க என்ன வழி?
கே.பிரதீபன்-கந்தப்பளை.

கல்விஅமைச்சு கண்திறக்க வேண்டும்.

•

திடீரென ஏற்படும் கோபத்தை அடக்க வழிகள் இருந்தால் கூறுங்களேன்!
க.மதிசீலன்-களுவாஞ்சிக்குடி.

நானும் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்.

•

ஜனாதிபதி பிரபாகரனுடன் பேச்சு நடத்த விரும்புவதுபோல் பிரபாகரனும் விரும்பினால் நாட்டில் அமைதி ஏற்படுமா?
எஸ்.சோமன் ஜேக்கப்-இறக்குவானை.

சொல்கிறார்கள் பேச்சு நடத்தலாம் என்று. ஆனால் உளப்பூர்வமாக விரும்பினால்தான் உண்டு. அது நடக்குமா என்பதே பிரச்சனை.

•

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பற்றி உங்கள் நினைப்பு?
செல்வி சில்மியா நிசார்-குருநாகல்.

விவேகமானவர். விசயம் தெரிந்தவர். வளர்ந்தும் வருபவர்.

•

ஹலோ சிந்தியா நீர் என்னைவிட புத்திசாலியா?
ஏ.எம்.இப்திகார்-புத்தளம்.

இல்லை ஐயா இல்லை.

•

முழுக்க முழுக்க கல்லூரி மாணவர்களையே வைத்து ஒரு பத்திரிகை நடத்தினால் எப்படி இருக்கும்?
எச்.எம். அம்ஹர்-கொழும்பு-11

மோசமாக இருக்காது. முயன்று பாருங்கள் அம்ஹர்.

•

பெண்ணுக்கு ஆண் துணை பாரமா?
எஸ். சாரதா-புத்தளம்.

பூவுக்கு வண்டு பாரமா சாரதா?

•

அன்பு புனிதமானதாக இருக்க எது தடையாக இருக்கக் கூடாது?
ஆ. சஞ்ஜீவன் மட்டக்களப்பு.

அன்பு கொண்ட நெஞ்சங்கள் இடையே பொய் என்ற திரை விழக்கூடாது. அதுதான் தடையாகிவிடும்.

•

உலகில் காதலா நட்பா பெரியது?
ஆ. கீதா - புத்தளம்.

இரண்டிலும் காதல் உண்டு. காதல் என்றால் அன்பு என்றும் அர்த்தம்.

•

தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபடும் சாத்தியம் இருக்கிறதா?
வி. மனோகரன் - மூதூர்.

அப்படி ஒரு சாத்தியம் ஏற்பட்டால் அது ஆச்சரியம்தான்.

•

தமிழினத்தின் தலையெழுத்து எப்படியிருக்கிறது?
எம். திவாகரன்- திருகோணமலை.

ஆயுதக் கரங்களால் கோணல்மாணலாகிக் கொண்டிருக்கிறது.

•

முத்தத்தில் வெளிப்படுவது காதலா- காமமா- அன்பா?
என். பஉத்தீன்-கின்னியா.

முத்தத்தில் பல அர்த்தங்கள் உண்டு. சூழலைப் பொறுத்து அர்த்தம் விளங்கும்.

•

தினமுரசு ஆசிரியரின் பெயரை ஏன் வெளியிடுவதில்லை?
ஆர். தம்பிராசா - கொழும்பு 6.

சொல்லும் கருத்துக்களைவிட சொல்பவர்களின் பெயரையே பெரிதாகப் போடும் காலத்தில், கருத்துக்கள் பரப்புவதாக சொல்லியபடி தமது பெயர்களை வளர்த்துக் கொள்ளும் நபர்களால் நல்ல கருத்துக்களும் நாசமாகிவிடுகின்றன. அதனால் அந்தச் சகதியில் இறங்க விருப்பமில்லையாக்கும்.

•

## குறுக்கெழுத்துப் போட்டி இல-22க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தூ | ண் | டி | ல் | ■ | 2 ந | 3 கை |
| 4 து | ம் | பி | ■ | 5 மா | தி | க் |
| வ | 6 ப | கை | யா | ளி | ■ | க |
| ர் | தி | 7 க | ■ | கை | 8 த | டி |
| ■ | 9 வா | த் | து | ■ | ரா | கா |
| ம் | ர | தி | 10 மோ | ■ | சு | ர |
| ■ | ம் | ■ | 11 பா | ரி | ■ | ம் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.22இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. மு.மீ. மவ்ஜூத் முள்ளியாவளை.
2. அஞ்சனா ரவீந்திரராசா கொழும்பு-06.
3. எஸ்.ஜே. அஜிமீர் மொரட்டுவை.
4. இ. சுந்தரலிங்கம் கொழும்பு-11.
5. பாத்திமா பசீலா நாவலப்பிட்டி.
6. பி. செந்தூரன் சிலாபம்.
7. எம்.ஐ.ஏ. ஹலீம் புத்தளம்.
8. ஜே. அன்ரனி நீர்கொழும்பு.
9. எஸ். நளாயினி திருகோணமலை.
10. சி. செந்தில் களுவாஞ்சிக்குடி.

இந்த அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா50/= வழங்கப்படும்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஆன்மீகம்

## அழிவு தந்த குணம்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் அரக்கனும் இருக்கிறான். தேவனும் இருக்கிறான். அரக்க குணம் அழிவைத் தேடித்தருகிறது. தேவ குணம் வாழ்வை வளப்படுத்துகிறது.

தெய்வாம்சமான முனிவர் விஸ்வரஸுக்கும் அரக்கர் குல மங்கை கைகசிக்கும் பிறந்தவனே இராவணன். தெய்வபக்தி முதலிய நல்லியல்புகள் இராவணனிடம் உண்டு. அதலால் உயர்ந்தான். இராவணேஸ்வரன் ஆனான். அதன் பிறகு அரக்க குணம் தலையெடுத்தது.



தேவ, வருண, கந்தர்வ உலகங்களுக்கெல்லாம் படையெடுத்துச் சென்றான். அங்கு கண்ணில் பட்ட கன்னிப் பெண்களை கல்யாணமானவர்களை எல்லாம் கைப்பற்றினான். அவர்களைக் காக்க வந்த உறவினர்களை எல்லாம்கொன்றான். எல்லோரையும் பலாத்காரமாகத் தன் விமானத்தில் ஏற்றி வந்தான். நதிகளின் நீரால் கடல் நிரம்புவது போன்று அப்பெண்களின் கண்ணீர் விமானத்தை நிறைத்தது. அவர்கள் தாய், தந்தை, கணவர், குழந்தை என்று தாங்கள் பிரிந்தவர்களை எண்ணிக்கதறினார்கள். 'ஒரு பெண்ணால் தான் இவனுக்கு மரணம் ஏற்பட வேண்டும்!' என்று சபித்தார்கள்.

விமானம் இலங்கை வந்தது. அரக்கர் ஜயகோஷம் போட தன் மாளிகைக்கு வந்தான் இராவணன். அவன் தங்கை சூர்ப்பனகை ஓடி வந்து அவன் காலில் விழுந்தாள். "காலகேயருடன் போர் செய்யும் போது என் கணவரையும் கொன்று விட்டீர்களே", என்றாள்.

"போர் வெறியில் நடந்து போன தவறிது. போரில் கவரப்பட்டவனாய் அறியாமல் இந்த அநியாயத்தைச் செய்து விட்டேன்," என்று இராவணனும் வருந்தினான்.

விபீஷணன், கவர்ந்து வரப்பட்ட அந்தப் பாவையரைக்கண்டு தானும் கலங்கினான். இராவணனிடம் வந்து, "அண்ணா! தாங்கள் பந்துக்களைக் கொன்றும், அவர்களிடமிருந்து பிரித்தும் பலபெண்களைக் கதறக்கதறக் கொண்டு வந்தீர்கள். பலம் இருக்கிறது என்ற காரணத்தால் இந்த அக்கிரமங்களைச் செய்யத் துணிந்த தாங்கள் பகவான் இருக்கிறார் என்பதை மறந்து விட்டீர்கள். இப்போது, கூடப்பிறந்த தங்கை கணவனை இழந்து கைம்பெண்ணாகிக் கலங்கி நிற்கிறாள். நம் சிற்றன்னையின் மகள் கும்பீநசியை யாருமில்லாத தருணத்தில் மது என்ற அரக்கன் கவர்ந்து போய்விட்டான். இராவணன் தங்கையை அடுத்தவன் கவர்ந்தான் என்ற அவமானம் ஏற்பட்டு விட்டது." என்றான்.

பிறபெண்களைக் கதறக் கதறக் கொடுஞ்செயல் செய்தான். பலன் அந்தக் கண்ணீர் காய்வதற்கு முன் அவன் தங்கை கதறிக் கண்ணீர் வடித்தாள்.

பிற பெண்களைக் கவர்ந்து வந்தான். அவன் தங்கையை அடுத்தவன் கவர்ந்து போனான்.

பிறருக்குத் தீங்கு செய்ய நினைத்தால் அது செய்தவனை சுவற்றில் எறிந்த பந்தாகத் திரும்பித் தாக்கும்.

பெண்களின் கண்ணீர் சாபத்தால் இறுதியில் இராமர் மூலம் அழிந்தான் இராவணன்.

பிரகலாதன்
கண்டி.

## நபிகள் நாயகத்தின் மணி மொழிகள்

- பொறாமையை விட்டும் விலகிக் கொள்ளுங்கள். ஏனென்றால் நெருப்பு விறகைத் தின்பதைப் போல் பொறாமை உங்களுடைய நல்ல செயல்களின் நன்மையைத் தின்றுவிடும்.
- நிச்சயமாக ஒருவன் தன் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தைப் போதிப்பதானது ஒரு மரக்கால் தானியம் தர்மம் செய்வதை விடச்சிறந்தது.
- மீசையைக் கத்தரியுங்கள்; தாடியை வளருங்கள்.
- நிச்சயமாக சுவர்க்கம் உங்களது தாயின் பாதத்தின் கீழே உள்ளது.
- தந்தையின் மகிழ்ச்சியில் அல்லாஹ்வின் மகிழ்ச்சி தங்கியுள்ளது.
- அல்லாஹ்விற்குப் பயந்து கொள்ளுங்கள். இன்னும் தனக்கு நெருக்கமானவர்களை ஆதரியுங்கள்.
- நெருப்பைத் தண்ணீர் அழிப்பது போல் பாவங்களை தர்மம் அழித்துவிடும்.
- சீனா தேசம் சென்றாயினும், சீர் கல்வியைத் தேடிக்கொள்.
- உமக்கு மோசடி (அநியாயம்) புரிவோருக்கு மோசடி செய்யாதீர்.
- தீயோருடன் இருப்பதை விட தனித்திருப்பதுமேலானது. தனித்திருப்பதை விட நல்லவர்களுடன் சேர்ந்திருப்பது மிகவும் மேலானது.
- அண்டை வீட்டார் அனுப்பி வைக்கும் அன்பளிப்புப் பொருட்களை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்.
- தனது வயது அதிகரிக்கும் போது நற்செயல்களையும் அதிகரிக்கச் செய்பவனே மக்களில் மேலானவனாவான்.

தொகுப்பு: மசூத் அஹமத்-காத்தான்குடி-03.

## தன்னைத் தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான்

உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தான் என்ற ஈகோ இருக்கிறது. தான் மட்டுமே உயர்ந்தவன். பிறரெல்லாம் தாழ்ந்த வர்கள் என்ற எண்ணம் கொண்டி ருக்கிறான்.

ஆனால் கிறிஸ்தவம், "தன்னைத் தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப் படுவான்." (லூக்கா 14-11) என்கிறது.

இயேசு கிறிஸ்து இதனை ஒரு அழகான உவமை மூலம் விளக்கு கிறார். "ஒருவனால் கல்யாணத் திற்கு நீ அழைக்கப்பட்டிருக்கும் போது, பந்தியில் முதன்மையான இடத்தில் நீ உட்காராதே. உன்னிலும் கனமுள்ளவன் ஒருவேளை அவனால் அழைக்கப் பட்டிருக்கலாம். அப்போது உன்னையும், அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில் வந்து, இவனுக்கு இடம் கொடு, என்பான். அப்போது நீ வெட்கத்தோடு தாழ்ந்த இடத் திற்குப் போக வேண்டியதாயிருக்கும். நீ அழைக்கப்பட்டிருக்கும் போது தாழ்ந்த இடத்தில் உட்கார். அப்போது உன்னை அழைத்தவன் வந்து, சிநேகிதனே! உயர்ந்த இடத்தில் வாரும் என்று சொல்லும் போது, உன்கூடப் பந்தி இருந்த வர்களுக்கு முன்பாக உனக்கும் கனம் உண்டாகும்," என்கிறார்.

ஆனால் இயேசு கிறிஸ்து தன்னை மரணத்திற்கு `ஒப்புக் கொடுக்கப் போவதை உணர்ந்த அவரது சீடர்களால் கூட அவரது வார்த்தை களைப் பின்பற்ற முடியவில்லை.

தங்களில் யார் பெரியவன் என்கிற வாக்குவாதம் அவர்களுக் கிடையே உண்டாயிற்று. இதை அறிந்த இயேசுகிறிஸ்து தனது சீடர்களுக்காக மனஸ்தாபப்பட்டார். அவர்களது இருதய சிந்தனையை உணர்ந்து ஒரு சிறு பிள்ளையை அழைத்து, தமதருகே நிறுத்தி, அவர்களை நோக்கி, "இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தின் நிமித்தம் ஏற்றுக் கொள்கிறவன்' என்னை ஏற்றுக் கொள்கிறான். என்னை ஏற்றுக் கொள்கிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்கிறான். உங்கள் எல்லோருக் குள்ளும் எவன் சிறியவனாய் இருக்கிறானோ அவனே பெரியவனாய் இருப்பான்." என்றார்.

ஆக, மனிதன் தன்னை உயர்த்தும்போது தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்தும்போது உயர்த்தப்படுவான்.

ஜி.டானியல்-நீர்கொழும்பு.

## கப்டனாக சச்சின்!

இந்தியாவில் நடைபெறும் ரஞ்சி கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் அங்குள்ள பல்வேறு மாநில அணிகள் மத்தியில் பலத்த போட்டி நிலவும்.

பம்பாய் அணிக்குக் கப்டனாக சச்சின் டெண்டுல்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியில் விளையாடும் பல வீரர்கள் பம்பாயைச் சேர்ந்தவர்கள்.

ரவி சாஸ்திரி, சஞ்சய் மஞ்ரேக்கர், வினோத் காம்ளி ஆகியோரைக் கொண்ட பம்பாய் அணிக்கே சச்சின் டெண்டுல்கர் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.



## தவறு தவறுதான்!

சென்ற முறை முரசின் ஸ்போர்ட்ஸ் பகுதியில் மஜிக் ஜோன்சன் குழுவினரும், இஸ்ரேலிய நாடாளுமன்றக் குழுவினரும் றக்பி விளையாட்டில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அது தவறு.

கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஈடுபட்டனர் என்பதே சரியானது.

# ஸ்போர்ட்ஸ்

## சென்றுவா மார்ட்டினா! வென்றுவா மோனிகா!!

பெண்கள் டென்னிஸில் எத்தனையோ சாம்பியன்கள் வந்தார்கள். போனார்கள்.

ஆனால், எக்காலத்திலும் நிலைத்திருக்கும் ஆட்டக்காரராக விளங்கியவர் மார்ட்டினா நவரத்திலோவா.

இளம் வயதில் ஆரம்பித்து இன்று வயதானபோதும் தன் கடின உழைப்பால் புகழைக் காத்துவருகிறவர் மார்ட்டினா.

விம்பிள்டன் பெண்கள் ஒற்றையர் சாம்பியனாக 9 முறையும், இரட்டையர் பட்டைத்தை 7 முறையும், கலப்பு இரட்டையர் பட்டத்தை ஒரு முறையும் வென்று டென்னிஸ் வரலாற்றில் முத்திரைபதித்த வித்தைக்காரி மார்ட்டினா.

மார்ட்டினா என்றால் பிரிட்டன் மக்கள் பேரன்பு செலுத்துகிறார்கள்.

1973ம் ஆண்டு விம்பிள்டன் போட்டியில் முதன் முதலாக பங்கேற்றார் மார்ட்டினா.

எனினும் வெற்றி உடனே கிடைத்து விடவில்லை.

1978ம் ஆண்டுதான் விம்பிள்டன் சாம்பியனாகி வெற்றிபெற முடிந்தது.

அப்போதுதான் மார்ட்டினாவின் வெற்றிக் கணக்கு ஆரம்பமானது.



மார்ட்டினா

இன்று மார்ட்டினாவுக்கு 36 வயது. இப்போதும் பழைய வேகம். அதே வலிமை.

என்றாலும் 1990ம் ஆண்டுக்கு பின்னர் மார்ட்டினாவால் குறிப்பிடும்படியான வெற்றிகளை குவிக்க முடியவில்லை.

சமீபத்தில் நடைபெற்ற விம்பிள்டன் சாம்பியன் போட்டியிலும் தோற்றுவிட்டார்.

செக்கோஸ்லோவாக்கியாவில் பிறந்த மார்ட்டினா 1975ம் ஆண்டு முதல் அமெரிக்காவில் குடியேறி அமெரிக்க பிரஜையாகவே மாறிக்கொண்டார்.

விளையாட்டில் வெற்றி தோல்விகள் சகஜம். ஆனாலும் மார்ட்டினாவின் அடுத்த தலைமுறை ஆட்டக்காரர்களான ஸ்டெபி கிராப், மோனிகா செலஸ், சபாடினி போன்றவர்கள் முன்னுக்கு வந்துகொண்டிருக் கிறார்கள்.

இந்த நிலையில் மார்ட்டினா ஒதுங்கிக் கொள்வதே மரியாதை என்று அவரது நண்பர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

20 ஆண்டுகால டென்னிஸ் வாழ்க்கை மார்ட்டினாவுக்கு சலிப்பை ஏற்படுத்தியே இருக்கும்.

சாதாரண வாழ்க்கையைத் தான் மேற்கொள்ளப்போவதாக மார்ட்டினா கூறியிருக்கிறார்.

இளம் வீராங்கனைகளுக்கு பயிற்சியளிக்கவும் நினைத்துள்ளார்.

மார்ட்டினா 9 முறை விம்பிள்டன் சாம்பியனாக வந்தது ஒரு சாதனைதான்.

அந்தச் சாதனையை எதிர்காலத்தில் ஸ்டெபிகிராப் முறியடிக்கக்கூடும்.

எற்கனவே ஸ்டெபி 5 முறை விம்பிள்டன் சாம்பியனாக வந்துள்ளார்.

தனது சாதனை பற்றி மார்ட்டினா பெருமைப்படும்போதும், "அந்தச் சாதனை முறியடிக்கப்பட முடியாதது அல்ல." என்று வெளிப்படையாக சொல்லுகிறார்.

மார்ட்டினா எதிலும் வெளிப்படையானவர்தான்.

மார்ட்டினா ஒரு ஆணைத் திருமணம் செய்யாமல் பெண்களுடன் தவறான தொடர்புகளை வைத்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

ஜூடி நெல்சன் என்ற பெண்ணுடன் மார்ட்டினா உறவு வைத்திருந்தார்.

இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்ட போது ஜூடி என்ற பெண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். மார்ட்டினா தனக்கு பணம் தரவேண்டும் என்றுகோரினார்.

அனால் மார்ட்டினா வெட்கப்படவில்லை. தனக்கும் ஜூடிக்கும் இடையே உள்ள உறவை பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். "இது எனது தனிப்பட்ட விசயம்" என்று சொன்னார்.



### மார்ட்டினாவின் தனிப்பட்டவாழ்க்கை சர்ச்சைக்குள்ளானது

அத்தோடு அந்த விசயம் மறைந்து போனது. மார்ட்டினாவின் டென்னிஸ் திறமைக்கு முன்னால் அவரது சொந்த விவகாரம் பெரிதுபடுத்தப்பட முடியாமல் அமுங்கிவிட்டது.

புகழோடு அரங்கை விட்டு ஓய்வு பெறுவது சரியான தருணத்தில் எடுக்கப்படும் சரியான முடிவு என்று மார்ட்டினாவின் இரசிகர்கள் கூறுகிறார்கள்.

■

மார்ட்டினா ஓய்வு பெற்று விலகிச் செல்லும் டென்னிஸ் களத்திற்கு விரைந்து வருகிறார். மோனிகா செலஸ்.

என்று மீண்டும் வருவார் என்று காத்துக்கிடந்த டென்னிஸ் இரசிகர்களுக்கு இனிப்பான செய்திதான்.

கடந்த ஏப்ரல் மாதம் 3ம் திகதி ஸ்டெபி கிராப்பின் இரசிகர் ஒருவரால் கத்தியால் குத்தப்பட்டு இதுவரை ஓய்வு பெற்று வந்த மோனிகா இப்போது தேறிவிட்டார்.

ஆறுமாதங்கள் ஆடாமல் இருந்தார்.

டென்னிஸ் உலகில் 'நம்பர்1' நிலையில் இருந்த மோனிகா கடந்த விம்பிள்டன் சாம்பியன் போட்டியில் கலந்துகொள்ள முடியவில்லை.

அதனால் 'நம்பர் 1' என்ற இடத்தை ஸ்டெபி கிராப் கைப்பற்றிக்கொண்டார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் மீண்டும் களம்காணப் போகிறார் மோனிகா.

அடுத்த ஆண்டு ஜனவரியில் அவுஸ்திரேலியா ஓபன் டென்னிஸ் போட்டியில் மோனிகா பங்கேற்பார் என்று தெரிகிறது.

மோனிகாவை கத்தியால் குத்திய நபரை நீதிமன்றம் விடுதலை செய்துவிட்டது.

"ஸ்டெபிகிராப் மோனிகாவிடம் தோல்வி அடைவதை என்னால் தாங்கமுடியாது. அதுதான் மோனிகாவை குத்தினேன்" என்று அவன் வாக்குமூலம் கொடுத்திருந்தான்.

பார்சி என்ற அந்த நபர் ஸ்டெபிகிராப் மீது பைத்தியமாக இருந்தான்.

அவனது அறை முழுவதும் ஸ்டெபிகிராப்பின் படங்கள்தான்.

ஸ்டெபிக்கு அடிக்கடி காதல் கடிதம் போடுவான். கோடீஸ்வர வீராங்கணையான ஸ்டெபிக்கு அவன் அடிக்கடி பணம் அனுப்பி நகைகள் வாங்குமாறு எழுதுவான்.

"ஸ்டெபி எனது கனவுக்கன்னி. எனது உயிருக்கும் மேலாக நேசிக்கிறேன். அவளது கண்கள் ஜொலிக்கும் நட்சத்திரங்கள். அவளது காற்றில் அலையும் கூந்தல் பட்டுப் போன்றது." என்கிறான் பார்சி.

அதுமட்டுமல்ல நீதிமன்றத்தில் நீதிபதி ஸ்டெபி என்ற பெயரைச் சொல்லும் போதுகூட பார்சி குறிக்கிட்டான்.

"ஏன் ஸ்டெபி என்று அழைக்கிறீர்கள். எல்லோரும் செல்லமாக அழைப்பதுபோல 'ஸ்டெப்பானி' என்று அழையுங்கள்." என்று என்பான் பார்சி. அத்தனை பிரியம்.

வழக்கை விசாரித்த நீதிபதி பார்சிக்கு 2ஆண்டு தண்டனை விதித்தார். எனினும் பார்சி மனோநிலையில் பாதிக்கப்பட்டவன் என்பதால் தண்டனைக் காலத்தை சிறையில் கழிக்க வேண்டியதில்லை. வெளியே கழிக்கலாம். பொலிசார் அவனை கண்காணிப்பார்கள் என்று தீர்ப்புக் கூறியுள்ளார்.

தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்போவதாக மோனிக்காவின் சட்டத்தரணி கூறியுள்ளார்.

"ஒரு குற்றவாளி தண்டனை இல்லாமல் விடுவிக்கப் படுவது முறையல்ல." என்று மோனிகா காட்டமான அறிக்கை விடுத்திருந்தார்.



ஸ்டெபி

"அவள் கண்கள் ஜொலிக்கும் நட்சத்திரங்கள்" -பார்சி-

எப்படியோ மோனிகா மீண்டும் கோடையிடியாக களத்தில் குதிக்க பயிற்சியில் இறங்கிவிட்டார். ■

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

எழிலூட்டும் ... யான தயாரிப்புக்கள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.
அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு—11.
தொலைபேசி: 438831

வாரமலர் தினமுரசு

... செய்திகளில்
பக்கச்சார்பின்மை
உரத்த
நியாயங்களை
எடுத்துச் சொல்ல
தயங்காமை!
இவ்வழியே
முரசின் வழி!

25

வசந்தமான தீபாவளி வாழ்த்துக்கள்

## சறுக்கு விளையாட்டில் சாதனை ராணி!



## நடிக்க வாங்கும் ஊதியம்? 40 கோடி!



படத்தில இருக்கிறான் பாருங்கள்
பொடிப் பயல். படு கில்லாடி.
கடுகு சிறிது, காரம் பெரிது. இந்த
சின்னத்தம்பி ஒரு நடிகன். ஹொலிவூட்
ஆங்கிலத் திரைப்படங்களில் நம்பிக்கை நட்சத்திரம்.
சமீபத்தில வந்த ஆங்கிலப்படங்களில் மாபெரும்
வெற்றிகண்டு பணம் வைக்க எங்கே இடம் என்று தேடுமளவுக்கு
வசூல் குவித்த படங்கள் இரண்டு. ஒன்று-ஹோம் அலோன். இரண்டு- ஹோம் அலோன்
பாகம் இரண்டு.
இரண்டு படங்களதும் மொத்த வசூல் 373 மில்லியன் டொலர்கள்! வாவ்!
வசூலுக்கு காரணம் இந்த 12 வயது சின்னத்தம்பி. பெயர்- காலேகல்கின்.
இவன் முதலில் நடித்த படம் அங்கிள் பக். அதற்கு கிடைத்த ஊதியம் 2 இலட்சத்து 50 ஆயிரம்
டொலர்கள்.
இப்போது இவன் வாங்கும் ஊதியம் 8 மில்லியன் டொலர்கள். சதவீதமாய் 40 கோடி ரூபாய்கள்.
என்ன தலை சுற்றுகிறதா? சுற்றும் தான். கொடுத்து வைத்த அட்டப் பையன்.

## இரு சக்கரங்களில் ஒரு சாதனை!



இத்தரை தொன் எடையுள்ள 4 சக்கரப் பார வண்டியினை இரு சக்கரங்களில் மட்டும் ஓட்டிச் செல்லும் சாதனையினை சுவீடனைச் சேர்ந்த ஸ்வென் எறிக் செனட்ராமன் நிலைநாட்டினார். 9 1/2 கிலோ மீட்டர் (5.90 மைல்) தூரம் வரை இந்த வண்டியினை இரு சக்கரங்களில் மட்டுமே ஓட்டிச் சென்றார். 1990ம் ஆண்டு நவம்பர் 10ம் திகதி சுவீடன், டெல்கார்லியா நகர் மோரா சில்ஜான் விமான நிலையத்தில் இந்தச் சாதனை நிகழ்ந்தது.

இந்தத் தூரத்தை செனட்ராமன் ஆக 31 நிமிடங்களில் ஓடி முடித்துள்ளார். கின்னஸ் புத்தகத்தில் பொறிக்கப்பட்ட சாதனை இது.

## நீராவி எஞ்சின் நிகழ்த்திய சாதனை!




'மல்லாட்' என்ற ரெயில் எஞ்சின் தான் உலகிலேயே அதிவேகமாக ஓடிய நீராவி ரயில் எஞ்சின் என்ற சாதனைக்குரியதாகும். 1938 ஜூலை 3ல் இந்தரயில் மணிக்கு 202.8 கிலோ மீட்டர் (126 மைல்) வேகத்தில் ஓடியிருக்கிறது. இதனால் இந்த எஞ்சினின் சில பகுதிகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சேதங்கள் யாவும் திருத்தி அமைக்கப்பட்டு யோர்க்கிலுள்ள தேசிய ரயில்வே நூதனசாலையில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.
ஆடி அடங்கும் வாழ்க்கைடா என்பது நீராவி எஞ்சினுக்கும் பொருந்தும்.

அசத்தலான அம்சங்களோடு 26 தயாராகிறது முரசு உங்கள் முத்துங்கள் பிரதிக்கு



## சின்னத்தங்கையின் உலக சாதனை!

12 வயது சின்னத்தம்பியின் சாதனை ஊதியம் வாங்குவதில்.
இந்த 14 வயது சின்னத் தங்கையின் சாதனை
உடல் வளைப்பில்.
1987 ஒக்டோபர் 25ம் திகதி வளைந்து சாகசம்
செய்யும் போட்டி நடந்தது.
அந்தப்போட்டியில் இந்த சின்னத்தங்கை
தோப்ரே முதல் பரிசை வென்றுவிட்டாள்.
அதன்மூலம் கின்னஸ்டிக் போட்டியில்
குறைந்த வயதில் விருது பெற்று
உலக சாதனை படைத்து விட்டாள்.



## வலிமையே வாளாக!

வலிமையோடு இருக்கிறோம் என்பதே மனதில் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்திவிடும். உடல் ஆரோக்கியம் என்பது சுகாதாரம் சம்பந்தப்பட்ட விசயம் மட்டுமில்லை. உள்ளத்தில் சுறுசுறுப்பும், சோர்வற்ற உழைப்புக்கும் உடல் ஒத்துழைக்க வேண்டும். உடலை அழகுபடுத்துவதும் ஒரு கலைதான்.

அருகில் சாய்ந்திருக்கிறார் பாருங்கள் உலக ஆணழகன். இந்த உடலை இப்படி உருண்டு திரண்ட வடிவமாக்க எத்தனை காலம் பயிற்சி செய்திருப்பார். விடாமுயற்சியால் வளர்ந்த உடல்.

இப்படித்தான் உடம்பு இருக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல.

ஆனால் பயிற்சிகள் மூலம் உடலை உறுதிப்படுத்துவதும், தயார் நிலையில் வைத்திருப்பதும் முக்கியம்.

அது அழகும் தரும். எதிர்நீச்சல் போடும் வலுவும் தரும்.

ஆகவே எல்லோரும் தினசரி பயிற்சி செய்வீர்.



இப்பத்திரிகை கொழும்பு ... 25, ... நவம்பர் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.